# வைகறை வெளிச்சம்

விலை ரூ.20/-

ஆசிரியர் மு. குலாம் முஹம்மது

Volume - 12 Issue - 12 டிசம்பர் 2019 - ரபீஉல் ஆக்கிர் - ஜமாத்துல் அவ்வல் 1441





## குளச்சல் போரும் சமூக ஒற்றுமையும்

بسم الله الرحمن الرحيم

மனிதர்களே! உங்கள் இறைவனுக்குப் பயந்து நடந்து கொள்ளுங்கள், அவன் உங்கள் யாவரையும் ஒரே ஆத்மாவிலிருந்து படைத்தான், அவரிலிருந்தே அவர் மனைவியையும் படைத்தான்; பின்னர் இவ்விருவரிலிருந்து, அநேக ஆண்களையும் பெண்களையும் (வெளிப்படுத்தி உலகில்) பரவச் செய்தான்; ஆகவே, அல்லாஹ்வுக்கே பயந்து கொள்ளுங்கள்; அவனைக் கொண்டே நீங்கள் ஒருவருக் கொருவர் (தமக்குரிய உரிமைகளைக்) கேட்டுக் கொள்கிறீர்கள்; மேலும் (உங்கள்) இரத்தக் கலப்புடைய உறவினர் களையும் (ஆதரியுங்கள்) - நிச்சயமாக அல்லாஹ் உங்கள் மீது கண்காணிப்பவனாகவே இருக்கின்றான்.

அல்குர்ஆன்: 4:1


04 உச்ச நீதிமன்றம் எங்களுடையதே — கவர் ஸ்டோரி

20 இஸ்ரேலிய மென்பொருளின் வழி உளவுப் பார்க்கப்பட்ட வாட்ஸ்ஆப்

22 ஆணவப் படுகொலைகள் - அன்றும், இன்றும் தொடரும் தீண்டாமை

36 சிலுவைப் போர் 2.0

42 கஷ்மீர் விவகாரத்தில் இண்டர்நேஷனல் பிசினஸ் புரோக்கர்

44 தொடரும் NIA வின் மிரட்டல்கள் - கள ஆய்வு

51 தமிழ்நாடு தினம்

57 முதல் சிலுவைப் போர் வெற்றி வீரர் சுல்தான் நூருத்தீன் ஸங்கி(ரஹ்)

62 மகளிர் மன்றம்



# வைகறை வெளிச்சம்

டிசம்பர் 2019 - ரபீஉல் அவ்வல்-ஜமாத்துல் அவ்வல் 1441

ஆசிரியர்

மு.குலாம் முஹம்மது,M.A., Journalism & Communication

துணை ஆசிரியர்

கே.எம்.இல்யாஸ் ரியாஜி,M.A.,

All disputes arising out of any publications in this monthly will come under the jurisdiction of chennai courts Only

http:/www.facebook.com/vaigaraivelicham

தனி இதழ்: ரூ.20.

ஆண்டுச் சந்தா

உள் நாடு: ரூ.240.

வெளி நாடு: ரூ.3000.

பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர் DARUL ISLAM FOUNDATION TRUST என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.



VAIGARAI VELICHAM
52/1, Mannady Street, Room# 07, Mannady, Chennai - 600001.
+91 81481 29887 | Email: darultrust@yahoo.com |
Web: www.darultrust.in

கவர் ஸ்டோரி



# உச்ச நீதிமன்றம்

## என்று கூறிய பிரபல

## இன்று அது உ

இந்தியாவில் நிர்வாக படித்தரங்களைப் போல நீதிக்கும் படித்தரங்கள் இருக்கிறது. அது, உள்ளூர் கிராம நிர்வாக அலுவலர், காவல்துறை, நீதிமன்றங்கள் என நீள்கிறது. இவற்றில் இறுதிக்கட்டமாக இந்தியாவின் நீதியை நிலை நிறுத்தும் இடத்தில் அமைந்திருப்பது நீதிமன்றங்கள்.

காவல்துறையினரோ, அரசு நிர்வாக அமைப்பினரோ, அரசியல் தலைவர்களோ அநீதிகளில் ஈடுபட்டு அனைத்து தரப்பு விசாரணையிலும் மோசடிகளில் ஈடுபட்டு தப்பித்தாலும் இறுதியாக நீதிமன்றம் ஒன்றே நமக்கான பாதுகாப்பு என இந்திய அரசியல் சாசனம் சொல்கிறது.

ஆனால், இந்தியாவின் இத்தகைய சிறப்பை பெற்ற நீதிமன்றங்கள் அரசியல் லாபங்களுக்கு அடிபணிந்து தீர்ப்புகளை வழங்கும் கோரங்கள் தொடங்கியிருக்கிறது. தீர்ப்புகள் வழங்க இந்திய அரசியல் சாசனமே அடிப்படை என்ற விதிகள் அனைத்தும் விற்பனையாகி நம்பிக்கைக்கும், தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்கும் தீர்ப்புகள் வழங்கப்படும் அவலம் இந்தியாவில் நிலவுகிறது.

இத்தகையதொரு தீர்ப்பு தான் பாபரி மஸ்ஜித் தீர்ப்பிலும் வெளியாகியிருக்கிறது. “நம்பிக்கை” எனும் ஒற்றை வார்த்தையில் நூற்றாண்டுகாலமாக நீதி கேட்டு போராடி வந்த மக்களின் நீதி புதைக்கப்பட்டிருக்கிறது.

பாபரியை போல இதுவரை இந்திய



# எங்களுடையதே!

## பா.ஜ.க. அமைச்சர்

## உண்மையாது!

நீதிமன்றங்கள் முஸ்லிம்களுக்கு இழைத்த அநீதிகளின் தொகுப்புகளை காணலாம். ( பாபரி மஸ்ஜித் பற்றிய முழு விவரங்களை சென்ற மாத வைகறை இதழில் பார்க்கலாம்)

**பாபரி மஸ்ஜித் தீர்ப்பு - நீதியை புதைத்த நீதிபதிகள்**

இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு பாபரி பள்ளிவாசலுக்குள் அத்துமீறி ராமர் சிலை வைக்கப்பட்டு முஸ்லிம்களின் வழிபாட்டு உரிமை பறிக்கப்பட்டது. அப்போதிலிருந்து முஸ்லிம்கள் தங்கள் வழிபாட்டு உரிமைக்காக போராடி வந்தார்கள். அதன் இறுதிக்கட்ட தீர்ப்பை நவம்பர் 9ம் தேதி உச்சநீதிமன்றம் அளித்தது.

இத்தீர்ப்பை ஐந்து நீதிபதிகள் கொண்ட அமர்வு வழங்கியது. உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி ரஞ்சன் கோகாய் தலைமையில் நீதிபதிகள் எஸ்.ஏ.பாப்டே, டி.ஒய்.சந்திரசூட், அஷோக்பூசன், நஷீர் ஆகிய நீதிபதிகள் தீர்ப்பை வழங்கினர்.

வழக்கப்பட்ட தீர்ப்பானது, முஸ்லிம்களுக்கு எந்த நீதியும் கிடையாது. அத்துமீறி இடத்தை ஆக்கிரமித்து இந்திய நீதிமன்றங்களை மதிக்காமல் இடத்தை இடித்து தள்ளியவர்களுக்கே மஸ்ஜித் நிலம் சொந்தம் என்று தீர்ப்பு வழங்கப்பட்டது. இதற்கு ஊடகங்கள் அளித்த பெயர், " வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பு". அத்துடன் முஸ்லிம்களுக்கு இலவசமாக இன்னொரு லஞ்சத்தையும் கொடுத்தது.

அது, பாபரி பள்ளிவாசல் இருந்த இடத்திற்கு பதிலாக அயோத்தியின் வேறு பகுதியில் மஸ்ஜித் கட்டுவதற்கு 5 ஏக்கர் நிலம் ஒதுக்கப்படும் என்றும் தீர்ப்பில் கூறப்பட்டிருக்கிறது.

இத்தகைய தீர்ப்பு வந்த பிறகு முஸ்லிம்கள் தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியை பற்றி பேசிடவும் கூடாது என ஒட்டுமொத்த ஊடகங்களின் வாயிலாக மிரட்டப்பட்டார்கள். மீறி பேசியவர்களை இந்த நாட்டின் ஒற்றுமைக்கு குந்தகம் விளைவிப்பவர்கள் என பேசினார்கள்.

## தீர்ப்பிற்கு பிறகு நிறம் மாறிய அரசியல் தலைவர்கள்

எப்போதுமே அரசியல் தலைவர்கள் தங்கள் வாக்கு வங்கிக்காக நீதியை பற்றியெல்லாம் கவலைப் படாதவர்களாகவே இருப்பார்கள். நீதிபதிகளே அப்படியொரு நிலையில் இருக்கும் போது அரசியல் தலைவர்களெல்லாம் எம்மாத்திரம்!..

இந்தியாவில் முஸ்லிம்களுக்காக குரல் கொடுப்பதாக உரிமை கொண்டாடும் கட்சிகளாக இருக்கும் சில கட்சிகள் இந்த தீர்ப்பின் சாராம்சத்தை எதிர்க்கும் நிலையை தாண்டி ஆதரித்து பேசியிருக்கிறார்கள்.

## திமுக தலைவர் ஸ்டாலின்

"நீண்ட காலமாக இருந்து வந்த பிரச்சினைக்கு உச்ச நீதிமன்றம் ஒரு தீர்வை கண்டுள்ளது. உச்சநீதி மன்றத்தின் அரசியல் சாசன அமர்வே தீர்ப்பை வழங்கியுள்ள பின்னர், அதை ஏற்றுக்கொண்டு அனைத்து தரப்பினரும் சமமான மத நல்லிணக் கத்துடன் முன்னெடுத்து செல்ல வேண்டும்." என்று அறிக்கை வெளியிட்டார் ஸ்டாலின்

இந்தியாவில் பாபரி மஸ்ஜிதை இடித்து அநீதம் இழைக்கப்பட்ட போது அதற்கெதிராக இந்திய அளவில் பெரிதும் குரல் எழுப்பியவர் கலைஞர். அதே போல் முஸ்லிம்களின் வழிபாட்டு உரிமையை பாதுகாக்க வேண்டும் என்றும் முஸ்லிம்களோடு துணை நின்றார். ஆனால், ஸ்டாலின் அதற்கு மாற்றாக இதனை ஏற்றுக்கொள்ளுங்கள் என முஸ்லிம்களுக்கு அறிவுரை கூறுகிறார்.

முஸ்லிம்களோடு தோளோடு தோள் நின்று போராடுவார் என சில முஸ்லிம் இயக்கங்கள் நம்பி வந்த வேளையில் எனக்கு வாக்கு வங்கியே பெரிது என பாசிசத்திடம் சரணடைந்தார் ஸ்டாலின்.

## காங்கிரஸின் துரோகம்

பாபரி மஸ்ஜித் காங்கிரஸ் மத்தியில் ஆட்சி பொறுப்பில் இருந்த போதே இடிக்கப்பட்டது. அப்போது பிரதமராக இருந்த நரசிம்ம ராவ் இடித்த இடத்தில் மீண்டும் கண்டிப்பாக பாபரி பள்ளிவாசல் கட்டிக் கொடுக்கப்படும் என்று அன்று முஸ்லிம்களுக்கு வாக்குறுதி அளித்தார். ஆனால் அதற்கு பிறகான காலக்கட்டங்களில் காங்கிரஸ் ஆட்சியில் இருக்கும் போது இதற்கான எந்த வேலைகளையும் எடுக்கவில்லை.

பாஜக ராமர் கோவில் வைத்து தேர்தல் அரசியல் செய்யும் போது கூட அது முஸ்லிம்களின் சொத்து என்று பேசுவதற்கு கூட தயங்கியது காங்கிரஸ். மக்களின் நம்பிக்கையை இழந்தது.

தற்போது வழங்கப்பட்ட தீர்ப்பையும் இப்படியே அணுகியது காங்கிரஸ், "அயோத்தியில் ராமர் கோயில் கட்ட வேண்டும் என்ற தீர்ப்பை நாங்கள் மனமாற வரவேற்கிறோம். இந்த கோரிக்கையை ஆதரிக்கிறோம்" என்று அறிக்கை வெளியிட்டது.

முஸ்லிம்களுக்கு அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது. உங்களுக்கு அதே இடத்தில் பாபரி பள்ளிவாசலை கட்டித்தருவோம் என்று உறுதியளித்த காங்கிரஸ் நாங்கள் ராமர் கோயில் கட்ட ஆதரவு தருவோம் என்று தனது துரோகத்தை வெளிப்படையாக அறிவித்தது.

## மார்க்சிஸ்ட் கட்சியின் அமைதி

இந்தியாவின் மதபாகுபாடு, சுரண்டல் என பன்முகத்தன்மைக்கு ஆபத்து உருவாகும் சூழலில் தனது குரலை அழுத்தமாக பதிவு செய்யும் மார்க்சிஸ்ட் கட்சியும் தீர்ப்பை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம் என்று பாசிச சக்திகளிடம் சரணடைந்தது.

தீர்ப்பில் ஏகப்பட்ட முரண்பாடுகள் இருந்தும் இத்தீர்ப்பில் முஸ்லிம்கள் அமைதி காத்து ஏற்றுக்கொள்ள வேண்டும் என முஸ்லிம்களுக்கு அறிவுரை கூறி அறிக்கை வெளியிட்டார்கள்.

## உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து கேள்வி கேட்ட மனித நேய காவலர்கள்

உச்சநீதிமன்றம் அநீதியின் பக்கம் சாய்ந்திருக்கும் போது அதனை எதிர்த்து களம் நிற்க வேண்டிய பெரும் அரசியல் தலைவர்கள் சரணடைந்தார்கள். அவர்களுக்கு மத்தியில் சிலமனித நேய காவலர்கள் இத்தீர்ப்பிற்கு எதிராக தங்கள் குரல்களை பதிவு செய்தார்கள்.

## அயோத்தி தீர்ப்பில் அரசியல் தலையீடு - தொல்.திருமாவளவன்

பாபரி மஸ்ஜித் தீர்ப்பு வெளியான பிறகு இந்தியாவிலேயே முதல் மனிதராக இந்த தீர்ப்பு முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி என்று அறிக்கை வெளியிட்டார் திருமாவளவன்.

"பாபர் மசூதி வழக்குத் தொடர்பாக



உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு சட்டத்தையும் ஆதாரங்களையும் வைத்து அளிக்கப்பட்ட தீர்ப்பாக அமையவில்லை. மாறாக சட்டம் ஒழுங்கை கருத்தில் கொண்டும், சமூக நல்லிணக்கத்தை கருத்தில் கொண்டும், சமரச முயற்சியின் அடிப்படையில் வழங்கப்பட்ட தீர்ப்பாக அமைந்துள்ளது.

பாபர் மசூதி கட்டப்பட்ட இடத்தில் அகழ்வாய்வில் அங்கே கோவில் எதுவும் இல்லை என்னும் போது பாபர் மசூதி இடிக்கப்பட்டது குற்றம்தானே. சாஸ்திரங்களின் அடிப்படையிலும் நம்பிக்கையின் அடிப்படையிலும் மட்டுமே தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இசுலாமியர்களுக்கு மாற்று இடம் வழங்க அளித்துள்ள தீர்ப்பு நீதியை நிலைநாட்டும் முயற்சியாக இல்லாமல் சமரச முயற்சியாகவே தெரிகிறது. ராமர் கோவிலை கட்டுவதற்கு மைய அரசு அறக்கட்டளை நிறுவ வேண்டும் என்பதை போல பாபர் மசூதியை கட்டுவதற்கும் ஏன் அறக்கட்டளையை நிறுவக் கூடாது?


இசுலாமியர்கள் உரிய ஆவணங்களை ஒப்படைக் கவில்லை எனில் இந்து அமைப்புகள் என்ன ஆவணங்களை ஒப்படைத்தார்கள் என்ற கேள்வி எழுகிறது. சாஸ்திரங்களின் அடிப்படையிலான இந்துக்களின் நம்பிக்கையை மட்டுமே ஆதாரமாக வைத்து மொத்த இடத்தையும் இந்துக்களுக்கே வழங்கியிருப்பது அரசியல் தலையீட்டின் வெளிப்பாடாகவே தெரிகிறது." என்று அறிக்கை வெளியிட்டதுடன் தொடர்ந்து தனது கருத்தை மிகத்தீவிரமாக எடுத்து வைத்து வருகிறார் திருமாவளவன்.

### முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதி கங்குலி

பாபரி மஸ்ஜித் வழக்கில் உச்சநீதிமன்ற நீதிபதிகள் வழங்கிய தீர்ப்பை மிக கடுமையாக விமர்சித்திருக்கிறார் முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதி கங்குலி அவர்கள். "ஒரு அரசியலமைப்பு மாணவனாக இந்த தீர்ப்பு பெரும் கவலையை தருகிறது" என்கிறார்.

மேலும் கூறுகிறார் "1949 வரை அங்கே தொழுகை நடத்தப்பட்டு வந்தது. தொழுகை நடத்தப்பட்டு வந்தால் அந்த இடம் தான் மஸ்ஜித். அதைத்தான் அரசியலமைப்பும் சொல்கிறது. முஸ்லிம்களுக்கு அவர்கள் மத வழிபாட்டு உரிமையை பாதுகாக்க முழு உரிமையும் இருக்கிறது. அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகளும் அதைத்தான் வலியுறுத்துகின்றன. ஆனால், அதற்கு மாறாக தீர்ப்பு வழக்கப்பட்டிருக்கிறது.

அங்கே பள்ளிவாசல் நீண்ட காலமாக நின்று கொண்டிருக்கிறது. அதனை எல்லோரும் பார்த்தோம். நம் காலத்திலேயே அந்த மஸ்ஜித் இடிக்கப்பட்டது. ஆனாலும், அதே இடத்தை கோயிலுக்காக உச்சநீதிமன்றம் கொடுத்திருக்கிறது. அங்கே நீண்ட காலமாக பள்ளிவாசல் இருந்ததை நீதிமன்றம் மறந்து விட்டதா? அரசியலமைப்பை பாதுகாக்கும் உரிமை உச்சநீதிமன்றத்துடையது. ஆனால், அதை செயல்படுத்த தவறிவிட்டது.



இதை போல தீர்ப்பளிக்க முனைந்து விட்டால் இதுபோல இன்னும் பல கோயில்கள், மசூதிகள், தேவாலயங்கள், புத்த மடங்கள் இடிக்க வேண்டி வரும். இதில் எப்படி புராண உண்மைகளை ஆதாரங்களாக எடுத்துக்கொள்ள முடியும்? ராமர் யார்? ஏதேனும் வரலாற்று ஆதாரங்கள் இருக்கிறதா? இவைகள் வெறும் நம்பிக்கையை மட்டும் சார்ந்தது.

நம்பிக்கையின் படி மட்டும் அணுகுவதால் என்ன நடக்கும்? பாபரி பள்ளிவாசலுக்கு கீழ் ஏதோ கட்டிடம் இருந்திருக்கிறது. ஆனால் அது கோயில் கிடையாது என தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. இனி அந்த இடத்தில் கோயிலை இடித்து பள்ளிவாசல் கட்டப்படவில்லை என சொல்லலாம். ஆனால், தீர்ப்பின் படி கோயில் கட்டினால், அது பள்ளிவாசலை இடித்து கோயிலை கட்டுவது போல் ஆகாதா?

500 வருடங்களுக்கு முன் அந்த இடத்தில் என்ன

இருந்தது? யாருக்காவது தெரியுமா? வரலாற்றை நாம் திரும்ப எழுத முடியாது. நீதிமன்றத்தின் பொறுப்பு நிகழ்காலத்தில் அங்கு என்ன இருந்ததோ அதை பாதுகாப்பதாக தான் இருக்க வேண்டும். வரலாற்றை நீதிமன்றங்களாலும் திருப்பி எழுதிட முடியாது. ஆனால், அங்கே மசூதி இருந்தது என்று தான் நீதிமன்றங்கள் சொல்லிட வேண்டும். காரணம் அது கடந்த கால வரலாறு இல்லை. கண் முன் இந்த தலைமுறையில் நின்று கொண்டிருந்தது. அந்த மசூதி இடிக்கப்பட்டதை நாம் அனைவரும் பார்த்துக் கொண்டிருந்தோம். அது மறுபடி கட்டப்பட்டிருக்க வேண்டும்.

அவர்களுக்கு (முஸ்லிம்களுக்கு) வழிபடும் உரிமை இல்லையென்றால் எதற்காக ஐந்து ஏக்கர் நிலத்தை வழங்கச் சொல்லி மத்திய அரசிடம் சொல்ல வேண்டும். அப்படியென்றால் பள்ளிவாசல் இடிப்பு குற்றம் என நீதிமன்றம் ஒப்புக்கொள்கிறது.

நானாக இருந்திருந்தால் கண்டிப்பாக அந்த இடத்தில் மீண்டும் பள்ளிவாசல் கட்டப்படும் என்று தீர்ப்பு வழங்கியிருப்பேன். இல்லையென்றால் அந்த இடம் யாருக்கும் கிடையாது. அங்கே பள்ளிக்கூடம், மருத்துவமனை கட்டப்படும் என்று சொல்லியிருப்பேன். ஆனால் இப்போது வழங்கப் பட்ட தீர்ப்பு எனக்கு பெரிதும் மனக்கவலையை தருகிறது. இனி அவர்கள் எப்போதும் மசூதிகளை இடிப்பார்கள். இந்நாள் வரை அவர்களுக்கு அரசிடமிருந்து மட்டும் தான் ஆதரவு இருந்தது. இப்பொழுது நீதிமன்றங்களிடமும் இருந்தும் ஆதரவு வந்திருக்கிறது. இதனை பலரும் தெளிவாக சொல்லமாட்டார்கள் நான் சொல்கிறேன்."

என்றார் கங்குலி. (Telegraph 11.11.2019)

## காந்தியின் பேரன் துஷார் காந்தி

உச்சநீதிமன்றம் வழங்கிய அநீதியான தீர்ப்பை எதிர்த்து காந்தியின் கொள்ளுப் பேரன் துஷார் காந்தி மிக கடுமையாக விமர்சனங்களை முன் வைத்திருக்கிறார்.



முஸ்லிம்களின் மசூதியை இடித்தவர்களிடமே அந்த நிலத்தை வழங்கச் சொல்லியிருக்கிற இந்த உச்சநீதிமன்றத்திடம் காந்தி கொலை வழக்கை மீண்டும் விசாரித்தால், "கோட்சே ஒரு கொலைக்காரர். ஆனால் அவர் தேசபக்தரும் கூட" என்ற தீர்ப்பு கொடுக்கப்பட்டிருக்கும் என்று ட்வீட் செய்திருக்கிறார் துஷார் காந்தி. (தினமணி 09.11.19)

## வரலாற்று பேராசியர் கருணானந்தன்

உச்சநீதிமன்ற தீர்ப்பின் அம்சங்களை விரிவாக விவரித்து கேள்வி எழுப்பியிருக்கிறார் வரலாற்றாசிரியர் கருணானந்தன்.

### தொன்மங்கள் அடிப்படையில் தீர்ப்பு

அயோத்தி நிலத்தகராறு வழக்கில் உச்சநீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பு அறிவியல் ஆதாரங்களுக்கு அப்பாற்பட்டதாக இருப்பதாக விமர்சிக்கிறார் வரலாற்று பேராசிரியர் கருணானந்தன். வரலாற்று ரீதியான இந்த வழக்கில் தொன்ம கதைகளை கொண்டு தீர்ப்பளித்ததை ஒப்புக்கொள்ள முடியவில்லை என்கிறார் அவர்.

இந்த தீர்ப்பு சில அச்சங்களையும், ஐயங்களையும் ஏற்படுத்தியுள்ளது. மசூதியில் அத்துமீறி நுழைந்தது தவறு, அங்கு சிலை வைத்தது தவறு, மசூதியை இடித்தது தவறு என எல்லாவற்றையும் கண்டித்துவிட்டு இறுதியாக நிலத்தை இந்துகளுக்கு என்றும் இஸ்லாமியர்களுக்கு மாற்று இடம் என்றும் கூறுவதை எங்களை போன்ற வரலாற்று ஆசிரியர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.

ராமர் அங்கு பிறந்ததற்கான ஆதாரம் கிடைக்கவில்லை என்றும், அங்கு ராமர் கோயில் இருந்தது என்பதற்கான ஆதாரம் இல்லை என்பதையும் ஏற்றுக்கொள்கிறது. பின்னர் அந்த இடத்தில் அரசு ராமர் கோயில் கட்ட உத்தரவிடுகிறது. ஏன் மசூதி கட்டுவதற்கு ஆணை பிறப்பிக்கவில்லை? ஒரு மதச்சார்பற்ற அரசு ஒரு மதத்திற்கு சார்பாக கோயில் கட்டும் பணியை எவ்வாறு மேற்கொள்ளலாம்? அத்துமீறி செயல்பட்டவர்களுக்கு ஆதரவு கிடைத்திருக்கிறது. இந்த தீர்ப்பு சட்டத்தின் ஆட்சி நடக்கிறது என்ற கருத்தியலுக்கு மிகுந்த ஆபத்தை ஏற்படுத்தும்.

சுமார் 1,045 பக்கம் தீர்ப்பு எழுதப்பட்டுள்ளது. இந்த தீர்ப்பு பல்வேறு தொல்லியல் சான்றுகளை நம்பியுள்ளது என குறிப்பிடுகிறார்கள். மசூதிக்கு கீழே ஒரு கட்டுமானம் இருந்ததற்கான சான்றுகள் இருந்தது என்றும் பாபர் மசூதியில் 1857க்கு முன்பாக தொழுகை நடந்ததற்கான சான்றுகள் இல்லை என்றும் கூறுகிறார்கள்.

### எந்த அறிவியல் ஆதாரமும் இல்லை

தாஜ்மகால், செங்கோட்டை போன்ற




கட்டடங்களை தோண்டினால் வேறு ஏதாவது கிடைக்கலாம். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நடந்ததை விட, இந்த சொத்து யாரிடம் தற்போது உள்ளது என்பதுதான் சொத்துரிமை பிரச்னைகளில் முக்கியமானது. ஒரு கட்டுமானத்தை இடித்துவிட்டு, மக்கள் வழிபடும் இடத்தை தோண்டி நடத்தப்படுவது தொல்லியல் ஆய்வு அல்ல. ஒவ்வொரு கட்டுமானத்திற்கு கீழேயும் வேறு ஏதாவது பொருட்கள் கிடைக்கலாம். இருக்கின்ற இடத்தை இடித்துவிட்டு ஆய்வு நடத்துவது என்பது உலகில் வேறு எங்கும் நடைபெறுவதில்லை.

அகழ்வாய்வில் கூட ராமர் கோயில் இருந்தது என நிரூபிக்க முடியவில்லை. அந்த இடத்தில், ஒரு கட்டுமானம் இருந்தது. அது சமண கோயிலாக கூட இருக்கலாம், பௌத்த கோயிலாக இருக்கலாம். அல்லது அந்த உள்ளூர் மக்களின் வழிபாட்டு இடமாக இருக்கலாம். அல்லது ஓர் அரண்மனையாக கூட இருக்கலாம். இந்த வழக்கின் சாராம்சமே இந்த சொத்து யாருடையது என்பதுதான், இந்த இடத்திற்கு அடியில் என்ன இருக்கிறது, என்ன விதமான கட்டுமானம் இருக்கிறது என்பது இல்லை. என் வீட்டுக்கு கீழேகூட, யாராவது ஒருவர் அவரது மூதாதையரின் சமாதி உள்ளது எனக்கூறி என் சொத்தை இப்போது கேட்டால் அதனை எப்படி நியாயப்படுத்துவது?

ராமர் பிறந்த இடம் என கூறுவதில் என்ன அறிவியல் ஆதாரம் இருக்கிறது? முனிசிபல் ரெகார்ட் இருக்கிறதா? ராமர் என்பது ஓர் அவதாரம். பிற அவதாரங்களாக சொல்லப்படும் மச்ச அவதாரம், கூர்ம அவதாரம் ஆகிய அவதாரங்களுக்கு பிறப்பிடம் சொல்லமுடியுமா? அடுத்ததாக கிருஷ்ணரை சர்ச்சைக்குள்ளாக்குவார்கள் என தோன்றுகிறது. தொன்மங்களை வரலாற்று ஆதாரங்களாக மாற்றக்கூடாது.

ராமர் பிறந்தது திரேதா யுகம் என்கிறார்கள். மனுஸ்மிருதியின் அடிப்படையில் நான்கு யுகங்களில் தற்போது கலியுகத்தில் நாம் இருக்கிறோம் என்கிறார்கள். அதாவது திரேதா யுகம் என்பது சுமார் 12 லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு என்றும், அப்போதுதான் ராமர் இருந்தார் என்றும் சொல்கிறார்கள். மனிதன் பிறந்து கற்காலம், உலோக காலம் என அறிவியல் ரீதியாக பார்க்கும்போது, மனித இனத்தின் வரலாறு சுமார் எட்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்துதான் தொடங்குகிறது என்பது உலகளவில் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒன்று. இதற்கு முன்னர் ராமர் இருந்தார், அவர் இங்குதான் பிறந்தார் என்பதை எவ்வாறு ஏற்றுக்கொண்டு, அதனை வைத்து நவீன காலத்தில், சட்டத்தின் ஆட்சி நடைபெறும் நாட்டில் ஒரு வழக்கை அணுக முடியும்?

பைபிள் இருப்பதால், ஆதாம், ஏவாள் ஆகியோர் இருந்ததாக வரலாறு சொல்ல முடியுமா? அதனை ஐரோப்பிய வரலாற்றில் ஆதாரம் என யாரும் இணைக்கவில்லை. நான் இந்து மதத்தை வெறுப்பவன் கிடையாது, இஸ்லாமியரும் இல்லை. உண்மையான அறிவியல் ஆதாரங்களை வைத்து தீர்ப்பு வழங்கப்படவில்லை என்பதை புரிந்து கொண்டு பேசுகிறேன்.

தமிழகத்தில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள ஏகம்பரநாதர் கோயில் உள்ளது. அங்கு பௌத்த சிற்பம் எடுக்கப்பட்டது. பௌத்த கல்வெட்டு கூட உண்டு. இன்று பிரபலமாக அறியப்படும் பல இந்து சமயத்தின் சைவ,வைணவ கோயில்கள் சமண, பௌத்த கோயில்களாக இருந்தன என ஆதாரத்துடன் கூறுகிறார்கள். பழனி முருகன் கோயிலில் இருப்பது சமண தீர்த்தங்கரர் சிலை என்கிறார்கள். கேரளாவில் உள்ள கொடுங்கலூர் பகுதியில் உள்ள கோயிலில் இருப்பது பௌத்த சமயத்தை சேர்ந்த தாரா தேவி அல்லது ஜேஷ்ட தேவி என்று கூறப்படுகிறது. சமணர், பௌத்தர்கள் எண்ணிக்கையில் குறைந்திருப்பதால், அவர்கள் அடாவடியாக கோயில்களை இடிக்கமாட்டார்கள் என்பதால், இந்து கோயில்களாக இந்த கட்டுமானங்கள் தொடர்கின்றன.

அயோத்தி நிலத்தை இந்துகளுக்கு கொடுத்துள்ளது என்பது பல இடங்களில் சிறுபான்மையினரின் இடங்களை பெரும்பான்மை மக்கள் எடுத்துக்கொள்வதற்கு, அதற்காக வன்முறையை அவர்கள் கையாண்டாலும், எந்த பிரச்சனையையும் அவர்கள் சந்திக்க மாட்டார்கள் என்பதை ஊக்குவிக்கிறது.

**இஸ்லாமிய அரசில் நிகழ்ந்தது, ஆனால் மதச்சார்பற்ற நாட்டில்?**

“பாகிஸ்தான் தனி நாடாக சென்ற பிறகு லூகூர் அவர்களின் தலைநகராக இருந்தது. லாகூரில் சீக்கியர்கள் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் சிறுபான்மையினர். சீக்கியர்களின் குருத்வாரா மீது இஸ்லாமியர்கள் உரிமை கோரினார்கள். ரஞ்சித் சிங் காலத்தில் இஸ்லாமியர்களின் இடத்தை அபகரித்து குருத்வாரா கட்டப்பட்டிருப்பதாக அத்துமீறி இடிக்கவும் செய்தார்கள்.

அந்த வழக்கு பாகிஸ்தான் உச்சநீதிமன்றத்திற்கு சென்றது. அந்த வழக்கில் பாகிஸ்தான் உச்சநீதிமன்றம், இந்த சொத்து முன்னால் யாருக்கு இருந்தது என்பது பற்றியெல்லாம் கவலை கிடையாது. ஒரு சொத்து நம் தலைமுறையில் ஒருவரிடம் இருக்கு. நமக்கு தெரிந்த அளவில் அது இஸ்லாமியர்களுக்கு சேராத சொத்து. அந்த சொத்தை இடிக்கவோ, உரிமை கோரவோ யாருக்கும் உரிமை இல்லையென்று அந்த இடத்தை சீக்கியர்களிடம் வழங்கியது.

ஒரு இஸ்லாமிய அரசில் இது நடக்கும் போது மதச்சார்பின்மை நாடான இந்தியாவில் நடக்காத போது இந்திய அரசியலமைப்பில் நம்பிக்கை கொண்ட நம்மை போன்றவர்கள் வெட்கி தலைகுனியும் விஷயமாக நான் பார்க்கின்றேன்.”

*(BBC tamil 12.09.19)*

## அனுபம் குப்தா : லிபர்ஹான் கமிஷன் முன்னாள் வழக்கறிஞர்

பாபர் மசூதி இடிப்புக்குக் காரணமான அரசியல் தலைவர்கள் எல்.கே. அத்வானி, முரளிமனோகர் ஜோஷி, உமா பாரதி, கல்யாண் சிங் ஆகியோரையும், பி.வி. நரசிம்ம ராவையும் புதுடெல்லியில் விக்யான் பவனில் 15 ஆண்டுகளுக்கும் மேலாக அடுக்கடுக்கான கேள்விகளுக்கு ஆளாக்கியவர் சண்டிகரைச் சேர்ந்த மூத்த வழக்கறிஞர் அனுபம் குப்தா. 1992ல் பாபர் மசூதி இடிக்கப்பட்டது குறித்து விசாரித்த நீதிபதி எம்.எஸ். லிபரான் கமிஷன் வழக்கறிஞராக இந்த வாய்ப்புகள் அவருக்குக் கிடைத்தன. கமிஷனுடன் கருத்து வேறுபாடு ஏற்பட்ட நிலையில், 2009ல் அதன் இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டபோது குப்தா அதை குறை கூறினார்.

சர்ச்சைக்குரிய நிலம் - உள்பகுதி மற்றும் வெளிப்பகுதி - முழுவதையுமே இந்துக்களுக்கு ஒதுக்கியதில் எனக்கு தீவிர அதிருப்தி உள்ளது.

ஆவணங்கள் இல்லாத நிலையில் சொத்தின் உரிமையை முடிவு செய்த நடைமுறையில் எனக்கு அதிருப்தி உள்ளது.



வெளிப்புறப் பகுதியில் அவர்கள் (இந்துக்கள்) நீண்டகாலமாக எந்தவித இடைவெளியும் இல்லாமல் தொடர்ந்து வழிபாடு செய்து வந்திருக்கிறார்கள் என்று நில உரிமை முடிவு செய்யப்பட்டிருப்பது சரியானது என்று ஏற்றுக் கொள்ளக் கூடியதே என்றாலும், இறுதித் தீர்ப்பில், கட்டடத்தின் உள்பகுதியில் அதே அணுகுமுறை கையாளப்படவில்லை.

1528க்கும் 1857க்கும் இடைப்பட்ட காலத்தில், அந்த இடத்தை முஸ்லிம்கள் பயன்படுத்தி வந்தார்கள் என்பதற்கு, முஸ்லிம்கள் தரப்பில் எந்த ஆதாரங்களும் தரப்படவில்லை என்று தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. அப்பீலில் விசாரிக்கப்படும் வழக்கில் ஆதாரங்கள் விடுபடும் காலக்கட்டம் இருந்தாலும், 1528ல் மசூதி கட்டப்பட்டு, 1992ல் இடிக்கப்பட்டது என்ற உண்மை - சந்தேகத்துக்கு இடமில்லாமல் இருக்கிறது.

முகலாயர் ஆட்சிக் காலத்தில் எங்காவது ஒரு கிறிஸ்தவ தேவாலயம், குருத்வாரா அல்லது ஒரு கோவில் கட்டப்பட்டதாக வைத்துக் கொள்வோம். அங்கு பல நூறு ஆண்டுகள் நீங்கள் வழிபாடு செய்து வந்திருக்கிறீர்கள் என்பதை நிரூபிக்க வேண்டும் என அந்த சமுதாயத்தினரை கேட்க முடியுமா. 1528க்கும் 1857க்கும் இடைப்பட்ட காலத்தில் அங்கு இந்துக்கள் வழிபாடு செய்தனர் என்பதற்கு இந்துக்களிடம் கூட ஆதாரங்கள் கிடையாது. அது ராமரின் பிறந்த இடம் என்று அவர்கள் (இந்துக்கள்) நியாயமான நம்பிக்கை கொண்டிருந்தால், அந்த இடத்தில் வழிபாடு செய்திருப்பார்கள்.

ஆனால் 1528ல் கட்டப்பட்ட அந்த மசூதி 1857 வரையில் முஸ்லிம்களால் பயன்படுத்தப்படவில்லை என்று நீதித் துறை கூறியுள்ளது. எதன் அடிப்படையில் மாண்புமிகு நீதிமன்றம் இந்த அனுமானத்திற்கு வந்துள்ளது?

**குற்றவாளிகளுக்கு பாராட்டு**

மசூதியின் மையப் பகுதியில் குழந்தை ராமரின் சிலைகளை 1949 டிசம்பர் 22 ஆம் தேதி நிறுவியது - மசூதியை இடித்ததாக அவர்கள் கூறுவது, சட்டவிரோதம் என்று இந்தத் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனால் சொத்து ஊர்ஜிதம் செய்யப்பட்டது. 1949 டிசம்பர் 22 ஆம் தேதிக்கு முன் சிலைகள் எதுவும் இல்லை என்று நீதிமன்றம் சரியான விஷயத்தைக் கூறியுள்ளது. இருந்தாலும், நீதிமன்றத்தின் முடிவு, ஆய்வு மற்றும் மதிப்பீடுகளில் அது எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை.

இந்த நிலத்தில் இந்துக்களுக்கு உரிமையுள்ளதாக கூறுவது, மசூதியை இடித்ததை நியாயப் படுத்துவதாக உள்ளது. அதாவது சட்டத்தை மீறியதாக அர்த்தமாகிறது.

1992 டிசம்பரில் நடந்த மசூதி இடிப்பு சம்பவம், சட்டத்தை மீறியது, நீதிமன்ற உத்தரவுகளை மீறிய செயல் என்று நீதிமன்றம் கூறினாலும், அந்த சம்பவம் நீதிமன்றத்தை உணர்வு ரீதியிலோ, நெறி அடிப்படையிலோ, தர்க்க ரீதியிலோ பாதிப்பை ஏற்படுத்தியதாகத் தெரியவில்லை. நீதிமன்றத்தின் மீது மிகுந்த மரியாதை கொண்டிருக்கும் நிலையில், இதை என்னால் நியாயப்படுத்த முடியவில்லை. இந்த அடிப்படையான விஷயங்களை ஒதுக்கித் தள்ளிவிட முடியாது, இவை கவலை தருகின்றன.

1949ல் சிலைகளை நிறுவியது, 1992ல் முழு கட்டடத்தையும் இடித்துத் தள்ளியது ஆகிய சட்டவிரோத செயல்களில் ஈடுபட்ட குற்றத்துக்கு ஆளாகியுள்ள தரப்பினரான இந்துக்களுக்கு முழு இடத்தையும் ஒதுக்கியிருப்பது, என்னைப் பொருத்தவரை குற்றவாளிகளுக்கு பாராட்டு அளிப்பதைப் போன்றதாகக் கருதுகிறேன்.

இந்தப் பிரச்சினை மீதான ஒட்டுமொத்த அணுகுமுறையிலும், மதச்சார்பின்மை என்ற அடிப்படை லட்சியங்கள் மற்றும் அடிப்படைக் கோட்பாடுகளில் இருந்து உச்ச நீதிமன்றம் பின்வாங்கியுள்ளது என்று கருதுகிறேன்.

**உரிமை போராட்டம் தொடரும் - உவைஸி**

“அயோத்தி வழக்கில் உச்ச நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பு திருப்தி அளிக்கவில்லை. உச்ச நீதிமன்றம் உச்சமானதாக இருக்கலாம். ஆனால் அது தவறிழைக்காது என கூற முடியாது. அரசியல் சட்டத்தின் மீது நாங்கள் முழு நம்பிக்கை வைத்துள்ளோம். எங்களது உரிமைக்காக தொடர்ந்து போராடுவோம். எங்களுக்கு 5 ஏக்கர் நிலம் தானமாகத் தேவையில்லை. 5 ஏக்கர் நிலத்தை நிராகரிக்கிறோம். அதனை ஏற்கும் நிலையில் இருக்க விரும்பவில்லை.

# பெரிய நாட்டாமையும் பண்ணையாரும்

ஒரு ஊருல பல நூறு வருசமா சாமி கும்பிட்டிருந்த நிலத்த பண்ணையாரு தன்னோட ஆட்கள வச்சு அபகரிச்சுட்டாரு. உடனே அந்த சாமி கும்பிட்டிருந்த மக்க ஊரு நாட்டாமைக்கிட்ட நியாயம் கேக்க போய் நின்னாங்க.

ரொம்ப வருஷமா நின்னும் ஒன்னும் கிடைக்கல. திடீர்னு ஒரு புது பெரிய நாட்டாமை வந்ததும் சில பல அதிரடி வசனமெல்லாம் அவரும் பேச இந்த மக்களுக்கு நம்ம நிலம் கிடைச்சிடும்னு சின்ன சந்தோசமும் வந்துச்சி. ஆனா பாருங்க அவரும் காலம் போக போக பழைய ஆட்கள போலவே மாறிட்டாரு.

திடீர்னு ஒரு நாள் நம்ம பெரிய நாட்டாமை மேல ஒரு பொன்னு தன்ன கெடுத்துட்டார்னு பிராது ஒன்னு கொடுத்திச்சு. இத்தன வயசுக்கு மேல அதுவும் நாட்டாமை பதவில இருந்து இறங்குறப்ப போயா இப்டி பிராது கொடுப்பனு நொந்துகிட்டாரு பெரிய நாட்டாமை.

அப்புறம் தான் தெரிய வந்துச்சு அந்த பொன்னு பண்ணையாரோட ஆளுனு. என்ன பண்றது தப்ப தான் பண்ணியாச்சே. இப்ப அந்த மக்களுக்கு உண்மையா இருந்தா பண்ணையாரு நம்ம மாணத்த வாங்கிருவாரு. அதுவே பண்ணையாருக்கு உண்மையா இருந்துட்டா இனியும் கூட ஜாலியா என்ன வேனா பண்ணலாம்னு யோசனை செஞ்சு கடைசில பண்ணையாருக்கு விசுவாசமா இருக்கலாம்னு முடிவு பண்ணிட்டாரு.

பெரிய நாட்டாமை அந்த மக்கள்ட்ட போயி, இங்க பாருங்க உங்க நிலத்த புடுங்குனது பண்ணையாருன்றது உண்மை தான். அத இடிச்சதும் பண்ணையாரு ஆளுங்க தான் ஆனா, இந்த ஊருல நீங்க கம்மியா இருக்கிங்க பண்ணையாரு ஆளுக தான் அதிகம் அதனால நிலம் பண்ணையாருக்கு தான் சொந்தம்னு தீர்ப்பு கொடுத்துட்டாரு.

இப்ப பண்ணையாரும் நம்ம பெரிய நாட்டாமையும் செஞ்ச தப்பையெல்லாம் மாத்தி மாத்தி மறச்சுக்கிட்டாங்க. ஆனா பாவம் என்னமோ இந்த நாட்டாமைய நம்பி உக்காந்த மக்கள் தான்.

மக்கள் முதல்ல பண்ணையாரு தான் இடிச்சாருனு தெரியாம பண்ணையார நம்புனாங்க. அப்புறம் பண்ணையாருக்கு கீழ இருக்கிற நாட்டாமைய நம்புனாங்க. ஆனா கும்பிட்ட சாமிய நம்பி அன்னைக்கே பண்ணையார எதிர்க்காம போய்ட்டாங்க. அதனால் எல்லாத்தையும் இழந்துட்டு நிக்கிராங்க.



அயோத்தி விவகாரத்தில் காங்கிரஸ் தனது போலி நிறத்தை விடுத்து உண்மையான நிறத்தை வெளிப்படுத்தியுள்ளது. பாபர் மசூதிக்குள் 1949-ம் ஆண்டு சிலை வைக்கப்படவில்லை. பாபர் மசூதியின் கதவை ராஜீவ் காந்தி திறந்து விடா விட்டால் அது இன்று வரை மசூதியாகவே இருந்திருக்கும். நரசிம்மராவ் தனது பணியைச் சரிவர செய்திருந்தால் பாபர் மசூதி இருந்திருக்கும்." என்று அறிக்கை வெளியிட்டார் உவைசி.

## அநீதி இழைத்த பின் விருந்து

முஸ்லிம்களின் வழிபாட்டு உரிமையை புதைக்கும் படி ஒரு தீர்ப்பை அளித்து விட்டு அதற்காக விருந்துக்கு சென்றார்கள் தீர்ப்பளித்த நம் நாட்டின் நீதிமான்கள்.

டெல்லியில் உள்ள தாஜ் மான்சிங் எனும் நட்சத்திர ஹோட்டலில் ஏற்பாடு செய்யப் பட்டிருந்த விருந்தில் தீர்ப்பளித்த ஐந்து நீதிபதிகளும் கலந்து கொண்டனர். இந்த விருந்து நீதியை விலை பேசி விற்றதற்கான விருந்து எனவும் சமூக வலைத்தளங்களில் கருத்து பரிமாறப்பட்டன.

## யார் எழுதிய தீர்ப்பு?

பாபரி பள்ளிவாசல் இடம் முழுக்க இடித்தவர்களுக்கே சொந்தம் என்ற உச்ச நீதிமன்ற தீர்ப்பை எழுதியவர் யார் என்று எந்த பெயரும் தீர்ப்பில் இல்லை. இதுவரை இப்படியொரு தீர்ப்பு வெளியானது கிடையாது. வித்தியாசமாக இந்த வழக்கில் பெயர் இல்லாமல் தீர்ப்பு வெளியாகி யிருக்கிறது என்று சட்ட வல்லுனர்கள் கூறுகிறார்கள்.

1045 பக்கம் கொண்ட இந்த தீர்ப்பில் கிட்டத் தட்ட 116 பக்கம் முழுவதும் இந்துக்களின் நம்பிக்கையின் அடிப்படையில் எப்படி ராமர் கோயில் என நம்பப்படுகிறது என்று எழுதப் பட்டிருக்கிறது. இந்திய அரசியல் சாசனத்தின் படியும் அல்லாமல், நீதியின் படியும் அல்லாமல் வெறும் நம்பிக்கை எனும் பெயரில் புராண கட்டுக் கதைகளுக்கு தீர்ப்பில் இவ்வளவு முக்கியத்துவம் ஏன் கொடுக்கப்பட வேண்டும்?

தீர்ப்பின் 929வது பக்கத்தில் இப்படி குறிப்பிடப் பட்டிருக்கிறது, "1528க்கு முன்பு இந்த நிலம் தான் ராமர் பிறந்த இடமாக இருந்திருக்கிறது என்பதற்கு போதுமான புராணங்கள் வழிகாட்டுகிறது." இப்படி கட்டுக்கதைகள் அடிப்படையில் தீர்ப்பு வழங்குவதாக கூறப்பட்டாலும் எந்த இந்து மத வேதங்களிலும் பாபரி பள்ளிவாசல் இருக்கும் இடம் தான் ராமர் பிறந்த இடம் என்று கூறப்படவில்லை என வரலாற்றாசிரியர்கள் கூறுகிறார்கள்.

மொத்தத்தில் நம்பிக்கை எனும் ஒற்றை வார்த்தையை கொண்டு 1045 பக்கங்களுக்கு பூசி மொழுகி எழுதிக்கொடுத்த தீர்ப்பையே நீதிபதிகள் வாசித்திருக்கிறார்களோ என்றும் சொல்லப்படுகிறது. அதனாலேயே அதற்கு ஏற்றாற் போல் கையெழுத்திற்கும் வேலையில்லை என்று மோடியின் தீர்ப்பு வாசிக்கப்பட்டிருப்பதாக சொல்கிறார்கள்.

## பாபரி பள்ளிவாசலுக்கு கீழ் கோயில் கிடையாது - பாபரி பள்ளிவாசல் இடித்தது தவறு - பாபரி நிலம் இடித்தவர்களுக்கே சொந்தம்

பாபரி பள்ளிவாசல் தீர்ப்பின் முழு அம்சமும் இது தான். பாபரி பள்ளிவாசலின் கீழ் ஒரு கட்டமைப்பு இருக்கிறது ஆனால் அது கோவில் கிடையாது. அதாவது, இந்த பொய்யை கூறி தான் பாபரி பள்ளிவாசல் இடிக்கப்பட்டது. இந்த பொய்யை அடிப்படையாக கொண்டு தான் பாஜக தன் அரசியலை நிகழ்த்தி வந்தது. இதனை பொய்யென்று வெளிப்படையாக கூறியிருக்கிறது நீதிமன்றம்.

அடுத்ததாக, பாபரி பள்ளிவாசல் இடிக்கப் பட்டது குற்றம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்படி முஸ்லிம்கள் தரப்பு எல்லாவற்றிலும் சுத்தமானவர்கள் என்று கூறி விட்டு இறுதியில் நிலம் முழுக்க இந்துக்களுக்கே சொந்தம் முஸ்லிம்களுக்கு தனியாக இடம் ஒதுக்கப்படும் என்று தீர்ப்பு வழங்கியது.

இப்படியொரு தீர்ப்பையே இந்திய ஊடகங்கள் வரலாற்று சிறப்பு மிக்க தீர்ப்பு என்று எழுதினார்கள். ஆனால், சமூக வலைத்தளங்களில் இந்த தீர்ப்பை கேலி செய்து இதெல்லாம் தீர்ப்பா என்று திட்டி தீர்த்தனர்.

## இரண்டாம் தர குடிமக்களா முஸ்லிம்கள்?

நவம்பர் 9ம் தேதி சனிக்கிழமை தீர்ப்பு தரப் பட்டது. தீர்ப்பு தரப்பட்ட பிறகான நிமிடங்களில் முஸ்லிம்களுக்கான அறிவுரைகள் தான் ஊடகங்கள் முழுவதும் திட்டமிட்டு பரப்பப்பட்டன. இந்த "வரலாற்று சிறப்புமிக்க" தீர்ப்பை முஸ்லிம்கள் கேள்வி கேட்க கூடாது ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று பேசினார்கள். பல முஸ்லிம் கட்சிகள் உட்பட

நாம் கேள்வி எழுப்பாமல் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.

மோடி இரண்டாம் முறை ஆட்சி ஏற்று மூன்று மாதங்கள் கடக்காத நிலையில் சங்பரிவாரத்தினரின் இந்து ராஷ்டிராவிற்கான இரண்டு முக்கிய திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறார்கள். முதலாவது காஷ்மீருக்கான சிறப்பு அந்தஸ்து ரத்து, இரண்டாவது ராமர் கோயில் கட்டுவதற்கான அனுமதி.

இத்தீர்ப்பிற்கு பிறகு சர்வதேச பத்திரிக்கைகள் இந்தியா தனது "இந்து" நாடு என்ற அஜென்டாவை நோக்கி வெற்றிகரமாக பயணிக்கிறது என விமர்சித்து எழுதியிருக்கிறார்கள். இதனை இத்தீர்ப்பின் போதே உணர முடிந்தது.

தீர்ப்பு வழங்கிய பிறகு முஸ்லிம்களை இரண்டு வகையாக பிரித்தார்கள். முதலாவது, இந்த தீர்ப்பை வரவேற்பவர்கள் அல்லது அமைதி காப்பவர்கள். இவர்கள் மட்டுமே இந்தியாவில் இருக்க தகுதியுடையவர்களாக பிரச்சாரம் செய்யப்பட்டது. இரண்டாவதாக, இந்த அநீதியை கேள்வி எழுப்பும் முஸ்லிம்கள் இவர்களை தீவிரவாதிகள் என்று பிரச்சாரம் செய்தார்கள். அதன்படியே இத்தீர்ப்பை கேள்வி கேட்ட உவைஸியை தீவிரவாத சிந்தனை கொண்டவர் என்றார்கள்.

நாங்கள் சொல்வதை கேட்பதானால் நீங்கள் நல்ல முஸ்லிம்கள். எங்களை எதிர்க்க துணிந்தால் நீங்கள் தீவிரவாத முஸ்லிம்கள். அதனால் பேசாமல் இருக்க வேண்டுமென முஸ்லிம்கள் மிரட்டப்பட்டார்கள். இப்போதே முஸ்லிம்கள் இந்த நாட்டின் இரண்டாம் தர குடிமக்களாகத் தான் நடத்தப்படுகிறார்கள்.

இத்தீர்ப்பு வெளியான பிறகு அயோத்யா முழுவதும் கொண்டாட்டத்தில் மூழ்கியது. ஆனால் முஸ்லிம்கள் பகுதியை தவிர. முஸ்லிம்கள் தங்கள் தலைகளை தொங்கப் போட்டுக்கொண்டு வீதிகளில் சென்றார்கள்.

அயோத்தியில் வசிக்கக்கூடிய பாபரி மஸ்ஜித் வழக்கின் மனுதாரரின் மகனான இக்பால் அன்சாரி,

"நாங்கள் இந்த தீர்ப்பை ஏற்றுக்கொள்கிறோம். இந்த தீர்ப்பிற்கு எதிராக இனி முறையிட மாட்டோம். எப்படியோ இனி இதன் பெயரில் கலவரம் நடக்காமல் இருக்குமே அதுவே நிம்மதி என்றார்."

இதுவே முஸ்லிம்களின் பலரது எண்ணமாக இருக்கிறது. இனி இதன் பெயரில் கலவரம் நடக்காது எப்படியோ முடிந்தது என்று நம்புகிறார்கள். ஆனால், அதற்குள்ளேயே சங்பரிவார கும்பல் அடுத்தடுத்து காசி, மதுரா என்று குரல் எழுப்ப தொடங்கியிருக்கிறார்கள்.

பாபரி பள்ளிவாசல் மீண்டும் கட்டப்பட வேண்டும் என்று வழக்கு தொடர்ந்த மனுதாரரான 75 வயதான ஹாஜி மஹ்பூப் முஹம்மது அவர்கள் தீர்ப்பை பற்றி சொல்லும் போது,

"முஸ்லிம்கள் அவர்களுக்கெதிரான இந்த தீர்ப்பை ஏற்றுக்கொள்வார்கள். ஆனால் வலதுசாரி இந்துத்துவ அமைப்புகள் இதன் மூலம் துணிவு கொண்டு இன்னும் பல மசூதிகளை இடிக்கக் கூடும். இனி முஸ்லிம்களுக்கெதிரான வன்முறை அதிகரிக்கலாம். இது நிறுவனயமாக்கப்பட்ட வன்முறையாக மாறலாம்" என்றார்.

75 வயதான ஹாஜி மஹ்பூப் அவர்களின் வார்த்தைகளே இந்திய முஸ்லிம்களின் உணர்வுகளாக இருக்கிறது.

## இத்தீர்ப்பில் எழுப்ப வேண்டிய நியாயமான கேள்விகள்?

- ☞ பாபரி பள்ளிவாசலின் நிலம் இந்துக்களுக்கு நம்பிக்கையின் அடிப்படையில் தரப்பட்டிருப் பதாகவே தீர்ப்பில் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியெனில் அதே நம்பிக்கையின் பேரிலேயே மற்ற மதங்களின் வழிபாட்டு உரிமைகள் பறிக்கப் படுவதற்கான சட்ட உரிமைகள் வழங்குவது போல் ஆகாதா?

- ☞ பாபரி பள்ளிவாசல் இடித்தது சட்ட விரோதம், பள்ளிவாசலுக்குள் சிலை வைத்தது சட்டவிரோதம், பள்ளிவாசலுக்கு கீழ் கோயில் இல்லை. இதெல்லாம் தீர்ப்பின் அம்சங்கள். ஆனால், இத்தனையும் முஸ்லிம்களின் பக்கம் பலம் சேர்க்கும் அம்சங்கள். இப்படி முஸ்லிம்களுக்கு எல்லாவித சார்புநிலையும் இருந்து எந்த முகாந்திரமும் இல்லாமல் நிலத்தை முழுமையாக பறித்தது எப்படி சரியாக இருக்க முடியும்?

- ☞ 1857க்கு முன் முஸ்லிம்கள் இப்பள்ளியில் தொழுதார்கள் என்பதற்கு சான்றுகள் இல்லை என்று நீதிபதிகள் தீர்ப்பில் கூறியிருக்கிறார்கள். ஆனால், 1949 வரை சிலை வைக்கும் முன்பு வரை முஸ்லிம்கள் தொழுததற்கான ஆதாரங்கள் கொடுக்கப் பட்டிருக்கிறது. ஆனால், அதுவே எதிர் தரப்பில் 1857க்கு முன் இந்துக்கள் அப்பகுதியில் வணங்கினார்கள் என்பதற்கான ஆதாரமும் வழங்கப்படவில்லை என்றே நீதிமன்றம் கூறுகிறது. முஸ்லிம்களை தொழுக விடாமல் தடுத்து நிறுத்தியது அரசு அதிகாரம் தான். ஆனால் முஸ்லிம்கள் 1857க்கு முன் தொழுததற்கான ஆதாரம் இல்லையென்பதை மட்டும் காட்டி முஸ்லிம்களின் நிலத்தை பறித்திருக்கிறது நீதிமன்றம்.

- ☞ பாபரி பள்ளிவாசலுக்கு கீழ் இருக்கும் கட்டுமானம் கோவில் இல்லையென தீர்ப்பில் கூறப்பட்டிருக்கிறது. அதனால் கோவிலை இடித்து மசூதி கட்டப்படவில்லை என்ற உண்மை வெளியாகியிருக்கிறது. ஆனால் அந்த இடத்தில் ஒரு மசூதி இடிக்கப்பட்டு தான் கோயில் கட்டப்படப் போகிறது என்ற வரலாற்றைத் தான் இத்தீர்ப்பு நிறைவேற்ற போகிறது என்பதை உணரவில்லையா?

- ☞ பாபரி மசூதி இடிக்கப்பட்ட போதே நாங்கள் பாபரி மசூதியுடன் நிற்க போவதில்லை. காசி, மதுரா தான் எங்கள் அடுத்த இலக்கு என்று கூறினார்கள். தற்போது இடித்தவர்களுக்கே இடமென்று அவர்களுக்கு அங்கீகாரம் கொடுத்திருப்பதன் மூலம் அடுத்தடுத்து மசூதிகளுக்கு ஆபத்து உருவாகும் அவர்களுக்கும் இத்தீர்ப்பு செல்லுமா?

### இந்திய நீதிமன்றங்களின் நிலை என்ன?

இந்திய நீதிமன்ற அடுக்குகளில் நீதியை பெறுவது என்பது சாமானியனின் கைகளுக்கு எட்டாத தூரத்தில் இருக்கிறது. தனக்கான நீதியை பெற்றுவிட நீதிமன்றத்தை நாடி விட்டால் தன் சொத்தை இழந்தாக வேண்டியிருக்கிறது. அதிலும் ஒடுக்கப் படும் மக்கள் தங்கள் உரிமைக்காக நீதிமன்றம் நாடி விட்டால் சொத்தையும் இழந்து நீதியையும் இழந்து நடு வீதியில் நிறுத்தப்படுகிறார்கள் என்பதே தற்போதைய நிலைமை.

ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி ராஜேந்திர மல் லோதா கூறும் போது, “நீதித் துறையில் ஊழலே இல்லை என்று யாராவது கூறினால், அவர் நேர்மையான பதிலைச் சொல்லவில்லை என்பேன். நீதித் துறையில், வேண்டியவர்களுக்கு அறவே சலுகை காட்டப் படுவதில்லை என்று யாராவது கூறினால், அவர் நேர்மையற்றவர் என்றே கூறுவேன்.” என்கிறார்.

ஓய்வு பெற்ற நீதிபதிகளே இந்தியாவின் நீதி நிலைகளில் நேர்மை இல்லையென ஒப்புதல் அளிக்கும் போது அங்கு இருக்கும் பாகுபாடுகளை நாம் புரிந்து கொள்ளலாம். குறிப்பாக சொல்ல வேண்டுமென்றால் இந்திய நீதிமன்றங்களில் முஸ்லிம்களுக்கான நீதி என்பது எட்டாக்கனி. முஸ்லிம்களின் உரிமைகளுக்கான வழக்கின் போது மட்டும் நீதிமன்றங்கள் அரசியல் சாசனத்தை அப்புறப்படுத்தி விட்டு மனசாட்சியையும், நம்பிக்கையும் கையிலெடுத்து அவர்களுக்கு எதிரான தீர்ப்பு வழங்கும்.

### இது வரை நீதிமன்றங்களின் இழுபறியால்




### தங்கள் வாழ்வை சிறையில் இழந்த அப்பாவிகள்

இதுவரை இந்தியாவில் தீவிரவாத முத்திரையில் கைது செய்யப்பட்டு பல ஆண்டு சிறைக்கு பின் அப்பாவிகள் என விடுதலை செய்யப்பட்ட வழக்குகளில் சில,

**நஸ்ருதின் அஹ்மத்** - *23* வருட சிறை - கைது செய்யப்பட்டது - *1994* - விடுதலை செய்யப்பட்டது - *2015* - கைது செய்யப்படும் போது வயது - *19.*

வழக்கு - பாபரி மஸ்ஜித் இடிப்பு தினத்தின் போது நடந்த ஐந்து இரயில் குண்டுவெடிப்பு, இரண்டாம் ஆண்டு மருத்துவ படிப்பின் போது குற்றம் இழைக்கப்பட்டதாக கைது செய்யப்படார்.

**குல்சார் அஹ்மத் பானி** - *16* வருட சிறை - கைது செய்யப்பட்டது - *2001* - விடுதலை செய்யப்பட்டது - *2017* - கைது செய்யப்படும் போது வயது- *28.*

வழக்கு - சபர்மதி எக்ஸ்பிரஸ் ரயில் குண்டு வெடிப்பு வழக்கு.

**ஜாஹீருதீன் அஹ்மத்** - *23* வருட சிறை - கைது செய்யப்பட்டது - *1994* - விடுதலை செய்யப்பட்டது - *2016*

வழக்கு - மும்பையில் சிவில் பொறியாளராக இருக்கும் போது தீவிரவாத செயலில் ஈடுபட்டதாக

கைது செய்யப்பட்டார்.

**Md ஆமிர் கான்** - *14 வருட சிறை - கைது செய்யப்பட்டது - 1998 - விடுதலை செய்யப்பட்டது - 2012 - கைது செய்யப்படும் போது வயது - 20.*

*வழக்கு - டெல்லியில் 20 சக்தி குறைந்த குண்டுவெடிப்புக்கு காரணம் என்று கைது செய்யப்பட்டவர்.*

**ஹபீப் பாவா மற்றும் ஹனிப் பாகிட்வாலா** - *14 வருட சிறை - கைது செய்யப்பட்டது - 2003 - விடுதலை செய்யப்பட்டது - 2017*

*வழக்கு - 2002 ல் டிபன் பாக்ஸ் குண்டு பேருந்தில் வெடித்த வழக்கு.*

**ஹுசைன் பாசிலி மற்றும் ராபிக் ஷாஹ்** - *12 வருட சிறை - கைது செய்யப்பட்டது - 2005 - விடுதலை செய்யப்பட்டது - 2017*

*வழக்கு - ஷாஹ் இஸ்லாமிய மாணவராக இருக்கும் போது கைது செய்யப்பட்டார், டெல்லி தொடர் குண்டுவெடிப்பின் குற்றவாளிகள் என கைது செய்யப்பட்டார்.*

**ஆறு பேர்** - *11 வருட சிறை - கைது செய்யப்பட்டது - 2003 - விடுதலை - 2014*

*வழக்கு - 2002 அக்ஸர்தம் குண்டுவெடிப்பு வழக்கில் கைது செய்யப்பட்டவர்கள்.*

**இர்ஷத் அலி மற்றும் மௌரிப் கமர்** - *11 வருட சிறை- கைது - 2005 - விடுதலை - 2017*

*வழக்கு - அல்-பத்ர் எனும் குழுவில் உறுப்பினர்கள் என்று கைது செய்யப்பட்டார்கள்.*

**ஒன்பது பேர்** - *10 வருட சிறை - கைது - 2006*

*விடுதலை - 2016 - வழக்கு - மாலேகான் குண்டுவெடிப்பு.*

**அப்துல் வாகித் செய்க்** - *9 வருட சிறை - கைது - 2006- விடுதலை- 2015*

*வழக்கு - 11/07 மும்பை ரயில் குண்டுவெடிப்பு,*

**ஐந்து பேர்** - *9 வருட சிறை - கைது - 2007 - விடுதலை - 2016.*

*வழக்கு - தடைப்பட்ட ஹுஜி குழுவை சார்ந்தவர்கள் என்றும், பாகிஸ்தான் ஆதரவு முழக்கங்களை எழுப்பினார்கள் என்றும் கைது செய்யப்பட்டவர்கள்.*

**சொஹெப் ஜாஹிர்தார், அப்துல் நய்யிம், னீபீ இம்ரான் கான் மற்றும் சையத் கான்** - *7 வருட சிறை - கைது - 2007 - விடுதலை - 2014*

*வழக்கு - மக்கா மஸ்ஜித் குண்டுவெடிப்பு.*

**ரியாஸ் கான் மற்றும் அப்துல் சையத்** - *7 வருட சிறை - கைது - 2010 - விடுதலை - 2017*

*வழக்கு - மக்கா குண்டுவெடிப்பு வழக்குக்கு பழிவாங்க காவலதிகாரியை கொலை செய்ததாக கைது.*

**17 பேர்** - *7 வருட சிறை - கைது - 2008 - விடுதலை - 2015*

*வழக்கு - சிமி அமைப்பில் இருந்து நாட்டுக்கு எதிராக போரில் ஈடுபட்டவர்கள்.*

**ஹாரூன் ரஷீத், Md. இஃப்திகார், மசூத் அஹ்மத், திலாவர் கான்** - *5 வருட சிறை - கைது - 2005 - விடுதலை - 2010*

*வழக்கு - டெஹ்ராடூனில் இருக்கும் மிலிட்டரி பள்ளியில் தீவிரவாத தாக்குதல் நடத்த திட்டமிட்டனர்.*

**மஹ்பூப் இப்ராகிம், சபாப் சோப்தார்** - *5 வருட சிறை - கைது - 2006 - விடுதலை- 2011*

வழக்கு - டெல்லியில் உள்ள IIT மீது தீவிரவாத தாக்குதலை நடத்த முயற்சித்தார்கள் என்று கைது.

இப்படி கைது செய்யப்பட்டு அப்பாவி என்று கூறி விடுவிக்கப்பட்ட எவருக்கும் எந்த வித இழப்பீடும் கிடையாது. பொய்யான குற்றச்சாட்டின் பெயரில் 23 வருடங்கள் வரை தங்கள் வாழ்வை இழந்தவர்கள் இருக்கிறார்கள். இந்த நிலையை கொண்டு வந்ததற்கே நமது நீதிமன்றங்கள் குற்ற உணர்வை கொண்டிருக்க வேண்டும்.

ஆனால், உச்சநீதிமன்றத்தில் அக்ஸர்தம் குண்டுவெடிப்பில் விடுதலை செய்யப்பட்ட ஆறு பேர் இழப்பீடு கேட்டு தொடர்ந்த வழக்கில் இது “ஓர் மோசமான முன்மாதிரியாக” மாறி விடும் என சொல்லியது. இந்நாட்டில் நீதிமன்றங்களே பாசிச சிந்தனையில் மூழ்கியிருக்கும் போது இந்தியாவில் இருக்கும் முஸ்லிம்கள் யாரை தான் நம்புவது?.

***(TOI 11/08/17)***

**அபூசித்திக்**

**வைகறை வெளிச்சம் வாசகர்கள் தங்களது சந்தாக்களை புதுப்பித்துக் கொள்ளுமாறு அன்போடு கேட்டுக் கொள்கிறோம்.**



# பாப்ரிமஸ்ஜித் தீர்ப்பு குறித்த சிறப்பு பேட்டி

# வழக்கறிஞர் லஜபதி ராய்

பாப்ரி மஸ்ஜித் தீர்ப்பு குறித்த சிறப்பு பேட்டி ஒன்று வேண்டி வழக்கறிஞர் லஜபதி ராய் அவர்களிடம் சென்றிருந்தோம். அவர் "போர்குரல்" என்ற வளதலை சேனலுக்கு நான் ஒரு பேட்டிக் கொடுத்துள்ளேன். அதை எடுத்துக் கொள்ளுங்கள் என்று கூறினார். அந்த பேட்டியை அப்படியே இங்கே தருகின்றோம்;

**கேள்வி: பாபர் மசூதி வழக்கு கடந்த வந்த பாதை குறித்த உங்கள் பார்வை என்ன?**

பதில்: ராம்ஜென்மஸ்தான். ராமர் பிறந்த இடம் அதுதான் என்று தீர்ப்பின் பின் இணைப்பில் தான் சொல்லப்பட்டுள்ளது. ஆனால் பின் இணைப்பில் சொல்லப்பட்டுள்ள இந்த கருத்தை நான்கு நீதிபதிகள் ஒத்துக்கொள்ளவில்லை. இது ஒருமனதான தீர்ப்பு என்று சொல்ல முடியாது. அந்த நான்கு நீதிபதிகளும் பின் இணைப்பில் உள்ளவைகளை எங்களுடைய தீர்ப்பு இல்லை என்று சொல்லுகிறார்கள்.

மேலும் எல்லா உச்ச நீதிமன்ற தீர்ப்புகளிலுமே அந்த தீர்ப்பை யார் எழுதியது என்ற தகவல் இருக்கும். ஆனால் பாப்ரி மஸ்ஜித் வழக்கு குறித்த இந்த இறுதித் தீர்ப்பை யார் எழுதியது என்றே தெரியவில்லை. எந்த நீதிபதி இந்த தீர்ப்பை எழுதினார் என்ற தகவல் ரகசியமாகவே வைக்கப் பட்டுள்ளது.

பெரும்பாலும் எல்லோரும் என்ன சொல்கிறார்கள் என்றால் “இது நீதிபதி சந்திர சூட்” அவர்களுடைய தீர்ப்பு என்று சொல்கிறார்கள். ஆனால் அது உண்மையா என்று உறுதியாகத் தெரியவில்லை. அதை அவர்களே சொன்னால் தான் உறுதியாக தெரியும்.

இந்த தீர்ப்பு யார் எழுதியது என்ற தகவல் ரகசியம் காக்கப்படுவதன் காரணம் “இப்படி ஒரு தீர்ப்பை எழுதியது எழுதியவருக்கு தர்மசங்கடத்தை கொடுத்திருக்கலாம்”. ஏனென்றால் இந்த தீர்ப்பின் சில பகுதிகள் நல்ல விஷயத்தை சொல்லியிருந் தாலும், தீர்ப்பின் இறுதி பகுதி நிச்சயமாக சட்டத்தின் ஆட்சியை நிறுவுவதாக இல்லை. இந்த தீர்ப்பில் சில வருடங்களை குறிப்பிட்டு முக்கியமாக சொல்லியிருக்கின்றார்கள்.

1856-57இல் அந்த பகுதியில் ஒரு பெரிய கலவரம் ஏற்படுகிறது. அப்போதிருந்த ஆங்கிலேய ஆட்சியின் போது மசூதியின் வெளிமுற்றத்தையும், உள்பகுதியையும் தனித்தனியாக பிரிக்கிறார்கள். உள்பகுதியில் இஸ்லாமியர்கள் தங்கள் வணக்க வழிபாடுகளில் ஈடுபட்டு வந்தனர். வெளிப்பகுதியில் அங்கு தான் ராமர் பிறந்தார் என்று சொல்லி கலவரம் ஏற்பட்டதால் பாப்ரி மஸ்ஜித் - இன் உள்பகுதியையும், வெளிப்பகுதியையும் பிரிக்கும் விதமாக ஒரு சுவர் எழுப்பப்பட்டது. 1992இல் மசூதி இடிக்கப்படும் வரை அந்த சுவர் இருந்தது.

அதன் பின் சுதந்திர இந்தியாவிற்கு பிறகு கே.கே. நய்யார் என்பவர் மாவட்ட ஆட்சியராக இருக்கும் போது அந்த பகுதியின் “பைராஹி” என்று அழைக்கப்படுகின்ற ராம பக்தர்களையெல்லாம் ஒன்று திரட்டி 1949ஆம் ஆண்டு டிசம்பர் 21 அல்லது 23ஆம் தேதி சட்ட விரோதமாக பாப்ரி மஸ்ஜிதுக்குள் ராமர் சிலையை நிறுவனதாக தீர்ப்பில் சொல்லப் பட்டுள்ளது.

இதில் முக்கியமான விஷயம் என்னவென்றால் சட்டவிரோதமாக ராமர் சிலையை பாப்ரி மஸ்ஜிதுக்குள் நிறுவினார்கள் என்பதை தீர்ப்பில் சொல்கிறார்கள். ஆனால் சட்டவிரோதமாக ராமர் சிலையை பாப்ரி மசூதிக்குள் வைத்ததற்காக அவர் பணிநீக்கம் செய்யப்பட்டுகிறார். பணி நீக்கம் செய்யப் பட்டவுடன் அந்த பகுதியில் இருந்த “இந்து தீவிரவாத அமைப்புகளுடன்” நெருக்கமான உறவு வைத்திருந்தார். இந்த தகவல்கள் அந்த தீர்ப்பில் சொல்லப்படவில்லை.

1991இல் வழிபாட்டுத்தலங்களுக்கான சிறப்புச் சட்டம் ஒன்று இயற்றப்பட்டது. இந்த சட்டமும் இந்த தீர்ப்பில் முக்கியத்துவம் பெறுகிறது. 1992, டிசம்பர் 6 அன்று பாப்ரி மஸ்ஜித் இடிக்கப்பட்டது. அது ஒரு சதித்திட்டம் என்று வழக்கு பதியப்பட்டது. அது வெறுமனே சிறு நிகழ்வு கிடையாது.

இந்த பாப்ரி மஸ்ஜித் இடிப்புக்கு முன்பு பார்த்தீர்கள் என்றால் 1991இல் இயற்றப்பட்ட வழிபாட்டுத்தலங்களுக்கான சிறப்பு சட்டமும், அதற்கு முன்பு கல்யான் சிங் அவர்கள் ஆட்சியில் இருந்த போது உச்சநீதிமன்றத்தில் ஒரு உறுதிமொழி கொடுக்கிறார். “இந்த இடம் எப்படி இருந்ததோ அப்படியே இனியும் இருக்கும்” என்று.

ஆனால் அந்த உறுதிமொழியையும் மீறி 1992ல் பாப்ரி மஸ்ஜித் இடிக்கப்படுகிறது. அதற்கு பின் ஒரு நாள் முழுவதும் கல்யான் சிங் அவர்கள் நீதிமன்ற அவமதிப்பின் காரணமாக திகார் சிறையில் வைக்கப்படுகிறார்.

தீர்ப்பில் பாப்ரி மஸ்ஜித் இடிக்கப்பட்டது தவறு என்று சொல்லப்பட்டுள்ளது.

அதே போல வழிபாட்டுத்தலங்களுக்கான சிறப்பு சட்டம் 1991 இல் பாப்ரி மஸ்ஜித் - ராம்ஜென்மஸ்தான் நிலம் சம்பந்தப்பட்ட பிரச்சனை மட்டும் விதிவிலக்கு என்று சொல்லப்பட்டுள்ளது.

தீர்ப்பில் இந்த சட்டத்தின் வழியாக என்ன சொல்கிறார்கள் என்றால், நமது அரசியலமைப்புச் சட்டம் என்பது மதசாப்பற்றது. எதிர்காலத்தில் காசியிலோ, மதுராவிலோ இதேப்போன்ற பிரச்சனைகளை கிளப்பினால் அது மூன்று வருட தண்டைக்குரிய குற்றம் என்றும், 1947இல் இந்தியா சுதந்திரம் பெறும் போது வழிபாட்டுத்தலங்கள் எப்படி இருந்ததோ அப்படியே இருக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. இந்த சட்டத்தை மையமாக வைத்து தீர்ப்பில் சில பக்கங்கள் சொல்லப்பட்டுள்ளது. அது முக்கியமான பக்கங்கள் என்று நான் கருதுகின்றேன்.

அதுபோக இந்த தீர்ப்பில் நிறைய தவறுகள் இருக்கின்றது 1992இல் A crowd had demolished the Temple - ஒரு கூட்டம் மசூதியை இடித்தது என்று குறிப்பிட்டுள்ளார்கள். ஆனால் மசூதியை இடித்தது சட்டவிரோத கும்பல்.

அதேபோல இந்த தீர்ப்பில் இன்னொரு முக்கியமான விஷயத்தையும் கருத்தில் கொள்ள வேண்டும். கிஷிமி இன் அகழ்வாராய்ச்சியின் அறிக்கையின் அடிப்படையில் நிறைய பக்கங்கள் செலவிடப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் முக்கியமாக ஒன்றை குறிப்பிடுகிறார்கள். “12ஆம் நூற்றாண்டில் அங்கு கோவில் போன்ற வடிவமைப்பு கொண்ட ஒரு கட்டிடம் இருந்ததற்கான வாய்ப்புகள் இருந்ததாக சொல்கிறார்கள்” ஆனால் அதை உறுதியாக சொல்லவில்லை.

ஆனால் அங்கே ஒரு கல் இருந்துள்ளது. அதில் ஒரு வடிவம் இருந்துள்ளது. அது 12ஆம் நூற்றாண்டில் இருந்த மகாதேவி என்ற புத்த ராணி கட்டிய ஒரு கோவிலான “தர்ம சக்கர ஜீன விஹாரா” என்ற கோவில் இருக்கின்ற கட்டுமானத்தின் வடிவத்தை ஒத்ததாக இருக்கின்றது.

இந்த அறிக்கைப்படி பார்த்தால் 12ஆம் நூற்றாண்டைச் சார்ந்த ஒரு புத்தமதக் கோவிலோ அல்லது மடாலயமோ அங்கே இருந்திருப்பதற்கான வாய்ப்பு இருக்கின்றது. இவைகளைத் தவிற வேறு எந்த வலுவான ஆதாரங்களும் அகழ்வாராய்ச்சியில் கிடைக்கவில்லை. இதை உச்ச நீதிமன்றமும் ஏற்றுக் கொள்கிறது. அதுமட்டுமில்லாமல் 12ஆம் நூற்றாண்டிற்கும் 16ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலக்கட்டத்தில்

நிறைய மாற்றங்கள், சமூக மாற்றங்கள் நிகழ்ந்திருக்கலாம். ஆக இந்த 400 வருட காலக்கட்டத்தை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். ஒருவேளை அந்த 400 வருட காலக்கட்டத்தின் போது அங்கே கோவில் இருந்தது என்று நாம் அனுமானித்தால் கூட அதை பாபர் இடித்தார் என்பதற்கு எந்த சாட்சியும் இல்லை என்பதையும் உறுதி செய்கிறார்கள்.

ஆக, அகழ்வாராய்ச்சியின் முடிவுகளின் படி அங்கு கோவில் இல்லை. அதை பாபர் இடிக்கவில்லை என்று தெளிவுபடுத்திவிடுகிறார்கள்.

மேலும் மசூதியின் வெளிமுற்றம் மட்டும் 1950 முதல் தொடர்ச்சியாக இந்துக்களின் கைகளில் இருக்கிறது என்றும் சொல்கிறார்கள். மசூதியின் உட்பகுதியில் தொடர்ந்து இஸ்லாமியர்கள் வழிபட்டு வந்தனர் என்றும் சொல்கிறார்கள்.

இதனடிப்படையில் பார்த்தால் கூட மசூதி இருந்த இடம் இஸ்லாமியர்களால் வழிபட்டு வந்த இடமாகவும், உள்ளே ராமர் சிலை வைத்தது கூட சட்ட விரோதமாகத்தான் வைக்கப்பட்டது என்று தொடர்ச்சியாக சொல்லிவிட்டு இறுதியாக "இந்த இடத்தில் ராமர் கோவில் கட்டிக்கொள்ள அனுமதிக்கின்றோம். என்று சொல்லியது தீர்ப்பின் மேற்கண்ட கருத்துக்களுக்கு முரணாகிவிடுகிறது.

தீர்ப்பின் கடைசி இரண்டு பக்கங்களை பொருத்தவரையில் அதற்கு முந்தைய பக்கங்களில் அவர்கள் சொல்லிய, "நாங்கள் இந்திய அரசியலமைப்பு சட்டங்களின் மீது முழு நம்பிக்கை வைத்துள்ளோம், இது மதசார்பற்ற அரசியலமைப்பு சட்டம், இந்த அரசியலமைப்பு சட்டத்தின் மீது தான் உறுதிமொழி எடுத்திருக்கின்றோம், போன்றவை களெல்லாம் இந்த கடைசி இரண்டு பக்கங்களிலும் நீர்த்து போய்விடுகிறது.

பாப்ரி மஸ்ஜித் விவகாரம் என்பது இந்தியாவில் நடந்த ஒரு அரசியல் நிகழ்வாக மட்டும் கருத முடியாது. ஏனென்றால் பாப்ரி மஸ்ஜித் இடிக்கப்பட்ட அதே காலக்கட்டத்தில் பங்களாதேஷில் ஆயிரக் கணக்கான கோவில்கள் இடிக்கப்பட்டது. அதை தஸ்லிமா நஸ்ரின் என்பவர் "லஜா" என்ற தன்னுடைய நாவலில் கூறியுள்ளார். இதுபோல உலகம் முழுவதும் உள்ள இந்து வழிபாட்டுதலங்களுக்கு ஒரு பெரிய அச்சுறுத்தலாக இருந்தது பாப்ரி மஸ்ஜித் இடிப்பு நிகழ்வு. ஆக பாப்ரி மஸ்ஜித் இடிப்பு நிகழ்வு என்பது இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் தோல்வி என்று சொல்லலாம். இந்த அரசியலமைப்புச் சட்டத்தின் தோல்வியை சரி செய்ய வேண்டுமென்றால், அதே அரசியலமைப்புச் சட்டத்தின் வழியாகத்தான் தீர்ப்பை சொல்லியிருக்க வேண்டுமே தவிர அங்கே ராமர் பிறந்ததாக பெரும்பான்மை மக்கள் நம்புகிறார்கள் என்று தீர்ப்பை வழங்கியது பிற்போக்குத்தனமானது.

அமெரிக்காவில் கிருஷ்ணர் கோவில் இல்லாத நகரங்களே இல்லை என்று சொல்கிறார்கள். அவர்கள் கிருஷ்ணர் கோவிலை இடித்துவிட்டி சர்ச் கட்டினால் அந்த நாட்டை நாம் அநாகரிகமான நாடு என்று தான் சொல்லுவோம்.

இந்திய சுதந்திரத்திற்கு பிறகு அங்கே மசூதிதான் இருந்தது. 1992இல் நம் எல்லோருடைய கண் முன்னால் அந்த மசூதி இடிக்கப்பட்டது. இடிக்கப் பட்ட இடத்தில் மீண்டும் மசூதியை கட்ட வேண்டும் என்று சொல்வதற்கு பதிலாக, பெரும்பான்மையினரின் மத நம்பிக்கை என்ற பெயரில் வேறு இடத்தில் நிலம் கொடுத்து அங்கே மசூதி கட்டிக்கொள்ள சொல்வது அநாகரிகமான செயல்.

இந்த தீர்ப்பில் இருக்கும் ஒரே ஒரு நல்ல விஷயம் என்னவென்றால் தீர்ப்பில் சொல்லப்பட்ட 1991 வழிபாட்டுத்தலங்களுக்கான சிறப்பு சட்டத்தின் அடிப்படையில் காசியிலேயோ, மதுராவிலோ இதேபோன்று பிரச்சனையை எழுப்ப முடியாது. ஏனென்றால் இந்த தீர்ப்பை எல்லா இந்து அமைப்புகளும் வரவேற்றிருக்கிறார்கள்.

*கேள்வி; வழிபாட்டுத்தலங்களுக்கான சிறப்புச் சட்டம் 1991 இன் படி வேறு எங்கும் இவர்களால் இந்த பிரச்சனையை செய்ய முடியாது என்று கூறினீர்கள். ஆனால் சமூகவலைதளங்களில் "எங்களுடைய அடுத்த இலக்கு காசி, மதுரா தான்" என்றெல்லாம் பரப்புகிறார்கள். அப்படி அவர்கள் செய்தால் அவர்களுக்குரிய தண்டனைகள் கிடைக்குமா? அதேப்போல 1992இல் நடந்த பாப்ரி மஸ்ஜித் இடிப்பு சம்பவத்தை கிரிமினல் வழக்காக, தனியாக நடத்துவோம் என்று கூறியுள்ளார்களே! அதுப்பற்றி...?*

பதில்: காங்கிரஸ் ஆட்சியில் இருந்தால் இந்த தீர்ப்பு எப்படி இருந்திருக்கும் என்ற கேள்வியைப் போலத்தான் இதுவும். எஸ்.ஆர்.பொம்மை வழக்கில் மதசார்பின்மை

சொல்லப்பட்டுள்ளது. இதைத்தான் இந்த வழக்கிலும் முன் தீர்ப்பாக கோடிட்டு காட்டுகிறார்கள். அதை கோடிட்டு காட்டியதால் இந்த 1991 வழிபாட்டுத்தலங்களுக்கான சிறப்புச் சட்டத்தைப் பற்றி சொல்லப்பட்டுள்ளது. இதை சொல்லியுள்ளதால் தான் காசி, மதராவிற்கு இதை பயன்படுத்த முடியாது என்று சொல்கிறேன். அது ஒரு ஆறுதலான விஷயம் அவ்வளவுதான். தீர்ப்பை முழுமையாக படித்த யாரும் இதை பயன்படுத்தி காசி, மதுராவை கைப்பற்றுவொம் என்று சொல்ல முடியாது.

*கேள்வி: 900 பக்கங்கள் நான்கு நீதிபதிகள் ஒருமித்தமாக எழுதியுள்ளனர். மீதியுள்ள பக்கங்களை ஒரேயொரு நீதிபதி வரையறை செய்துள்ளார் என்று சொல்கிறீர்கள். அப்படியென்றால் அந்த 900 பக்கங்கள் தீர்ப்பு ஐந்து நீதிபதிகளின் ஒருமித்த கருத்தாக வந்துள்ளதா?*

பதில்: 929 பக்கங்கள் ஐந்து நீதிபதிகளும் ஒருமித்த கருத்தோட தான் எழுதியிருக்கிறார்கள். மீதமுள்ள 116 பக்கங்கள் என்பது பின் இணைப்பாக ஒரு நீதிபதி எழுதியிருக்கிறார். அந்த 116 பக்கங்கள் கொண்ட பின் இணைப்பிற்கு மீதமுள்ள நான்கு நீதிபதிகளும் ஒப்புதல் அளிக்கவில்லை. இதில் வேடிக்கை என்னவென்றால் அந்த பின் இணைப்பை கொடுத்த அந்த ஒரு நீதிபதி யார் என்றும் அதில் சொல்லப்படவில்லை. எந்த நீதிபதி இந்த தீர்ப்பை எழுதினார் என்பதும் சொல்லப்படவில்லை.

*கேள்வி: இந்த தீர்ப்பை பற்றி மக்கள் பேசுவதற்கு தயங்குகிறார்கள். பெரும்பாலும் கருத்து சுதந்திரம் இருக்கிறதா? இல்லையா? என்ற நிலை இருக்கிறது. இதே போன்று கட்டுப்பாடுகளுடன் ஏதாவது தீர்ப்புகள் வந்திருக்கின்றதா? இதுகுறித்து உங்களுடைய கருத்து என்ன?*

பதில்: இன்றைய நிலையில் நீங்கள் சொல்வது முற்றிலும் உண்மைதான். உச்ச நீதிமன்றம் சொல்வதாலேயே ஒரு தீர்ப்பு சரியானது என்று ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற அவசியமில்லை. எந்த தீர்ப்பையும் நாம் விமர்சிக்கலாம். அது கருத்துச்சுதந்திரத்திற்கு உட்பட்டதுதான். வழக்கறிஞர்கள் மட்டுமில்லாமல் எல்லா சாதாரண மனிதர்களும் பேசலாம். அவதூறு சொல்லாமல், நீதிபதிகளை ஒறுமையில் விமர்சிக்காமல் தீர்ப்பை விமர்சிக்கலாம்.

இருந்தாலும் சஞ்சீவ் பட், பா.சிதம்பரம் போன்றோர்கள் சிறையில் இருப்பதைக் கவனித்த நிறைய பேர் ஒரு விதமான அச்ச உணர்வோடு இருக்கின்றார்கள் என்பது உண்மைதான்.


1976இல் நடந்த ஏ.டி.எம்.ஜபல்பூர் என்ற புகழ்பெற்ற வழக்கு ஒன்றில் அடிப்படை உரிமையை ரத்து செய்ய முடியுமா? முடியாதா? என்ற ஒரு கேள்வி எழுந்தது. அப்போதும் இதே போல ஐந்து நீதிபதிகள் கொண்ட அரசியலமர்வு நடைபெற்றது. அப்போது நான்கு நீதிபதிகள் அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகளை ரத்து செய்ய முடியும் என்று கூறினார்கள். கண்ணன் என்கின்ற ஒரு நீதிபதி மட்டும் ரத்து செய்ய முடியாது என்று கூறினார். இன்றைக்கு இருக்கக்கூடிய ஆட்சியாளர்கள் அனைவரும் அன்றைக்கு அந்த தீர்ப்பை கடுமையாக விமர்சனம் செய்தார்கள். ஆக அவசரக்காலக்கட்டத்தில் கூட தீர்ப்பை விமர்சிக்கும் கருத்துரிமை இருந்தது என்பதை நாம் இங்கு முக்கியமான நிகழ்வாக குறிப்பிட முடியும்.


இன்றைக்கு அவர்கள் சொல்கிறார்கள், மக்களெல்லாம் முதிர்ச்சியோடு நடந்து கொண்டார்கள். யாரும் போராடவில்லை என்று. இதே முதிர்ச்சியோடு அன்றைக்கு 1992 டிசம்பர் 6ல் அவர்கள் நடந்து கொண்டிருந்தால் இந்த வழக்கே இருந்திருக்காது.

வழக்கறிஞர்

**லஜபதி ராய்** அவர்கள்

"போர் குரல்" என்ற யூடியூப் சேனலுக்கு அளித்த பேட்டியிலிருந்து.





# இஸ்ரேலிய மென்பொருளின் வழி உளவுப் பார்க்கப்பட்ட வாட்ஸ்ஆப்

அன்பே! நலமா? என்ன சாப்பிட்டாயா? எனத் தொடங்கி உங்கள் துணையிடம் மொபைல் போனில் நீங்கள் பேசும் சகல உரையாடல்களும் சரி. அல்லது முக்கிய விஷயங்களை உங்கள் நண்பரிடமோ, வழக்கறிஞரடமோ, வேறு யாரிடமோ மொபைல் போனில் பேசுகிறீர்கள் என்றாலும் சரி. இவை அனைத்துமே இந்த டிஜிட்டல் உலகத்தில் ஒட்டு கேட்கப்படுகின்றன அல்லது திருடப்படுகின்றன. இப்படி உளவு பார்ப்பதற்காகவே இணையத்தில் பல மென்பொருள்கள் இயங்குகின்றன. அவற்றில் சில இலவசமாக கிடைக்கின்றன. சில குறைந்த விலையில் கிடைக்கின்றன. சிலவற்றின் விலை அதிகம். பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை கண்காணிப்பதற்காகவும், நிறுவனங்கள் தங்கள் ஊழியர்களை பின்தொடர்ந்து அவர்களின் செயல்பாடுகளை கவனிப்பதற்கும், மனஸ்தாபம் கொண்டு பிரிந்து சென்ற தம்பதிகள் ஒருவர் மற்றொருவரை உளவு பார்ப்பதற்கும் இவை பயன்படுத்தப்படுகின்றன.

இஸ்ரேலிய நிறுவனமான NSO குழுமம் இந்த வேலையைத்தான் செய்கிறது. இதனுடைய உளவு மென்பொருளை பயன்படுத்த வேண்டுமென்றால் கோடிகளில் பணம் கொடுக்க வேண்டும். இந்நிறுவனத்தின் பெகாஸஸ் என்ற உளவு மென்பொருளை பயன்படுத்தி 121 இந்தியர்களின் வாட்ஸ்அப் கணக்குகள் திருடப்பட்டுள்ளன என்ற செய்தி அண்மையில் வெளிவந்து இந்தியர்கள் அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

### வாட்ஸ்அப் மூலம் வேவு பார்க்கப்பட்ட இந்தியர்கள்:

*அக்டோபர் 29 அன்று NSO குழுமத்திற்கு எதிராக கலிபோர்னியா நீதிமன்றத்தில் வழக்கை பதிவு செய்தது ஃபேஸ்புக். (பேஸ்புக் நிறுவனத்திற்கு சொந்தமானது தான் வாட்ஸ் அப் செயலி). அதில் பெகாஸஸ் மென்பொருளை பயன்படுத்தி வாட்ஸ்அப் பயனர்களின் கணக்குகள் திருடப்பட்டுள்ளன என்று குற்றம் சாட்டியது. 20 நாடுகளை சேர்ந்த ஆயிரத்து 400 நபர்களின் வாட்ஸ்அப் கணக்குகள் திருடப்பட்டுள்ளன. இந்தியாவில் 121 நபர்கள் இந்த பாதிப்புக்கு ஆளாகியுள்ளனர். கிட்டத்தட்ட 12 நாட்கள் அதாவது ஏப்ரல் 29 முதல் மே 10 வரை ஹேக்கிங் நடைபெற்றுள்ளது. இந்த நேரத்தில்தான் இந்தியாவில் நாடாளுமன்ற தேர்தல் நடந்து கொண்டிருந்தது.*

### யாரெல்லாம் குறிவைக்கப்பட்டார்கள்?

*பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் இடதுசாரி கொள்கையை சார்ந்தவர்கள். வழக்கறிஞர்கள்,*



மனித உரிமைப் போராளிகள் மற்றும் தலித் போராளிகள் ஆகியோர்களின் மொபைல் போன் கணக்குகள் வாட்ஸ்அப் வழியாக திருடப்பட்டு உளவு பார்க்கப்பட்டுள்ளது.

குறிப்பாக இவர்கள் அனைவரும் 2018 பீம கொரைகான் கலவர வழக்கில் கைது செய்யப் பட்டவர்கள். பத்திரிக்கை துறையை சேர்ந்தவர்களின் கணக்குகளும் திருடப்பட்டுள்ளன. காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பிரியங்கா காந்தியின் மொபைல் கணக்கும் பாதிப்புக்கு உள்ளானதாக காங்கிரஸ் கூறியது. வாட்ஸ் அப்பில் இருந்து எச்சரிக்கை செய்தி அவருக்கு வந்தது என்றும் கூறியது. இவர்களையெல்லாம் உளவு பார்க்க விரும்புவது யார்? யாருக்கு அந்த தேவை உள்ளது? இதெல்லாம் சொல்லி தெரிய வேண்டியது இல்லை.

இவ்விவகாரம் வெளியே தெரிந்த உடன் இது குறித்து ஏன் எங்களுக்கு முன்னரே தகவல் தெரிவிக்கவில்லை என்று வாட்ஸ்அப் நிறுவனத்தை கேட்டது மத்திய அரசு. தாக்குதல் குறித்து மே மாதத்தில் அனுப்பிய குறிப்பையும் செப்டம்பர் மாதத்தில் அனுப்பிய கடிதத்தையும் வெளியிட்டது பேஸ்புக்.

மே மாதத்தில் அனுப்பிய செய்தி தொழில் நுட்பக் கோளாறு என்று இருந்ததே தவிர தெளிவாக குறிப்பிடப்படவில்லை என்று கூறியது மத்திய அரசு. வாட்ஸ் அப்பிடம் கேள்வி கேட்ட மத்திய அரசு NSO குழுமத்திடமோ அதை பற்றியோ எந்த கருத்தையும் இதுவரை தெரிவிக்கவில்லை.

### NSO குழுமம் என்ன கூறுகிறது?

*அரசிற்கும் அரசு நிறுவனங்களுக்கும் மட்டுமே எங்களின் உளவு மென் பொருளை விற்பனை செய்கிறோம். எங்களின் நோக்கம் இதன் மூலம் தீவிரவாதத்தையும் குற்றத்தையும் கட்டுப்படுத்த வேண்டும் என்பதே என்று கூறுகிறது NSO. யாருக்கு விற்பனை செய்கிறோம் என்ற விபரத்தை NSO வெளியிடாது. ஏனெனில் இஸ்ரேலிய அரசு அதை தடை செய்துள்ளது.*

### எப்படி பெகாஸஸ் உளவு மென்பொருள் மொபைலில் பதிவிறக்கம் (Install)ஆகிறது?

வாட்ஸ் அப்பில் உள்ள வீடியோ கால் வசதியை பயன்படுத்தி ஒருவருக்கு நீங்கள் அழைப்பை விடுத்தாலே போதும், எதிர்முனையில் இருப்பவர் அதற்கு பதில் அளித்தாலும் அளிக்காவிட்டாலும் உங்களது மொபைல் போனில் பெகாசஸ் தானாகவே பதிவிறக்கம் ஆகிவிடும். அதன்பின் பயனாளியின் அனைத்து செயல்பாடுகளும் கண்காணிக்கப்பட்டு திருடப்படுகிறது.

உங்களுடைய Contacts, Calendar events, phone calls, messages, password இவை அனைத்தும் திருடப்படுகிறது. கேமரா அல்லது மைக்ரோ போனை அதுவே ஆன் செய்து உங்களை உளவு பார்க்கிறது. வாட்ஸ் அப்பை மட்டும்தான் NSO உளவு மென் பொருளால் தாக்க முடியும் என்றில்லை. அதனால் எந்த செயலியையும் தாக்க முடியும். இந்தியாவில் 121 பேர் மட்டும்தான் இந்த பாதிப்புக்கு உள்ளானார்களா அல்லது அதன் எண்ணிக்கை அதிகமா என்பது நமக்குத் தெரியாது. ஏனெனில் பதிவிறக்கம் ஆகி தகவல்களை கறந்து விட்டு எந்த தடயமும் இல்லாமல் அழிக்கப்பட்டு விடுகிறது பெகாசஸ் என்று கூறுகிறார்கள் நிபுணர்கள்.

ஜமால் கஷோகி கொலையிலும் பெகாசஸ் பயன் படுத்தப்பட்டுள்ளது. இவரது நண்பரான அப்துல் அசீசின் மொபைல் போனை ஹேக் செய்ய சவுதி அரேபியா இதனை விலைக்கு வாங்கியுள்ளது. ஜமால் கஷோகி கொலையில் முக்கிய பங்கு வகித்துள்ளது இந்த பெகாஸஸ் மென்பொருள் என்று கூறுகிறது நியூயார்க் டைம்ஸ். Q Cyber Technologies என்ற பெயரிலும் NSO குழுமம் அழைக்கப்படுகிறது. இதன் உரிமையாளர் ஐரோப்பாவில் வசிக்கிறார்.

10 சாதனங்களை ஹேக் செய்ய 4.61 கோடி ரூபாயும் அதற்கான ஏற்பாடுகளை செய்வதற்கு 3.55 கோடி ரூபாயும் செலவாவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. ஹேக்கிங் குறித்த தகவல்களை எங்களுக்கு தெரிவித்தீர்களா இல்லையா என்பது இங்கே கேள்வி அல்ல. இஸ்ரேலிய மென்பொருளின் வழி இந்தியர்களை உளவு பார்க்க கோடிக்கணக்கான ரூபாயை செலவிட்டது யார்? எந்த நிறுவனம்? என்பதே கேள்வி.

*தகவல்கள் ஆதாரம்: Moneycontrol.com, The Hindu,India Today.in, Scroll.in, Thewire.in*

**அபூஹாசின்**

# 4

# அன்றும், இன்றும் தொடரும் தீண்டாமை!

திருமணம். ஒரு ஆணும் பெண்ணும் ஒழுக்கமான முறையில் இணைந்து தங்களது சந்ததிகளை உருவாக்கவும், சமூகத்தில் தங்களது குடும்பவியலை நிலை நாட்டவும் செய்யப்படும் ஒரு நிகழ்வாகவே உலகம் முழுவதும் பார்க்கப்படுகிறது. திருமண உறவில் இணையும் ஆணுக்கும் பெண்ணுக்கும் பிடித்து விட்டால், ஆணினுடைய, பெண்ணினுடைய குடும்பத்தார்கள் சம்மதித்து விட்டால் அவர்களது இல்லற வாழ்க்கை இனிதாக தொடங்கிவிடும்.

ஆனால் இந்தியாவில் மட்டும் திருமணம் என்பது முற்றிலும் மாறுபட்ட ஒரு நிகழ்வாகவும், தங்களது சாதிய அடையாளத்தை, கலாச்சாரத்தை தக்கவைத்துக் கொள்வதற்கான, அடுத்த தலைமுறைக்கு பத்திரமாக கடத்துவதற்கான ஒரு சாவியாக பார்க்கப்படுகிறது.

நாடார் மேட்ரிமோனி, செட்டியார் மேட்ரிமோனி என்ற சாதியின் பெயரால் திருமணத்திற்கு வரன் பார்க்கும் தளங்கள் இந்த 21ஆம் நூற்றாண்டிலும் செயல்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றன.


இந்தியாவில் மட்டும் தான் ஒரு ஆண், ஒரு பெண்ணை மணந்துக் கொள்வதற்கான தகுதியாக “சாதி” எனும் சாபக்கேடு முன்னிறுத்தப்படுகிறது. ஆனால் இந்த சாதீய கட்டமைப்பெல்லாம் மீறி அங்கொன்றும், இங்கொன்றுமாக கலப்புத் திருமணங்கள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. அப்படி கலப்பு திருமணங்கள் நடந்தால் இந்த சாதி ஒழிந்து விடும் என்ற நம்பிக்கையும் சமூகத்தின் மீது அக்கறையுள்ளவர்களின் மனதில் ஏதோ ஓர் ஓரத்தில் ஒட்டிக் கொண்டுதான் இருக்கின்றன.

கடந்த காலங்களில் அப்படி கலப்பு திருமணங்களை செய்துக் கொண்டவர்களுக்கு ஏற்பட்ட கொடூரங்களை எல்லாம் கவனித்தால் சாதியை ஒழிக்க கலப்பு திருமணங்கள் மட்டும் போதாது என்பது புரியவரும்;

## சம்பவம் எண் - ஒன்று

கர்நாடகாவின் லக்காலாகட்டி என்ற கிராமத்தைச் சார்ந்தவர்கள் ரமேஷ் மாதர் - கங்கம்மா. இவர்கள் இருவரும் இந்து மதத்தின் வெவ்வேறு சாதிய பிரிவுகளை சார்ந்தவர்கள். நான்கு வருடங்களுக்கு முன் குடும்பத் தார்களின், சமூகத்தார்களின் எதிர்ப்பையும் மீறி கலப்பு திருமணம் செய்துக் கொண்டனர்.

திருமணம் செய்துக் கொண்டு அந்த கிராமத்தை விட்டு வெளியேறி கர்நாடகாவின் வேறொரு பகுதியில் வாழ்ந்து வந்துள்ளனர். இவர்களுக்கு இரண்டு குழந்தைகளும் உண்டு. இன்னிலையில் கடந்த நவம்பர் மாதம் தங்களுடைய சொந்த ஊருக்கு வந்துள்ளனர். பழையதையெல்லாம் ஊர் மக்கள் மறந்திருப்பார்கள். குடும்பத்தார்களை சந்திக்கலாம் என்ற எண்ணத்தில் ஊருக்குள் நுழைந்த தம்பதிக்கு காத்திருந்தது அதிர்ச்சி!




அவர்களை பார்த்தவுடனேயே அந்த ஊரின் உயர்சாதிக்காரர்களில் சிலர் அவர்கள் மீது கற்களை எறிந்து தாக்கியுள்ளனர். பெரிய பெரிய கற்களை கொண்டு தாக்கியதில் சம்பவ இடத்திலேயே அந்த தம்பதியினரின் உயிர் பிரிந்துள்ளது.

**(www.indiatimes.com - 8/11/2019)**

## சம்பவம் எண் - இரண்டு

கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூர் பகுதியை சார்ந்தவர் நந்தீஷ். இவர் அதேப்பகுதியைச் சார்ந்த சுவாதி என்ற பெண்ணை சாதிமறுப்பு கலப்பு திருமணம் செய்துக் கொண்டார். ஆதலால் இந்த திருமணத்திற்கு சுவாதியின் குடும்பத்தார்கள் கடுமையான எதிர்ப்புகளை தெரிவித்து வந்துள்ளனர்.

இந்நிலையில் சுவாதியின் தந்தை சீனிவாசன் அந்த தம்பதியினரை அழைத்து சமாதானம் ஆகி விடலாம். இனி எந்த பிரச்சனையும் செய்யமாட்டோம், கோவிலுக்கு சென்று விட்டு வீட்டிற்கு செல்லலாம் என்று கூறி தன் உறவினர்களோடு காரில் அழைத்துச் சென்றுள்ளார்.

பின்னர் தந்தையை நம்பி வந்த சுவாதியையும், அவரது கணவர் நந்தீஷையும் கர்நாடாகவின் பெலக்வாடி எனும் இடத்தில் வைத்து கை, கால்களை கட்டி காவிரி ஆற்றில் வீசி மூழ்கடித்து கொலை செய்துள்ளனர். சீனிவாசனின் சாதியின் மீது கொண்ட பற்று பெற்ற பிள்ளையையே ஆற்றில் மூழ்கடித்து ஆணவக் கொலை செய்ய தூண்டியுள்ளது என்பதை கவனியுங்கள். இது நடந்தது ஏதோ 2000 ஆண்டுகளுக்கு முன்பல்ல. கடந்த 2018ஆம் வருடம் தான்.

*(புதிய தலைமுறை இணையதளம் - 21/11/2018)*

## சம்பவம் எண் மூன்று

தூத்துக்குடி மாவட்டம் குளத்தூரைச் சார்ந்தவர் சோலைராஜ். இவர் அதே பகுதியில் வசித்து வந்த ஜோதி என்ற பெண்ணை சாதி மறுப்பு கலப்பு திருமணம் செய்துக் கொண்டார். இவர்கள் இருவரும் தலித் சமூகத்தைச் சார்ந்தவர்கள் தான் என்றாலும், அதிலேயே இருவேரு உட்பிரிவு சாதியைச் சார்ந்தவர்கள்.

இவர்களின் இந்த கலப்பு திருமணத்திற்கு ஜோதியின் குடும்பத்தார்கள் மத்தியில் கடுமையான எதிர்ப்பு இருந்து வந்துள்ளது. இந்நிலையில் கடந்த ஜூன் மாதம் இருவரும் தாங்கள் வாழ்ந்து வந்த வீட்டில் வெட்டுக் காயங்களுடன் பிணங்களாக கிடந்திருக்கின்றார்கள்.

கொலை செய்யப்படும் போது ஜோதி மூன்று மாதம் கற்பமாக இருந்திருக்கின்றாள். ஜோதி கற்பமாக இருப்பதை அறிந்த அவரது பெற்றோர்கள் கொலை நடந்த ஒரு வாரத்திற்கு முன்பு வந்து பிரச்சனை செய்துள்ளனர். மேலும் ஜோதியிடம் இருந்த நகைகளையெல்லாம் வாங்கிக் கொண்டு சென்றுள்ளனர்.

இந்த சம்பவம் குறித்து "தீண்டாமை ஒழிப்பு முண்ணனி" தூத்துகுடி தலைவர் சீனிவாசன் பிபிசி தமிழிடம் இப்படிக் கூறினார்;

"நாளுக்கு நாள் சமத்துவம், பொதுவுடைமை குரல்கள் எழுந்து வந்தாலும், மறுபுறத்தில் சாதிய ரீதியிலான கொடுமைகளும் அறங்கேறிய வண்ணம் உள்ளது. ஆணவப்படுகொலைகள் பற்றிய தனிச்சட்டம் இயற்றப்பட்டால் மட்டுமே இதுபோன்ற கொடூரங்கள் கட்டுப்படுத்தப்படும்" என்றார்.

*பிபிசி இணையதளம் 04-07.2019*

## சம்பவம் எண் - நான்கு

மேற்சொன்ன சம்பங்கள் எல்லாம் சாதிமறுப்பு திருமணங்கள் செய்துக் கொண்டதால் மேற்கொள்ளப்பட்ட கொடூரங்கள். ஆனால் பின்வரும் இந்த சம்பவம் இந்து மதத்தின் வரணாசிரமக் கொள்கைகள், தீண்டாமைத் தத்துவங்கள் இந்த 21ஆம் நூற்றாண்டிலும் அடிப்பிசுராமல் பிரயோகிக்கப்படுகிறது என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு.

அரியலூர் மாவட்டம் நம்மங்குணம் கிராமத்தைச் சார்ந்த அருண் ஸ்டாலின் என்பவருக்கும், மணக்குடி கிராமத்தைச் சார்ந்த திவ்யா என்பவருக்கும் திருமணம் நிச்சயக்கப்பட்டது. இருவரும் தலித் சமூகத்தைச் சார்ந்தவர்கள். சொக்கநாதபுரம் வரதராஜ பெருமாள் கோவிலில் திருமணத்தை நடத்த முறையாக கோவிலுக்கான கட்டணங்களை செலுத்தி திருமணத்திற்கான ஏற்பாடுகளை செய்து வந்துள்ளனர்.

இந்நிலையில் அந்த பகுதியின் இந்து முன்னணியரின் தூண்டுதலின் பின்னணியில் ஆதிக்கச் சாதியினர் "அது எப்படி ஒரு தலித் குடும்பத்து திருமணம் இந்த கோவிலில் நடக்கலாம்" என்று திருமண தேதியன்று கோவிலின் வாயிலை ஏழு பூட்டுகளை கொண்டு அடைத்துள்ளனர்.

பின்னர் இந்து அறநிலைத்துறை அதிகாரிகளிடம் புகார் அளிக்கப்பட்டு காவல்துறையினரின் உதவியோடு கோவில் வாயில் திறக்கப்பட்டுள்ளது. ஏதாவது அசம்பாவிதம் நடந்து விடுமோ என்ற அச்சத்தில் காவல்துறையினரின் பாதுகாவலில் அந்த திருமணம் அந்த கோவிலில் நடைபெற்றுள்ளது.

**- New Indian Ecpress**

இரண்டு உள்ளங்கள் இணையும் வாழ்க்கையின் இனிய நிகழ்வான திருமணத்தைக் கூட ஒரு விதமான அச்ச உணர்வோடு, பாதுகாப்புகள் பலப்படுத்தப் பட்ட நிலையில் நடத்த வேண்டிய சூழல் தான் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இன்றும் இருக்கிறது. அதற்கு மேற்சொன்ன சம்பவம் ஓர் உதாரணம்.

ஆக சாதிமறுப்பு திருமணம், கலப்பு திருமணம் போன்றவைகளெல்லாம் சாதியை ஒழிப்பதற்கான தீர்வாக அமையாது என்பதற்கு நிகழ்கால நிகழ்வுகளே நல்ல சான்றுகளாக உள்ளன. காரணம் இங்கே பிரச்சனை திருமணம் செய்துக் கொள்ளும் இரு உள்ளங்கள் இல்லை. அந்த உள்ளங்களில் இருக்கும் சாதியும், அதை ஆணித்தரமாக போதிக்கும் இந்து மதமும் தான். இந்து மதத்தை விட்டு வெளியேறாத வரை உங்களிடம் இருந்து "சாதி" எனும் கறை நீங்காது.

## உங்களுக்கான ஓர் அழகிய முன்மாதிரி

சமகாலத்தில் இந்தியாவில் எப்படி சாதியின் பெயரால் தீண்டாமை கடைபிடிக்கப்பட்டு வருகின்றதோ, அதேப்போல 1440 ஆண்டுகளுக்கு முன்பு குலம், கோத்திரங்கள் பெயராலும், நிறத்தின் பெயராலும் தீண்டாமை கடைபிடிக்கப்பட்டு வந்தது. ஒரு கோத்திரத்தைச் சார்ந்தவர் இன்னொரு கோத்திரத்தில் திருமணம் செய்துக் கொள்ள முடியாது. ஒரு கருப்பர் வெள்ளை இனத்தவரை மணக்க முடியாது. இந்த காலக்கட்டத்தை தான் ஜாஹிலிய்யாவின் காலக்கட்டம்(அறியாமையின் இருள் மண்டிக்கிடந்தக் காலக்கட்டம்) என்கிறது இஸ்லாம்.

இந்த காலக்கட்டத்தில் தான் முஹம்மத்(ஸல்) அவர்கள் இறைத்தூதராக வருகின்றார்கள். அவர்களின் இறைத்தூதுப் பணியின் ஒரு பகுதியாக குலங்களின் பெயராலும், கோத்திரங்களின் பெயராலும், நிறத்தை அடிப்படையாக வைத்தும் கடைபிடித்து வந்த கொடூரங்களை அடியோடு ஒழித்துக் காட்டினார்கள்.

சமகால சாதி வெறியர்களை போல அப்போதைய அரேபியர்களும், கோத்திரப் பெருமை, குலப் பெருமையின் பேரால் படுகொலைகளை நிகழ்த்திக் கொண்டிருந்தனர். அப்போதைய அந்த மக்காவில் இருந்த அனைத்து பிரச்சனைகளும் இப்போதைய இந்தியாவிலும் இருக்கிறது. அதில் பிரதானமானது தான் தீண்டாமை எனும் பிரச்சனை.

அந்த தீண்டாமையை முஹம்மத்(ஸல்) அவர்கள் எந்த கொள்கையைக் கொண்டு முழுமையாக ஒழித்துக் காட்டினார்களோ, அந்த இஸ்லாமிய கொள்கையை இந்திய மக்கள் ஏற்றுக் கொண்டால் மட்டுமே இதிலிருந்து முழுமையாக விடுபட முடியும். அதற்கு சமகாலத்தில் நிகழ்ந்த பின்வரும் நிகழ்வே சாட்சியாக விளங்குகிறது.

## மீனாட்சிபுரம் மதமாற்றமும் - நீங்கள் விரும்பும் நிரந்தர விடுதலையும்

*மீனாட்சிபுரம் மதமாற்றம் சம்பவம் குறித்து கேள்விப்படாத நபர்களே இந்தியாவில் இருக்க முடியாது. அந்த அளவிற்கு இந்தியாவில் தாக்கத்தை ஏற்படுத்திய நிகழ்வுகளில் அதுவும் ஒன்று.*

*நிலம், கல்வி, செல்வம் என எல்லாம் இருந்தும் "இந்து மதம்" எனும் ஓர் மதத்தின் சாதியக் கட்டமைப்பின் பெயரால் இழிநிலையில் நடத்தப்பட்ட அம்மக்கள், இந்து மதத்தை விட்டு வெளியேறாத வரையில் தங்கள் மீது படிந்துள்ள சாதி எனும் இழிநிலை ஒழியாது என்பதை அறிந்து ஒட்டுமொத்தமாக இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டனர்.*

*அப்படி இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட அந்த மக்கள் தற்போது வரை சமூக அளவில் நல்ல அந்தஸ்தில், மரியாடதையுடன் வாழ்ந்து வருகின்றனர். அவர்களை விட்டு அவர்கள் மேல் ஒட்டிக் கொண்டிருந்த தீண்டாமை எனும் கறை முற்றிலும் நீங்கி விட்டது. மீனாட்சிபுரம் இப்போது ரஹ்மத் நகராக கவுரவமாக வாழ்ந்து வருகிறது.*


*சமீபத்தில் நமது வைகறை வெளிச்சம் குழு சார்பாக மீனாட்சிபுரத்தில் அந்த மக்களின் தற்போதைய வாழ்வியல் சூழல் குறித்த ஆய்வு ஒன்று மேற்கொள்ளப் பட்டது. இதில் பல உண்மைகள் வெளி உலகிற்கு தெரியவந்தது. குறிப்பாக பன்னெடுங்காலமாக மீனாட்சிபுரத்தில் மதம் மாறிய பெண்களை பூர்வகுடி முஸ்லிம்கள் திருமணம் செய்துகொள்ள முன்வருவதில்லை (பார்க்க அடிக்குறிப்பு 1) என்ற விமர்சனமும் உடைக்கப்பட்டது. அதை அந்த கிராமத்து மக்களே சொல்கிறார்கள் பாருங்கள்....*

### முஹம்மத் ஈசா

*கேள்வி: நீங்கள் இஸ்லாமிய மார்க்கத்தை ஏற்றுக் கொண்டீர்கள். இப்போது உங்கள் ஊர் மக்களை பூர்வீக முஸ்லிம்கள் திருமணம் செய்துக் கொள்கிறார்களா?*

*பதில்: தமிழகத்தின் அனைத்து ஊர்களிலிருந்தும் முஸ்லிம்கள் எங்கள் கிராமத்திற்கு வந்து எங்கள் மக்களை ஆர்வமுடன் திருமணம் செய்துக் கொண்டு*


**சாதிய தீண்டாமைகளை உடைத்தெறிந்து வெற்றி கண்ட போராளிகளின் வரலாறுகள். வாங்கிப் படியுங்கள். போன்: 81481 28997**























செல்கிறார்கள். தென்காசி, கடையநல்லூர், தென்கோட்டை, பன்பொழி என அனைத்து ஊர் முஸ்லிம்கள் மத்தியிலும் பெண் எடுத்துள்ளோம், பெண் கொடுத்துள்ளோம். அவர்களெல்லாம் இப்போது நல்ல முறையில் வாழ்ந்து வருகின்றனர்.

## முஹம்மது இஸ்மாயில்

*கேள்வி: நீங்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு இப்போது முஸ்லிம்களாக வாழ்ந்து வருகின்றீர்கள். இந்நிலையில் உங்கள் பிள்ளைகள் மற்றும் அவர்களின் திருமணம் குறித்து சொல்லுங்கள்!*

*பதில்: எனக்கு ஒரு மகன், ஒரு மகள். மகள் இஷா பி.எஸ்.சி. முடித்துள்ளாள். மகன் அசாருத்தீனுக்கு திருமணம் நிச்சயித்துள்ளொம். மேக்கரை எனும் கிராமத்தைச் சார்ந்த பூர்வகுடி முஸ்லிம்களிடத்தில் தான் திருமணம் நிச்சயத்துள்ளோம்.*

## ஆயிஷா

*கேள்வி: நீங்கள் இஸ்லாத்தில் இணைந்து உங்களது பிள்ளைகளுக்கான கடமைகளை முடித்துள்ளீர்கள். உங்கள் பிள்ளைகளின் திருமணம் குறித்து சொல்லுங்கள்.*

*பதில்: எனக்கு இரண்டு மகன்கள், மூன்று மகள்கள். மூன்று மகள்களுக்கும் திருமணம் முடிந்து விட்டது. எங்கள் ஊரில் நிறைய மக்கள் பூர்வகுடி முஸ்லிம்களிடத்தில் பெண் கொடுத்து, பெண் எடுத்து திருமணம் செய்துள்ளார்கள். எல்லோரும் தற்போது நல்ல முறையில் வாழ்ந்து வருகின்றார்கள்.*

*சாதிமறுப்பு கலப்பு திருமணம் செய்துக் கொண்டு சாதியை ஒழித்து விடலாம் என்பதெல்லாம் சாதி ஒழிப்புக்கு தீர்வாகாது. மதமாற்றம் மட்டுமே சாதியையும், அதன் தீண்டாமையையும் ஒழித்தொழிக்கும் என்பதற்கு மேற்சொன்ன சம்பவங்களே சான்று. ஆதலால், சாதி ஒழிய, தீண்டாமை அழிய, இன இழிவு நீங்க இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளுங்கள். அது மட்டுமே ஒரே தீர்வு.*

*(இந்தியாவில்) எந்த சகோதரத்துவத்தை நாம் விரும்புகிறோமோ, எந்த சகோதரத்துவ அடிப்படையில் இந்த புதிய உலகத்தை கட்டமைக்க வேண்டும் என்று இன்றைய நாகரிகம் விரும்புகிறதோ, அந்த சகோதரத்தத்துவத்தை 1440 ஆண்டுகளுக்கு முன்பு அரேபியாவின் பாலைவனப் பகுதியில் முஹம்மத்(ஸல்) அவர்கள் நிலை நாட்டி காட்டினார்கள். - கவிக்குயில் சரோஜினி நாயுடு.*

**- த. அஷ்ரஃப் இஸ்லாம்**

### அடிக்குறிப்பு 1

### கருப்பாயி (எ) நூர்ஜஹான் மெய்யும் - பொய்யும்

மீனாட்சிபுரம் மதமாற்றத்தை எப்படியாவது பொய்ப்பிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் பாசிஸ்டுகள் தொடர்ந்து முயற்சித்து வருகின்றனர். அதன் ஒரு பகுதியாக அன்வர் பாலசிங்கம் என்பவரை வைத்து "கருப்பாயி (எ) நூர்ஜஹான்" எனும் நாவலை எழுத வைத்தனர்.

"மீனாட்சிபுரம் மதமாற்ற நிகழ்வின் போது மதம் மாறிய ஒரு குடும்பத்தின் பெண் நூர்ஜஹான். அவள் மதம் மாறியவள் என்பதாலேயே முஸ்லிம்கள் யாரும் அவளை திருமணம் செய்துக் கொள்ள முன்வரவில்லை. அதன் காரணத்தால் அவள் தற்கொலை செய்துக் கொள்கிறாள். அவளைப்போல் பல பெண்கள் அந்த கிராமத்தில் திருமணத்திற்காக ஏங்கிய நிலையில் உள்ளனர்" என்ற நச்சுக் கருத்தை தாங்கி வந்த இந்த நாவல் தமிழ் சமூகத்தில் மிகப்பெரிய தாக்கத்தையும், விவாதத்தையும் ஏற்படுத்தியது.




நாவல் குறித்த தகவல்கள் அறிந்த வுடனேயே ஆசிரியர் மு.குலாம் முஹம்மது அவர்களும், மர்ஹூம் டி.எம். உமர் ஃபாரூக் அண்ணன் அவர்களும் நேரடியாக மீனாட்சிபுரம் கிராமத்திற்கே சென்று நாவலின் உண்மைத் தன்மை குறித்து ஆய்வுகளை மேற்கொண்டனர். அதில் நாவல் முழுக்க முழுக்க பொய்யான ஒன்று என்றும், அப்படி யாரும் இங்கே தற்கொலை செய்யவில்லை என்றும் நிரூபித்து நாவலாசிரியரான அன்வர் பாலசிங்கத்தை பொதுமக்கள் மத்தியில் மன்னிப்புக் கோரவைத்தனர். அதுகுறித்த விரிவான தகவல்களுக்கு "கருப்பாயி (எ) நூர்ஜஹான் அன்வர் பாலசிங்கத்துடன் ஓர் நேர்முகம்" எனும் வேர்கள் வெளியீட்டகத்தின் புத்தகத்தை வாங்கிப்படியுங்கள்.




# இஸ்லாத்தின் மீது தொடுக்கப்படும் அமெரிக்காவின் போர்கள்

அமெரிக்க அதிகார வர்க்கத்தினர் பிறநாட்டினர் மீது போர் தொடுப்பதை உலக மக்கள் நன்கு அறிந்திருக்கிறார்கள். அந்த பட்டியல் முடிவில்லாதது, நீண்டு கொண்டே செல்கின்றது. செப்டம்பர் 9, 2011 -லிருந்து "A False Flag operation" என்கிற திட்டத்தை நடைமுறைப்படுத்தி கொண்டு தன்னுடைய போர்களை அமெரிக்கா நியாயபடுத்துகிறது. இத்திட்டத்தின் மூலம் அமெரிக்கா மில்லியன் கணக்கான மக்களை கொன்று குவித்தது. எண்ணிலடங்காத பலர் தன்னுடைய உடல் உறுப்புகளை இழந்துள்ளார்கள்.

உலகளவில் அமெரிக்கா 800 இராணுவ தளங்களை பராமரித்துக் கொண்டிருக்கிறது. இதில் மூன்றில் ஒரு பங்கு கிழக்கில் வாழக்கூடிய முஸ்லிம்களின் பகுதிகளில் இயங்கிக் கொண்டிருக்கிறது.

இதுப் போன்ற போர்களை முஸ்லிம் அல்லாத மக்களிடமும் அமெரிக்க அதிகார வர்க்கத்தினர் தொடுக்கின்றன.

அந்த மக்கள் மேற்கத்திய நாடுகளில் வசிப்பதால் அமெரிக்காவினால் வெடிகுண்டுகளை எறிய முடியாது. ஆதலால் வேறு தந்திரத்தை பயன்படுத்துகிறது. அமெரிக்கா லட்சக்கணக்கான மக்களை "நோ ப்ளை லிஸ்ட்" (No Fly List) மற்றும் பல மக்களை "வாட்ச் லிஸ்ட்" (Watch List) என பிரித்து கண்காணித்து வருகிறது.

நோ ப்ளை லிஸ்ட் -ல் இருக்கக்கூடிய மக்கள் அமெரிக்கா அல்லாத வேறுநாடுகளுக்கும், ஏன் அமெரிக்க பிரதேசங்களிலே கூட அவர்கள் விமானங்களில் பயணிப்பதற்கு தடை வியீக்கப் பட்டிருக்கிறார்கள். வாட்ச் லிஸ்ட் -ல் இருக்கக்கூடிய மக்கள் அமெரிக்காவில் நுழைய வேண்டும் என்றால் உள்நாட்டு பாதுகாப்பு துறையினரிடம் (Department of Homeland Security) அனுமதி பெற்ற பிறகே அனுமதிக்கப்படுவார்கள். இதில் நீடிக்கும் அவமானம் என்னவென்றால், அமெரிக்கா பல மேற்கத்திய நாடுகளை கொடுமைப்படுத்தியும் மற்றும் எந்த தவறும் செய்யாத ஒரு குடிமகனின் அடிப்படை உரிமையையும் மீறி வருகின்றது. இதில் கனடாவும் விதிவிக்கல்ல. அமெரிக்கா பிரித்து வைத்துள்ள இந்த லிஸ்ட் -ல் இருந்து மக்கள் தப்பிக்கவே முடியாது. மக்கள் விமான நிலையங்களில் வெகுநேரம் காத்திருந்து அனுமதி பெற்றால்தான் அவர்களால் பயணிக்க முடியும். பல சமயம் உள்நாட்டு பாதுகாப்புதுறை சரியான நேரத்தில் பயணிகளிடம் அனுமதி அளிக்காததால், மக்கள் பயணம் செய்ய இருந்த விமானங்களில் பயணம் செய்ய முடியாமல் போயிருக்கிறது.

"முஸ்லிம்களை கண்டு அமெரிக்க அதிகார வர்க்கம் அஞ்சுகின்றதா? அல்லது அதிகாரத்தையும், அடக்குமுறையையும் காண்பித்து மக்களை அச்சுறுத்துகிறதா?"

*கிரஸன்ட் இண்டர்நேஸனல் அக்.4, 2019*

**தமிழில்: ஷாஹீன் ஜைனப் ஃபாத்திமா**




# ஐ
# புறக்கணிப்போம்!

## காந்தியின் ஒத்துழையாமை போராட்டத்தை கையிலெடுத்திருக்கும் முஸ்லிம்கள்

தற்போது நடைபெற்று வரும் பாராளுமன்ற தொடர் உட்பட, அமித் ஷா 2019 தேர்தலில் சொன்னது போல நாடு முழுவதும் குடியுரிமை தேர்வு நடத்தப்படும் என்று மீண்டும் மீண்டும் கூறி வருகிறார்.

அதே போல் நாடு முழுவதும் தேசிய குடிமக்களின் பதிவுக்கு(NRC) முன்பாக குடியுரிமை திருத்த மசோதா (citizenship Bill) கொண்டு வரப்படும் என்றும் கூறியுள்ளார். இந்த குடியுரிமை மசோதாவின் படி முஸ்லிம்களை தவிர இந்தியாவில் உள்ள அனைவரும் தங்கள் குடியுரிமையை நிரூபிக்க தேவையில்லை. ஆனால் முஸ்லிம்கள் மட்டும் நிரூபித்தாக வேண்டும். முடியாதவர்கள் சிறையிலும், நாட்டுக்கு வெளியேவும் துரத்தப்படுவார்கள்.

நம் அரசியலமைப்பையே கேலிக்கூத்தாக்கும் ஒரு நடவடிக்கையை செய்வதாக ஒவ்வொரு முறையும் நம் நாட்டின் உள்துறை அமைச்சர் கூறிக்கொண்டிருக்கிறார். அதை நிகழ்த்தி காட்டுவதிலும் அவரது அரசு முனைப்பாக செயல்பட்டு வருகிறது. முஸ்லிம்களின் பங்களிப்பில்லாமல் இந்தியா என்றொரு நாடு சாத்தியமில்லை என்ற போதிலும் முஸ்லிம்களை தனிமைப்படுத்த NRCயை கொண்டு வந்திருக்கிறார்கள். இதை அகற்ற வேண்டியது இந்நாட்டின் ஒற்றுமையை பறைசாற்றும் ஒவ்வொருவரின் மீதான கடமை.

இந்தியாவில் 2018 கணக்கெடுப்பின் படி 20 கோடி முஸ்லிம்கள் வாழ்கின்றனர். இந்திய மக்கள் தொகையில் 11% முஸ்லிம்கள் இருக்கிறார்கள். உலகிலேயே முஸ்லிம்கள் அதிகமாக வாழும் இரண்டாவது நாடு இந்தியா. இந்த நிலையில் உலகில் எங்குமே இல்லாத வகையில் NRC எனும் முறையில் முஸ்லிம்களின் குடியுரிமைகளை மட்டும் நீருபிக்க சொல்வது இந்தியாவின் ஒற்றுமைக்கே மிகப்பெரும் ஆபத்தாக முடியக்கூடிய ஒன்றாக அமையும்.

## பயத்திலிருந்து வெளிவருவோம்

இப்போதே நாடு முழுக்க முஸ்லிம்களிடம் பயம் தொற்றிக்கொண்டது. மேற்கு வங்காளத்தில் NRC பயத்தின் காரணமாகவே முஸ்லிம்கள் தற்கொலை செய்திருக்கிறார்கள். அஸ்ஸாமில் இந்த நடவடிக்கையின் மூலம் பல லட்சக்கணக்கான முஸ்லிம்கள் தற்கொலைக்கே பலியாகியிருக் கிறார்கள்.

இந்த நிலையில் தற்போது நாடு முழுக்க முஸ்லிம்களிடம் NRC'ஐ புறக்கணிப்போம் (#BOYCOTTNRC) என்ற குரல் எழுந்து வருகிறது. NRC'ஐ தடுப்பதற்கான ஒரே வழிமுறை நாம் NRCயை புறக்கணிப்பது மட்டுமே. அதன் விளைவுகளை ஏற்றுக்கொள்ள நாம் தயாராவோம் என முஸ்லிம்களில் பலர் பதிவிட்டு வருகின்றனர். அவற்றில் சில,

" நாட்டிலிருக்கும் 200 கோடி முஸ்லிம்களையும் சிறையில் தள்ளுங்கள்"


Ali
@sheralisayed3
Let them put all 200 millions Muslim in jail #BoycottNRC
7 6:54 AM - Nov 22, 2019
See Ali's other Tweets

"எங்கள் முன்னோர்கள் ஆங்கிலேயர்களுடன் போரிட்டு இந்தியாவின் விடுதலைக்காக உயிர் துறந்தார்கள். 1947ல் நாங்கள் இந்த நாட்டை தேர்வு செய்தோம். ஆனால், யார் ஆங்கிலேயனுக்கு விசுவாசமாக இருந்து அவர்களின் காலின் கீழ் சேவை செய்தார்களோ அவர்கள் எங்கள் குடியுரிமையை


Saif
@saifpatel
Our forefathers laid down their lives fighting the British for the freedom of this country. In 1947, we CHOOSE this country. Those whose ancestors & ideological founders licked the feet of British CANNOT ask us to prove our citizenship. We will resist. We will fight. #BoycottNRC
440 9:40 PM - Nov 21, 2019
236 people are talking about this

நிரூபிக்க சொல்கிறார்கள். நாங்கள் இறுதி வரை எதிர்ப்போம், போராடுவோம்."


Asmar Khan
@asmar006
My family have decided that we will #BoycottNRC whatever will be the consequences
186 10:54 PM - Nov 21, 2019
102 people are talking about this

"இதனால் என்ன விளைவுகள் வந்தாலும் சரி, என்னுடைய குடும்பம் NRCயை புறக்கணிக்க முடிவு செய்து விட்டோம்"

" NRC முழுக்க முஸ்லிம்களை குறிவைக்கிறது. நாம் கண்டிப்பாக இதை புறக்கணிக்க வேண்டும். அவர்கள் 200 கோடி பேரையும் கடலுக்குள் தூக்கி போட முடியாது. ஆனாலும் பெரும்பான்மை சமுதாயத்தை சேர்ந்த நல்லவர்களும் நமக்கு துணைக்கு தேவை.


Md Asif Khan آصف
@imMAK02
This farce called NRC is just a tool to target Muslims.

We all must boycott this NRC, they can not throw 200 Million people into ocean but we need sane people from Majority society as allies.

If people from South India and Punjab also #BoycottNRC then govt cant implement it
1,622 9:01 PM - Nov 21, 2019
911 people are talking about this


தென் இந்தியா மற்றும் பஞ்சாப்பில் இருக்கும் மக்கள் NRCஐ புறக்கணித்தால் அரசால் இதை நடைமுறைப்படுத்திட முடியாது."

"பின்விளைவுகள் எதுவாக இருந்தாலும் பரவாயில்லை இது NRCயை புறக்கணிப்பதற்கான நேரம். ஏனெனில் இறுதியில், நாம் விளைவுகளை


OSAMA
@OSAMA_MD0487
Doesn't matter whatever the consequences will be, it's time to #BoycottNRC. Because at the end,by whatever means , you have to face consequences. So why not fighting instead supporting it.

141 1:40 AM - Nov 22, 2019

எப்படி இருந்தாலும் எதிர்கொண்டே ஆக வேண்டும். எனவே அதை ஆதரிப்பதற்கு பதில் ஏன் எதிர்த்து போராடக்கூடாது?"



Yeh Log !
@yehlog
NRC puts the onus of proving your innocence (in this case, citizenship) on the victim, contrary to all accepted norms of justice. It's meant to exclude as many as possible. The problem isn't that it was "badly implemented", or mismanaged. The problem's that it's a fascist project

“பிரச்சனை மோசமாக செயல்படுத்தப்பட்டது அல்லது தவறாக நிர்வகிக்கப்பட்டது என்பதல்ல. இது ஒரு பாசிச திட்டம் என்பது தான் பிரச்சனை.”




“பல முஸ்லிம்களுக்கு இங்கே சாப்பாடே பெரும் பிரச்சனை, இதில் எப்படி ஆவணங்களை உறுதிப்படுத்த முடியும்?..”

இந்த ழிஸிசிக்கு எதிராக இந்துக்களும் போராட வேண்டும் என்ற கோரிக்கையும் பரவலாக பலரால்




எழுப்பப்பட்டது.

“இதற்காக இந்துக்களும் வந்து போராட வேண்டும் எனவும் பலர் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.”

**NRC ஐ புறக்கணிப்போம்**

இந்த NRC எனும் பெயரில் நாட்டு மக்கள் அனைவரின் மீதும் எடுக்கப்படப் போகும் நடவடிக்கை அல்ல. முஸ்லிம்களை மட்டும் குறி வைத்து நடத்தப்படப் போகும் தாக்குதல். இது நம் நாட்டின் பன்முகத்தன்மைக்கும், ஒற்றுமைக்கும், அரசியலமைப்புக்கும் எதிரானது. இதனை முஸ்லிம்கள், இந்துக்கள், கிறிஸ்துவர்கள், சீக்கியர்கள் என அனைவரும் இணைந்து எதிர்த்தாக வேண்டிய கட்டாயம் இருக்கிறது.

NRCக்காக தயாராவோம் என கூறி முஸ்லிம்கள் அடிமையாகி பல லட்சம் முஸ்லிம்கள் அழிந்து சில லட்சம் முஸ்லிம்கள் அடிமையாக வாழ்வதை விட இந்தியாவின் விடுதலை போராட்டத்தில் எப்படி முன்னிலையில் முஸ்லிம்கள் இருந்தார்களோ அதே போல இதற்கு எதிராகவும் செயல்பட்டு இந்தியாவின் ஒற்றுமையை காப்பாற்ற முனைவதே மிகச்சரியானதாகும் என முஸ்லிம்களில் சிலர் பதிவு செய்து வருகின்றனர்.

**- அபூ சித்திக்.**

# இஸ்லாம்

## அரசியல், அதிகாரம், அரபுலக எழுச்சி

எகிப்தின் எதிர்கால அரசியல் திட்டத்திற்கான புதிய செயல் முறைகளை வகுத்தார் சிசி. அதில் அரசியலமைப்பை யாத்தல், நாடாளுமன்றத்தை நடத்துதல், இறுதியாக புதிய அதிபரை தேர்ந்தெடுத்தல் குறித்து வாக்குறுதி அளித்தார். அவர் இந்த அறிவிப்பை வெளியிடும் பொழுது எகிப்து திருச்சபைகள், அல் அஸ்கர், அல் நூர் கட்சி ஆகியவை ஆதரவுக்கரம் நீட்டின.

வியக்கத்தக்க விஷயம் என்னவென்றால் சலபுக்களையும் ராணுவம் ஏற்றுக்கொண்டது. ஏன் சலபுக்கள் ராணுவத்தை ஆதரிக்கும் இந்த முடிவை எடுத்தனர் என்பதற்கு பின்வரும் காரணம் கூறப்பட்டது. இஸ்லாமிய வெற்றிடத்தை மற்ற கட்சிகள் ஆக்கிரமித்து விடக்கூடும் என்பதால் தான்.

ராணுவத்திற்கு ஆதரவு இருந்தாலும், அதன் தலையீடு மக்களிடத்தில் ஒரு அபாயமாகவே பார்க்கப்பட்டது. கடந்த காலத்தில் கிட்டத்தட்ட ஆறு நூற்றாண்டுகள் நாட்டை ஆண்டது ராணுவமே. மீண்டும் இந்த நிலை திரும்பவா மக்கள் வீதிகளில் இறங்கிப் போராடினார்கள். அவர்களின் போராட்டத்திற்கு அர்த்தமில்லாமல் அதே போன்ற நிலையை மீண்டும் ஏற்கும் சூழ்நிலை வந்தது. ராணுவத்தின் உதவியுடன் 30 ஆண்டுகள் ஆட்சியில் இருந்த முபாரக்கை வெளியேற்றிய அடுத்த இரண்டு வருடங்களில் மீண்டும் அதேபோன்ற நிலைமையே உருவானது. இனி எகிப்தில் இஸ்லாமியவாதிகளின் எதிர்காலம் எப்படி இருக்கும் என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். **முற்றும்**

**அபுஹாசின்**



# மேட்டுப்பாளையம் தீண்டாமைச்சுவர் பலிகள்!

கடந்த 2.12.2019 அன்று காலை 5 : 15 மணியளவில் தமிழ்நாட்டையே உலுக்கிய, கேட்பவர்கள் அனைவரையும் பதைபதைக்க கூடிய அந்த சம்பவம் நடைபெற்றது ஆம், சாதிய திமிரால் 17 அப்பாவி உயிர்கள் பறிபோனது.

கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம் நடூர் கண்ணப்பன் லேஅவுட் பகுதியில் அந்த கோர சம்பவம் நிகழ்ந்தது. அப்பகுதி அதிகப்படியாக தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்கள் வசிக்ககூடிய பகுதி. அருகாமையில் ஒரு கூட்டுறவு சங்கம் சார்பில் லேஅவுட் அமைத்த போது பெரும் பணக்காரர்கள் வந்து குடியேறினர். அப்படி குடியேறியவர்களில் ஒருவர்தான் இப்போது 17 உயிர்கள் பறிபோனதற்க்கு காரணமான துணிக்கடை அதிபர் சிவசுப்ரமணி என்பவர்.

இவர் துணிக்கடை அதிபர் மட்டுமல்லாமல், பாரதிய ஜனதா, இந்து முண்ணணி பிண்புலம் கொண்டவரும் ஆவார். பணக்காரர்கள் குடியேறிய நாள் முதலே அந்த பகுதி 2 நிலங்களாக பிரிக்கப்பட்டு மேட்டுக்குடி வர்க்கம், உழைக்கும் வர்க்கம் என்று பிரிக்கப்பட்டது.

சிவசுப்ரமணி என்பர் ஒரு படி மேலே போய் அந்த மக்களின் பார்வையும் கூட நம் மீது விழக்கூடாது என்று. 100 அடி அகலமும் , 20 அடி நீளத்திலும் ஓர் தீண்டாமை சுவரை அமைத்திருக்கிறார். அமைத்தது மட்டுமல்லாமல் நீதி கேட்டு சென்ற மக்களிடத்தில் தான் வளர்க்கும் நாயை அவிழ்த்துவிட்டு அடாவடித்தனமாக நடந்திருக்கிறார்.

இந்த தீண்டாமை சுவர் விழுந்து இறந்த 17 பேரில் ஒருவரான சிவகாமி என்பவர் சிவசுப்ரமணியை அணுகி "நாங்கள் உங்களை தடுப்பு சுவர் கட்ட வேண்டாம் என்று சொல்லவில்லை தகுந்த பாதுகாப்போடு கட்டித்தாருங்கள் என்றுதான் சொல்கிறோம்" என்று கோரிக்கை வைத்துருக்கிறார். அதை கொஞ்சம் கூட மதிக்காமல் சாதி திமிரில் ஊறி திளைத்த சிவசுப்ரமணி " உனக்கு என்ன தகுதி உண்டு என்னிடத்தில் பேசுவதற்கு இங்கிருந்து கிளம்பிவிடு இல்லையென்றால் என் வீட்டின் நாயை அவிழ்த்துவிட்டு விடுவேன்." என்று மிரட்டியிருக்கிறார்.

இப்படி அந்த பகுதி மக்களை சிவசுப்ரமணி என்பவர் பயமுறுத்தி வைத்திருக்கின்றார். தடுப்பு சுவர் கட்டியது மட்டுமல்லாமல். உரிய விதிமுறைகளை பின்பற்றபடாலும் கட்டியிருக்கின்றார். இதை பல முறை மனு கொடுத்தும் இங்கு இருக்கும் அரசு நிர்வாகத்தினர் கண்டுகொள்ளாதது மிகவும் கண்டிக்ககூடிய விடயமாக இருக்கின்றது.

உயிரிழந்தவர்களின் உடல் கூட மருத்துவமனை வளாகத்தில் மழையில் போடப்பட்டு கேட்பாரற்று கிடந்தது. அதுமட்டுமல்லாமல் இறந்தவர்களுக்கு நீதி கேட்டு போராடிய சமூக செயல்பாட்டாளர்கள், உறவினர்கள் அனைவரையும் ஏதோ வன்முறை கும்பல்களை கையாளுவது போன்று கோவை மாவட்ட காவல்துறை நடந்துயிருக்கின்றது.

காவல்துறையின் இந்த அராஜக போக்கிற்க்கு பல்வேறு தரப்பிடமிருந்தும் கண்டனங்கள் வந்து கொண்டிருக்கிறது. இங்கே ஒடுக்கப்படும் தலித் மக்கள் இருக்கும் போதும், இறக்கும் போதும் கூட நீதி கிடைப்பதில்லை.

அதையும் தாண்டி அவர்கள் மனிதர்களாக கூட மதிக்கப்படுவதில்லை. இதற்கெல்லாம் காரணம், பிறப்பின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட சாதி படிநிலை. இதை எதனாலும் மாற்ற முடியாது. அதனால் தான் சாதி இழிநிலையிலிருந்து மீள இந்து மதத்தை விட்டு வெளியேறுதல் ஒன்றே தீர்வு என கூறினார் அம்பேத்கர். இழிநிலை ஒழிய இஸ்லாமே நன்மருந்து என கூறினார் பெரியார்.

ஆம், இஸ்லாத்தை ஏற்றால் ஐந்து நிமிடங்களில் தீண்டாமை காணாமல் போய் விடுகிறது என நாடகம் நடத்தினார் அண்ணா.

இப்படி அருட்பெரும் அம்சம் கொண்ட உலக மனிதர்களுக்காக அருளப்பட்ட மார்க்கம் இஸ்லாம்.

இந்த மார்க்கத்தில் பிறப்பின் அடிப்படையில், மொழியின் அடிப்படையில், இனத்தின் அடிப்படையில் என எதன் அடிப்படையிலும் எந்த உயர்வும், தாழ்வும் கிடையாது என இஸ்லாம் பறை சாற்றுகிறது.

தீண்டாமைச் சுவர்களை உடைத்தெறிய இஸ்லாமிய மார்க்கத்தில் குடிபுகுவது மட்டுமே தீர்வு. அதை நோக்கி நகர்வோம்.அதுவே ஒரே தீர்வு.

மேட்டுப்பாளையத்திலிருந்து நமது நிருபர்

**உமர்பாரூக்.**



## வரலாற்றுத்தடம்: குளச்சல் கல்பள்ளி

ஹாஜி.பீ.எம்.அப்துல் கரீம்
குளச்சல்

# குளச்சல் போரும் சமூக ஒற்றுமையும்



278 ஆண்டுகளாக குளச்சல் போரின் வெற்றியைப் பிரகடனப்படுத்தும் குளச்சல் வெற்றித்தூண்

வாணிபம் செய்ய வந்த ஆங்கிலேயர்கள், போர்த்துகீசியர்கள், டச்சுக்காரர்கள் போன்றோர் சூழ்நிலையை பயன்படுத்தி நம் நாட்டை அடிமைபடுத்தினர் என்பது வரலாற்று உண்மையாகும். அரேபியர், சேர, சோழ, பாண்டிய நாட்டோடு வாணிபத் தொடர்பு வைத்திருந்தனர். அவர்கள் வியாபாரத்தை குறிக்கோளாக கொண்டு கடல்வழிப் பயணம் மேற்கொண்டு வேற்று நாட்டில் கிடைத்த பொருட்களை இங்கு கொண்டு வந்து நல்ல வாணிபம் மேற்கொண்டனர். இங்கு குதிரை, பேரித்தம் பழம் போன்றவை அரேபியாவிலிருந்து இறக்குமதி ஆகின. குளச்சல் துறைமுகம் மூலம் இவ்வாறு நடைபெற்றதாக தெரிகிறது. சங்ககால இலக்கியங்களில் யவனர் என்ற சொல் காணப்படுகிறது. இதிலிருந்து அரேபிய–தமிழக வியாபாரம் மிகவும் தொன்மை வாய்ந்தது என்பது தெளிவாகிறது.

கிருஸ்துவுக்கு முன் பத்தாவது நூற்றாண்டில் வாழ்ந்த சாலமன் என்னும் அரசனுக்கு மயில் தோகையும், யானை தந்தத்தையும், வாசனைப் பொருட்களையும் ஏற்றி நாவாய்கள் அரேபியாவுக்கு சென்றதாக வரலாற்றில் காணப்படுகிறது. கிமு 178 ஆம் ஆண்டில் அரேபிய குடியிருப்புகள் இந்தியாவின் தென்பகுதிகளில் இருந்ததாக அகதார்ஸைட்ஸ் என்ற கிரேக்க பிரயாணி குறிப்பிடுகிறார். இதிலிருந்து நம் வியாபாரத்தின் தொன்மையும் நனி விளங்கும். மார்த்தாண்டவர்மா மன்னர் ஆனதும் எட்டு வீட்டு பிள்ளைமார்களும், உயர் சாதியினரும், பிராமணரும் சதி செய்தனர். அவர் ஆட்சியை எதிர்த்த பத்மநாபன் தம்பியும் அவர் மந்திரி சுந்தரரும் சூழ்ச்சி செய்து கொலை செய்ய முயற்சித்தனர். கலகக்காரர் 42 பேர் பத்மநாபபுரத்தில் மூக்கு மண்டபத்தில் தூக்கிலிடப்பட்டனர். கிபி 1733 இல் நடைபெற்ற அரசுக்கெதிரான கலகக்காரர்கள் நாடு கடத்தப்பட்டனர்.

"ஃபீபதனி ஸக்கைப் பழம் லக்லக" – பலாப்பழம் வயிற்றை குழப்புகிறது

மொராக்கோ நாட்டு இப்னு ஒரு உலகப் பயணி. அவர்கள் குளச்சல் வந்திருந்தபோது வருக்கமாபுர இடத்திலுள்ள பலாப்பழத்தை தின்றதால் வயிறு அழகி துயருற்றுரிந்தார். அந்நேரம் அவர் அரபியில் சொன்ன வரிகள் மேலே குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த செய்தியை இஸ்லாமிய கலைக்களஞ்சியத்தில் மர்ஹூம் M.R.M. அப்துல் ரஹீம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

குளச்சல் இயற்கைத் துறைமுக நகரமாகும். யவனரும், கிரேக்கரும் வாணிபம் செய்ய மூன்றாயிரம் 3000 ஆண்டுகளுக்கு முன்பு வந்திறங்கிய துறைமுகப்பட்டினம். இஸ்லாமிய வரலாற்றோடு பின்னிப் பிணைந்த ஊர். இவ்வூரில் இருக்கும் கல் பள்ளி சேர மன்னர் காலத்தில் கட்டியதாகும். இப்பள்ளி வேலைப்பாடுகளுடன் மிகவும் கலை நுணுக்கத்துடன் அதேநேரம் இஸ்லாமிய மரபுக்கு உட்பட்டு கட்டப்பட்டதாகும். ஒரு தூணில் சங்கு முத்திரையும், ஒரு தூணில் "யாபத்தாஹ்" என்ற அரபி வாசகமும் கல்லில் செதுக்கப்பட்டுள்ளது. இந்த வாசகத்திற்கு எங்கள் லட்சியம் குறிக்கோள் வெற்றி அடைந்து விட்டது என்பது பொருள். மேலும் முதல் பள்ளி, நீளம் வீதி போன்ற கஃபாவின் அளவை ஒத்தவையென முன்னாள் முஸ்லிம் முஹல்லா தலைவர் சொல்வார்கள். தொழுகைக்கு உளூ செய்யும் ஹவுல் கல்லால் செய்யப்பட்டு அகப்பை போட கல் தூணின் மேல் பகுதியில் ஒரு குடுவை போன்ற பகுதி காணப்படுகிறது.

## தொழுகை நேரத்தை அறிவிக்கும் கல்

நாங்கள் அரபிப் பாடசாலையில் ஓதும்போது லுஹர், அஸர் தொழுகைக்குரிய காலம் அறியும் ஒரு கல் பள்ளியை ஒட்டிய பகுதியில் இருந்தது. சூரியனின் நிழல் அந்தத் தூணில் விழுவதை வைத்து லுஹர் தொழுகை நேரம் நிர்ணயிக்கப்பட்டது. பள்ளி புனரமைப்பின் போது அது மாற்றப் பட்டுள்ளது. பள்ளியில் தமிழில் உள்ள கல்வெட்டு எழுத்துக்களை இன்றும் காணலாம். பள்ளியினுள் மிஹ்ராப், மிம்பர் படி கல் வேலைப்பாடு உடையது. ஹவுல் கல்லானது பழமையான குளம் உலூ செய்ய வசதியாக இருந்தது. இது இடைப்பட்ட காலத்தில் மூடப்பட்டது. சரித்திர சின்னங்களை காப்பாற்றாதது நம்மவர்கள் தவறு.

இதேபோன்று கல் கோவில் செட்டி சமுதாயத்தவர், பிள்ளைமார் சமுதாயத்தவர்களுடைய கண்காணிப்பில் உள்ளது. புராதான கத்தோலிக்க கோவில் குளச்சல் துறைமுகத்தில் உள்ளது. இவை தவிர இன்று பல முஸ்லிம் பள்ளிகள், சர்ச்கள், கோவில்கள் பல ஏற்பட்டுள்ளன. மார்த்தாண்டவர்மா ஆளுமையில் இருந்த பகுதிகளை டச்சுக்காரர்கள் பிடிக்க திட்டமிட்டு இதற்குகன்னியாகுமரியில் உள்ள தங்களுடைய ராணுவ முகாமை பலப்படுத்தி தெற்குப் பகுதியையும் கைப்பற்ற திட்டமிட்டனர். அத்தோடு கன்னியாகுமரி குளச்சல் பகுதிகளையும் தங்கள் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வர தீர்மானித்தனர். அதற்கு முன் தேங்காய்ப்பட்டினம், மிடாலம், கடியபட்டினம் ஊர்களை சூறையாடினர். இதனால் வடபகுதி போரினை கைவிட்டு மார்த்தாண்ட வர்மா கல்குளம் நோக்கிப் புறப்பட்டார். மார்த்தாண்ட வர்மாவுக்கு விசுவாசமாக முஸ்லிம்கள், நாடார்கள், செட்டிமார்கள், கிருஸ்தவர்கள்,நாயர்கள், மறவர்கள் என்று நாட்டு மக்கள் வெளி நாட்டானை எதிர்க்க ஆர்வத்தோடும் ஒற்றுமையுடனும் அணிதிரண்டனர். நாட்டிற்கு ஆபத்து என்றால் நம் உயிரை தியாகம் செய்தும் நாடு காப்பாற்றப்பட வேண்டும் என மக்கள் ஆர்வத்துடன் அரசுக்கு பின்னால் போர் களம் காண முனைந்தனர். 10.08.1741 இல் குளச்சல் போர் நடைபெற்றது. போரில் டச்சுப் படை படுதோல்வி அடைந்தது. டச்சுப் படை தளபதி டிலனாய், பிளமிங்சென் காடு போன்றோர் கைது செய்யப்பட்டு மார்த்தாண்ட வர்மா படைக்கு பயிற்சி கொடுக்க பதவியில் அமர்த்தப்பட்டனர். பூவார் ரசாக் முதலாளி பலமொழி கற்றவர். பெரும் வணிகர். அரேபியாவில் இருந்து குதிரை வியாபாரம் செய்ய வந்தவர். இங்குள்ள வாசனைப் பொருட்களை அரேபியாவுக்கு ஏற்றுமதி செய்து அங்கிருந்து பேரீத்தம்பழம், குதிரை போன்ற பொருட்களை குளச்சல் துறைமுகத்தில் இறக்குமதி செய்து வாணிபம் செய்தவர்.

## பூவார் ரசாக் முதலாளி

மார்த்தாண்ட வர்மா படைகளுக்கு மேற்கத்திய போர் முறையும், பயிற்சிகளும் பூவாறு ரசாக் முதலாளி தோட்டங்களில் அளிக்கப்பட்டது. 500 குதிரை வீரர்கள் நாட்டின் மானம் காத்திட பூவார் ரசாக் முதலாளி மார்த்தாண்ட வர்மாவுக்கு கொடுத்து உதவினார். பாளையங்கோட்டை சுலைமான் சேட் வெடிமருந்தின் மூலமும் உதவினார்.

பீரங்கி போல் பனைமரங்களால் செய்யப்பட்ட ஆயுதத்தில் குண்டும், மருந்தும் நிரப்பப்பட்டு கடற் கரையில் நிறுத்தப்பட்டிருந்தன. மாவீரன் குளச்சல் நூர் முஹம்மது யூசுப், தளபதி குமார் உதயமார்த் தாண்ட நாடார், மலை குட்டி நாடார், அந்தோணி அடிமை, ஜெபமணி நாடாரும் தீவிரம் காட்டி போரிட்டனர். இன்னும் நெஞ்சுரத்தோடு போராடியவர்கள் முகமதலி, நாலுகெட்டு ஆசான், ஆற்றூர் ஆசான், வன்னிய பெருமாள் நாடார், செல்லப்பெருமாள் நாடார். சூசை மைக்கேல் ஆகியோர் என திருவிதாங்கூர் சரித்திரத்தில் இருந்து அறிய முடிகிறது. கொல்லம் ஆண்டு 916 துவங்கிய யுத்தம் மார்த்தாண்ட வர்மாவின் குதிரைப் படையை தாக்குப் பிடிக்காமல் டச்சுப் படை தோல்வியுற்று அதோடு பெரும் உயிர் சேதம் அடைந்தது. இந்த யுத்தத்திற்கு பின் டச்சுக்காரர்கள் நாடு பிடிக்கும் ஆசையை கைவிட்டனர். இந்த யுத்தத்தில் டச்சு தளபதி டிலானி சரணடைந்த வெற்றித் தூண் குளச்சல் துறைமுகத்தில் இன்றும் காணலாம்.டச்சு ஆதிக்கம் ஏற்படாமல் தடுத்தவர்கள் குளச்சல் நூர் முகம்மது யூசுப், பூவாறு ரசாக் முதலாளி, திருவிதாங்கோடு செய்யது முஹம்மது, இஸ்மாயில் மூப்பன், செய்யது அலி பாளையங்கோட்டை சுலைமான் சேட், குளச்சல் முகமது அலி போன்ற நூற்றுக்கணக்கானோர் உடலால், உயிரால், பொருளால், இம்மண்ணில் ஆதிக்கம் ஏற்படாமல் தடுத்தனர். இதேபோன்று நாயர்கள், பிள்ளைமார்கள், செட்டியார்கள், நாடார்கள், முக்குவர்கள் போன்ற பல்வேறு இன மக்களும் அரசனுக்கு விசுவாசமாக போராடியதால் டச்சு ஆதிக்கம் ஏற்படாமல் திருவிதாங்கூர் காப்பாற்றப்பட்டது.

நாட்டில் வாழும் கோடி மக்கள் ஒற்றுமையுடன் ஒரு தாய் பிள்ளைகள் என்பதை நினைத்து செயல்பட்டதால் நாடு காப்பாற்றப்பட்டது. நாடு என்று வந்தால் இந்தியன் இந்தியன் இந்தியன்! பின்பற்றும் வாழ்க்கை நெறி என்று வந்தால் முஸ்லிம் முஸ்லிம் முஸ்லிம்!! என மாபெரும் இந்திய சுதந்திர போராட்ட வீரர் முகமதலி ஜவ்ஹர் சொன்ன சொல் என்றும் பொருள் பொதிந்ததாகும்.

உதவிய நூல்: ஆசிரியர் செ. திவானின்
விடுதலைப்போரில் வீரமிகு முஸ்லிம்கள்

தலையங்கம்

# பாசிச ஆட்சியில் அநீதியே...! நீதி!!

“நமது உச்ச நீதிமன்ற நீதிபதிகள் ஊழல் மயமானவர்கள். அவர்களில் பலர் பெண் பலவீனம் கொண்டவர்கள். அவர்களில் மிகச் சிலரே நேர்மையானவர்கள்.”

இப்படி ஒரு வேதனை நிறைந்த குற்றச்சாட்டை முன்வைத்தார் நாடறிந்த மூத்த வழக்கறிஞர் ஷாந்தி பூஷன். இவர் முன்னாள் சட்ட அமைச்சரும் கூட.

உச்சநீதிமன்றம் இதனை ஒரு நீதிமன்ற அவமதிப்பு என எடுத்துக்கொண்டது.

சாந்தி பூஷன் அவர்களை அழைத்து, உங்களது பேச்சுக்கள் நீதிமன்ற அவமதிப்பாக ஆகிவிட்டது. ஆகவே நீங்கள் மன்னிப்பு கேட்க வேண்டும். நீங்கள் சொன்னவற்றை திரும்பப் பெற்றிட வேண்டும் என்றார்கள். ஆனால் ஆண்மகன் சாந்தி பூஷன் சற்றும் சலனப்படவில்லை. தான் சொன்ன குற்றச்சாட்டுகளிலேயே நிலைத்து நின்றார்.

சிறைத்தண்டனை தருவோம் என நீதிபதிகள் மிரட்டினார்கள். இந்த நாட்டில் நீதி நிலை பெற நான் சிறை செல்வது தான் ஒரே வழி என்றால் அதற்கும் நான் தயார் என்றார்.

அத்தோடு விவகாரம் முடிந்தது. நீதிமன்றம் பெருத்த அவமானத்தை தாங்கிக் கொள்ள வேண்டியதாயிற்று.

அப்சல் குரு, அஜ்மல் கசாப் போன்றவர்களை தூக்கில் போட நாட்டின் சட்டத்தில் எங்கேயும் இடம் இல்லாத போது, ஒரு புது சொல் வழக்கை கண்டுபிடிதது நமது உச்ச நீதிமன்றம்.

அது நாட்டு மக்களின் கூட்டு மனசாட்சியை திருப்திப்படுத்திடவே நாங்கள் அவரை தூக்கில் போடுகின்றோம் என்றார்கள். காரணம் வேறு சாட்சியங்கள், ஆதாரங்கள் எதுவுமே கிடைக்கவில்லை.

பின்னர் உச்சநீதிமன்ற நீதிபதிகள் தங்கள் மீது பதியப்பட்ட வழக்குகளைத் தாங்களே விசாரிப்போம் என்றார்கள். நீதியின் மீது அக்கறையுள்ள அத்தனைபேரும் இந்த முறை மாற்றப்பட வேண்டும் என்றார்கள்.

முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதி தீபக் மிஸ்ரா அவர்கள் தன் மீதுள்ள ஊழல் குற்றச்சாட்டை தானே விசாரிப்பேன் என்றார். அவரைப் பதவியிலிருந்து தூக்கி எரிந்திடும் தீர்மானம் ஒன்றும் நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டது. அரசின் பக்கம் சாய்ந்தார். தீர்ப்புகளை அரசு விரும்பியது போல் தந்தார். தப்பித்தார்.

இப்போது ஓய்வு பெற்ற தலைமை நீதிபதி ரஞ்சன் கோகாய் அவர்கள், ரஃபேல் ஊழலில்

பத்திரிகைகளில் வெளியான ஆவணங்கள் உண்மையான கோப்புகளாக இருந்திடும் பட்சத்தில் அவற்றை நீதிமன்ற ஆவணங்கள் ஆகவும் சாட்சியங்களாகவும் ஏற்பேன் என்றார்.

ஒரு பெண்ணை ஏவி அவர் மீது பாலியல் குற்றச்சாட்டை பதிவு செய்தார்கள். வழக்கைப் பதிவு செய்த பெண்ணின் மேல் பல கிரிமினல் குற்றங்கள் இருந்தன. அவற்றை பாசிசத்தை பாதையாக கொண்ட ஆட்சியாளர்கள் திரும்பப் பெற்றார்கள்.

தலைமை நீதிபதியின் மேலுள்ள பாலியல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் குழுவில் தலைமை நீதிபதியே இடம் பெறும் அளவில் தலைமை நீதிபதியே ஒரு குழுவை அமைத்தார். அது மீண்டும் சர்ச்சையை கிளப்பியது. பின்னர் அவர் தன்னை நீக்கி கொண்டு வேறு ஒரு அமர்வை போட்டார்.

ஆனால் பாசிசத்தை பாதையாக கொண்ட ஆட்சியாளர்கள் என்ன வேண்டுமானாலும் செய்வார்கள். இதனால் அவர்களை எதிர்த்து நீதியின் பக்கம் நீதிபதிகளாலேயே நிற்கமுடியாத நிலை.

ஆனால் நீதிபதிகள் குறிப்பாக, உச்சநீதிமன்ற நீதிபதிகள் என்ன விலை தந்தாலும் நீதியின் பக்கம் நின்றிட வேண்டியவர்கள்.

அப்போது மட்டுமே நம் நாட்டை கபளீகரம் படுத்திக் கொண்டிருக்கும் இந்த அநீதியான ஆட்சியாளர்களிடமிருந்து நாட்டு மக்கள், தலித்கள், பெண்கள், சிறுபான்மையினர் என அனைவரும் காப்பாற்றப்படுவார்கள்.

நீதியில் இருந்து நீதிபதிகளை தடுமாற வைத்திடும் அநியாயங்கள் பாசிசம், நாசிசம் ஆகியவற்றின் ஆட்சியில் நித்திய நிகழ்வுகள் என்பதை நாம் வரலாற்றிலிருந்து அறிகின்றோம்.

ஆனால் இவற்றிற்கு அப்பாற்பட்டு ஒரு வரலாறு இருக்கின்றது. அது இஸ்லாமிய ஆட்சியின் வரலாற்றில் மட்டுமே இருக்கின்றது.

இஸ்லாமிய ஆட்சித் தலைவர் ஹாரூன் ரஷீத் அவர்களின் காலத்தில் ஒரு தலைமை நீதிபதி. அவர்கள் கலிஃபாவின் உத்தரவுகள் பலவற்றை நீதிக்கு அப்பாற்பட்டவை என தள்ளுபடி செய்தார்.

அதனால் சற்று ஆத்திரமடைந்த ஆட்சியாளர், அமைச்சரவையில் நீதிபதியிடம் ஒரு ஆலோசனை கேட்க வேண்டும். அதனால் நீதிபதி ஆட்சித் தலைவரை சந்திக்க வேண்டுமென்றார்.

நீதிபதி வந்தார்.நீதிபதியிடம் ஆலோசனை கேட்பது போல் கேட்டு விட்டு, கடைசியாக என்னுடைய உத்தரவு பலவற்றை ரத்து செய்திருக்கின்றீர்களே!என்றார்.

இதற்கு நீதிபதி இப்படி பதில் சொன்னார்கள்;

“அவை சட்டத்திற்குப் புறம்பானவை. அதனால் தான் நிராகரித்தேன்.” என்றார்.

ஆத்திரப்பட்டு இருக்கவேண்டும் ஆட்சியாளர் ஹாரூன் ரஷீத். ஆனால் அவர் அதற்கு நேர்மாறாக நடந்து கொண்டார்.

வானத்தை நோக்கி கையை உயர்த்திவராக “யா அல்லாஹ் இவரை நீதிபதியாக தந்த உனக்கே நன்றி. நிச்சயமாக எனது ஆட்சியில் மக்கள் அநீதிகளுக்கு உள்ளாக்கப்படுவதில்லை!” இதற்கு நீயே சாட்சி என்றார்.

இப்படி ஒரு வரலாற்றை இஸ்லாத்தில் மட்டுமே காண முடியும். அந்த நிலை மகோன்னத நிலை. அந்த அந்த நிலையை அடைய முனைவோம்.

இறைவன் கூறுகின்றான்

**முஃமின்களே! நியாயத்தை நிலை நாட்டுவதற்காக அல்லாஹ்வுக்கு நீங்கள் உறுதியான சாட்சியாக இருங்கள், எந்த ஒரு கூட்டத்தார் மீதும் நீங்கள் கொண்டுள்ள வெறுப்பு நீதி செய்யாமலிருக்க உங்களைத் தூண்ட வேண்டாம். நீதி செய்யுங்கள்; இதுவே (தக்வாவுக்கு) – பயபக்திக்கு மிக நெருக்கமாகும்; அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்; நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை(யெல்லாம் நன்கு) அறிந்தவனாக இருக்கின்றான்.**

(அல்குர்ஆன் : 5:8)

# சிலுவைப் போர் 2.0

## CRUSADE 2.0 BY JOHN FEFFER




தமிழ் வடிவம்: மு. குலாம் முஹம்மது.M.A.,

இன்றைய நாள்களில் மேலை நாட்டவர்கள் அமெரிக்காவின் தலைமையின் கீழ் இஸ்லாத்தின் மீதும் முஸ்லிம்களின் மீதும் ஒரு பெரும் போரைத் தொடுத்து வருகின்றார்கள். இந்தப் போரை அவர்கள் சிலுவைப் போர் 2.0 என அழைக்கின்றார்கள். சுருக்கமாகச் சொன்னால் நாங்கள் முஸ்லிம்கள் மேல் தொடரும் இரண்டாவது சிலுவைப் போர் என்கின்றார்கள். சிலுவைப் போர்கள் என்றாலே அது முஸ்லிம்களுக்கும் கிருஸ்தவர்களுக்கும் இடையே நடந்த போர் என்று பொருள். இப்போது நடப்பது இரண்டாவது சிலுவைப் போர் என்றால் முதல் சிலுவைப் போர் எப்போது தொடங்கியது? எப்போது முடிந்தது?

முதல் சிலுவைப் போர் 1095இல் தொடங்கி 1274இல் முடிந்தது. அவை 9 போர்களாக நடந்தன. அவற்றை சிலுவைப்போர் 1.0 என்று கிருஸ்தவ உலகம் அழைக்கின்றது. சிலுவை யுத்தம் 2.0 என்ற இரண்டாவது சிலுவைப்போர் 1991இல் தொடங்கியது என்பது வரலாற்று வல்லுநர்களின் கணிப்பு. இதனை முதல் வளைகுடா போர் என அழைப்பார்கள். இந்த சிலுவைப் போர் 2.0வை எப்படி நடத்திக் கொண்டிருக்கின்றோம் என்பதை ஜான் பெஃபர் என்பவர் ஒரு நூலாகத் தருகின்றார். அந்த நூலின் பெயர் CRUSADE 2.0 THE WEST'S RESURGENT WAR ON ISLAM அதாவது சிலுவைப் போர் 2.0 மேலை நாடுகள் இஸ்லாத்தின் மீது தொடுக்கும் மறு உயிர் பெற்ற போர்.

இந்த நூலின் தமிழ் வடிவமே இந்தத் தொடர். முஸ்லிம்கள், முஸ்லிம் நாடுகள், இஸ்லாம், இவற்றின் மேல் இன்றைய நாட்களில் நடக்கும் தாக்குதல்களைப் புரிந்திட இந்தத் தொடரைப் படியுங்கள். இது தொடரல்ல. பயன் பயக்கும் பாடம். வரலாற்றுத் தொகுப்பு.

அன்பார்ந்த வாசகர்களே! இன்று உலகில் என்ன நடந்து கொண்டிருக்கின்றது என்பதை அறிந்திட இந்தத் தொடர் பெரிதும் பயன்பட்டு வருகின்றது. அல்ஹம்துலில்லாஹ். அதே போல் கஷ்மீரில் மோடி, அமித்ஷா ஆகியோர் செய்யும் அராஜகங்களையும் புரிந்திட இந்த தொடர் மிகவும் அவசியம்.

அண்மையில் கஷ்மீர் விவகாரம் மோடி அரசால் சர்வதேசமயமாக்கப்பட்டது. 12 வெளிநாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கஷ்மீர் வர வைத்தார் மோடியின் கைத்தடி மாடி ஷர்மா என்ற பெண்மணி இதில் புரோக்கர் வேலை பார்த்தார்.

அவர்கள் கஷ்மீர் மயானமாக கிடப்பதைப் பார்த்துவிட்டு எல்லாம் "ஷேமமாக" இருக்கின்றது எனக் கூறிவிட்டு சென்றார்கள். இவர்கள் அத்தனைப் பேருமே அந்தந்த நாட்டில் இஸ்லாமோபோஃபியாவை வளர்த்துக் கொண்டிருப்பவர்கள்.


அதாவது இஸ்லாத்தையும், முஸ்லிம்களையும் மக்கள் வெறுக்க வேண்டும் என்பதற்காக, பொய்யையும், புனைந்துரைகளையும் முழு நேரமாகப் பிரச்சாரம் செய்துக் கொண்டிருப்பவர்கள். இவர்கள் அந்த நாட்டில் இயங்கும் பா.ஜ.க. போன்ற பாசிச கட்சியைச் சார்ந்தவர்கள். அந்தந்த நாட்டில் இஸ்லாத்தையும், வெறுக்கப் பிரச்சாரம் செய்யும் இயக்கங்களை சார்ந்தவர்கள்.

இவர்கள் இஸ்லாத்தையும், முஸ்லிம்களையும் மக்கள் வெறுக்க வேண்டும் என்ற பிரச்சாரத்தை தனிப்பட்ட முறையில் மட்டும் பிரச்சாரம் செய்துக் கொண்டிருப்பவர்கள் அல்ல. மாறாக அதற்கென கட்சிகளை வைத்து பல லட்சம் தொண்டர்கள் வழியாக அதைச் செய்து கொண்டிருப்பவர்கள்.

இவர்கள் அவர்களின் சொந்த நாட்டில் மட்டும் தான் முஸ்லிம்களுக்கு எதிராக உழைத்துக் கொண்டிருக்கின்றார்கள் என்றில்லை. மாறாக உலகெங்கிலும் முஸ்லிம்களுக்கெதிராக உழைத்துக் கொண்டிருப்பவர்கள்.

அதனால் தான் கஷ்மீர் வரை வந்து நித்தம், நித்தம் நொந்தும், ஆயிரக்கணக்கில் செத்தும் கொண்டிருக்கும் அந்த மக்கள் நன்றாக இருக்கிறார்கள் என அறிக்கை விடுகின்றார்கள்.

இவர்கள் தங்கள் நாட்டு மக்களிடம் எதைச் சொல்லி இஸ்லாத்தின் மீதும், முஸ்லிம்களின் மீதும் தீராத வெறுப்பை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள் என்பதை அறிந்திட இந்தத் தொடர் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். ஏனெனில் இது அவர்களில் ஒருவராலேயே எழுதப்பட்டது. நமக்குத் தரப்பட்டது.




**சர்வதேச அமைப்புகளும் – இஸ்லாமோபோஃபியாவும்**

இன்றைக்கு உலக அளவில் இருக்கும் அமைப்புகளில் மக்களால் மிகவும் எதிர்ப்பார்க்கப்படும் அமைப்பு ஐக்கிய நாடுகள் சபை. இந்த அமைப்பின் மூளையாகச் செயல்படுவது UNSC - UNITED NATIONS SECUERIETY COUNCIL என்ற ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு அவை. இந்த பாதுகாப்பு அவையில் ஐந்து நாடுகள் நிரந்தரமாக அங்கம் வகிக்கின்றன. அந்த ஐந்து நாடுகள்;

1. அமெரிக்கா
2. பிரிட்டன்
3. பிரான்ஸ்
4. ரஷ்யா
5. சைனா

இந்த நாடுகள் அல்லாமல் தற்காலிக உறுப்பினர்களாக பத்து நாடுகள் வீற்றிருக்கின்றன. ஆனால் நிரந்தர உறுப்பினர்களான இந்த ஐந்து நாடுகளுமே இஸ்லாமோபோஃபியாவில் இஸ்லாத்தை வெறுப்பதில் முஸ்லிம்களைப் பூண்டோடு ஒழித்திட வேண்டும் என்பதில் முன்னணியில் நிற்பவை. இந்த நாடுகள் தங்கள் நாட்டில், நமது நாட்டிலுள்ள



ஆர்.எஸ்.எஸ்., அபிநவ் பாரத், சனாதன் சாஸ்தா, வந்தே மாதரம் போன்றப் போன்ற அமைப்புகளை தங்கள் நாட்டில் ஊட்டியும், மூட்டிவிட்டும் வளர்த்துக் கொண்டிருப்பவை. பெரிய அளவில் பணத்தை இதற்காக செலவிடுபவை.

இந்த ஐந்து நாடுகளுமே தங்கள் நாட்டிலுள்ள உளவுத்துறையை ஏவி பல குண்டு வெடிப்புகளையும், துப்பாக்கித் தாக்குதல்களையும் அப்பாவி மக்கள் மீது நடத்தி கொலை செய்திருக்கின்றார்கள். அதன் பழியை முஸ்லிம்கள் மீது போட்டு, முஸ்லிம் இளைஞர்களை சிறைபிடித்து வருகின்றன. அப்பாவி முஸ்லிம்கள் பழி சுமத்தப்பட்டு - அதாவது ஆயுளை சிறை, சித்திரவதை எனச் தொலைத்து கொண்டிருக்கின்றார்கள். இவை எல்லாமே நம் நாட்டில் அப்படியே நடந்து வருகின்றன.

இந்த தாக்குதல்களில் அந்தந்த நாட்டில் இஸ்லாமோபோஃபியா என்ற இஸ்லாத்தின் மீதும் முஸ்லிம்கள் மீதும் வெறுப்பை வளர்க்கும் அமைப்புகளைத் தாராளமாகப் பயன்படுத்தி வருகின்றன.

வெறுப்பை வளர்க்கும் இந்த அமைப்புகள் தங்கள் அமைப்பைச் சார்ந்த இளைஞர்களுக்குக் கொலையைச் செய்யும் பயிற்சிகளை வழங்குகின்றன. இந்த அமைப்புகளைச் சார்ந்தவர்கள் இளைஞர்களுக்கு கொலை செய்யும் பயிற்சிகளை இவர்களின் இராணுவ பயிற்சி தளங்களிலேயே வழங்குகின்றன. இந்த பயிற்சிகளின் போது முஸ்லிம்களுக்கெதிரான வெறுப்பும், வெறியும் ஊட்டப்படுகின்றது.

இப்படி பயிற்சி வழங்கப்பட்டவர்களுக்கு இவர்கள் சார்ந்த நாடுகளின் உளவுத்துறைகள் கொலை செய்யும் திட்டங்களை வகுத்துத் தருவதால் இவர்கள் செய்யும் கொலைகளில் இவர்கள் சிக்குவதில்லை. மாறாக அப்பாவி முஸ்லிம் இளைஞர்களே சிக்க வைக்கப்படுவார்கள். அந்த அப்பாவி முஸ்லிம்கள் தீவிரவாதிகள் எனக் காட்சி ஊடகங்களில் இடைவிடாமல் காட்டப்படுகின்றார்கள்.

எத்தனைக் கொலைகளைச் செய்தாலும் தண்டனை இல்லை. ஆனால் கொலை செய்யப்படுவது முஸ்லிம்களாக இருக்க வேண்டும் என்பது மட்டுமே நிபந்தனை. அல்லது முஸ்லிம்கள் மீது பழிபோடும் வகையில் பொதுமக்கள் மீது தாக்குதல்களை நடத்த வேண்டும். நம் நாட்டின் இந்துத்துவவாதிகள் தீபாவளியின் போது குண்டுவெடிப்புகளை நடத்தியது போல.

இப்படிப்பட்ட சிந்தனைகள், செயல்திட்டங்கள், இவற்றை நாடி நரம்புகளில் கொண்டவர்கள் தாம் UNSC என்ற ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு அவையில் நிரந்தர உறுப்பினர்களாக இருக்கின்றார்கள்.

இந்த பாதுகாப்பு அவையில் அங்கம் வகிக்கும் ஒவ்வொரு நாட்டைப் பற்றிய தகவல்களையும், அந்தந்த நாட்டில் எப்படியெல்லாம் இஸ்லாமோ போஃபியா வளர்க்கப்படுகின்றது என்பதையும் என்பதை அறிந்திட இந்தத் தொடர் பெரிதும் பயன்படும்.

நமது “வைகறை வெளிச்சம்” மாத இதழில் ஒவ்வொரு நாட்டிலும் முஸ்லிம்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளும், முஸ்லிம்கள் எப்படியெல்லாம் இஸ்லாத்தைக் கைவிட நிர்பந்திக்கப்படுகின்றார்கள், சித்திரவதை செய்யப்பட்டுக் கொலை செய்யப் படுகின்றார்கள்

என்பதையெல்லாம் நாம் தனித்தனிக் கட்டுரையாகத் தந்துள்ளோம்.

*(எ.கா. யூகியூர் -சைனா முஸ்லிம்கள் கட்டுரை)*

இந்தக் குரூரமான இஸ்லாமிய வெறுப்பாளர்களைக் கொண்ட அவையில் தான் மோடி அரசின் கஷ்மீர் கெடுபிடிகளுக்கெதிராக நீதி கேட்டார்கள்.

நீண்ட நாட்களாகவே கஷ்மீர் பிரச்சனை ஐக்கிய நாடுகள் சபையின் நேரடி பார்வையின் கீழ் உள்ளது எனக் கூறிவந்த உலக நாடுகள், நீண்ட நாட்களாக ஐக்கிய நாடுகள் சபையின் பார்வையாளர்கள் UNITED NATIONS OBSERVERS என்ற குழுவை நியமித்து வந்தவர்கள் திடீரென கஷ்மீர் இந்தியாவின் உள்நாட்டுப் பிரச்சனை என்றார்கள்.


ஆக நாம் நம்மைச் சுற்றிப் பின்னிப் பிணைந்திருக்கும் இஸ்லாமோபோஃபியாவை புரிந்திருந்தால் உலக நாடுகளின் இந்த அந்தர் பல்டியை எளிதில் புரிந்திடலாம். பின்னர் உலகெங்குமுள்ள மனித உரிமை ஆர்வலர்கள் குரல் எழுப்பவே நாங்கள் மனித உரிமைகளைப் பற்றி கவலைப்படாமலிருக்க மாட்டடோம் என்றார்கள் ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமை ஆணையத்தர்கள்.

மொத்தத்தில் கஷ்மீர் மக்கள் கூட்டுப் படுகொலைகளுக்கும், ஒரு பெரும் இனச்சுத்திகரிப் பிற்கும் உள்ளாக்கப்படும் போது உலகம் வேடிக்கப் பார்த்துக் கொண்டிருந்தது. ஓரிரு இஸ்லாமிய நாடுகள் நீங்கலாக! காரணம் அங்கே இனப்படுகொலை களுக்கும், இன சுத்திகரிப்பிற்கும் உள்ளாக்கப்பட்ட வர்கள் முஸ்லிம்கள். உலகெங்கும் கொடிக்கட்டிப் பறக்கும் இஸ்லாமோபோஃபியா இதற்கு சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்தித் தந்து விட்டது. என்பதை நாம் மறந்திடக் கூடாது.

இந்த இஸ்லாமோபோஃபியாவை எதிர்கொள்ளவும், அதை மக்கள் மனதிலிருந்து துடைத்தெறியவும் இந்தத் தொடர் பெரிய அளவில் இன்ஷா அல்லாஹ் பயன்படும் என்பதனாலேயே இதனை இங்கே தருகின்றோம்.

ஒவ்வொரு தொடரிலும் நாம் அழுத்தமாகச் சுட்டிக் காட்டுவதைப் போல் இன்றைய உலக நிகழ்வுகளின் அடிநாதங்களைப் புரிந்து கொள்ள இந்தத் தொடர் மிகவும் அவசியம். மகிழ்ச்சிக்குரிய விதத்தில் வாசகர்கள் இதனை நன்றாகவே வரவேற்கிறார்கள். அல்ஹம்துலில்லாஹ்.

**– எம்.ஜி.எம்.**




**இனி ஜான் பெஃப்பர் தொடர்ந்து சொல்பவற்றைக் கவனிப்போம்;**

சிலுவைப் போர் வீரர்கள் எனப்படுபவர்கள் தங்கள் மதத்தைச் சார்ந்த கிருஸ்தவர்களையும் கொலை செய்தார்கள். மிகவும் கோரமான முறையில் இந்தக் கொலைகளைச் செய்தார்கள். (இங்கே ரோமானிய கிருஸ்தவர்கள், பைசாந்திய கிருஸ்தவர்களைக் கொலைச் செய்தது குறிப்பிடப்படுகின்றது.) ஏன் பைசாந்திய சக கிருஸ்தவர்களைக் கொலை செய்கின்றீர்கள் எனக் கேட்டபோது, நாங்கள் பழைமைவாத கிருஸ்தவர்களைத்தான் கொலை செய்கின்றோம் என்றார்கள்.

நீங்கள் எப்படி பழைமைவாத கிருஸ்தவர்களையும், சாதாரண கிருஸ்தவர்களையும் அடையாளம் காண்பீர்கள் எனக் கேட்டபோது, அவர்கள், எங்கள் தலைவர் போப் ஆண்டவரைக் கேளுங்கள் என்றார்கள்.

போப் ஆண்டவரைக் கேட்டபோது, அவர் "அனைவரையும் கொன்றுவிடுங்கள் கடவுள் தன்னவர்களைக் கண்டு கொள்வார் - Kill them all. God will know his own" என்றார்.

சிலுவைப்போர் வீரர்கள் அந்த நகரில் வாழ்ந்த ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என 20,000 பேரைக் கொலை செய்தார்கள். சவுல் அமாலிக்கையிட்டுகள் என்பவர்களை கொலை செய்ததைப் போல், கொலை செய்தார்கள்.(பார்க்க அடிக்குறிப்பு 1)

இதேப்போல் தான் "அல்பிஜினிசியன்" என்ற மத

இயக்கத்தைச் சாந்தவர்களை கிருஸ்தவ உலகம் கொலை செய்தது. இன்குசிசன் - Inquisition என்ற ரகசிய விசாரணைத் தளங்களின் வழி பற்பல கொலைகளைச் செய்தார்கள். (பார்க்க அடிக்குறிப்பு 2)

ரோமானிய கிருஸ்தவர்களின் இந்தக் கொலைகள் பைசாந்திய கிருஸ்தவர்களுக்கு எதிராக நடந்தன. அவர்கள் ரோமானியர்கள் தாங்கள் எதிர் கொண்ட பகை யை இவர்கள் இப்படி சித்தரிக்கின்றார்கள், The enemy within and The enemy without - உள்ளுக்குள்ளே உள்ள எதிரிகள், வெளியே உள்ள எதிரிகள்.

இவற்றிலிருந்து ஒருவர் ஒரு முடிவுக்கு வர முடியும். அது கிருஸ்தவம் ஒரு வன்முறையின் மதம் என்பதே! அதேபோல் அது எள்ளளவும் சகிப்புத் தன்மையற்ற மதம் என்பதும் உண்மைப்படுத்தப்படும். இயேசு கிருஸ்துவுடைய பலப் போதனைகள் இந்த வன்முறைக்கும், சகிப்புத்தன்மையின்மைக்கும் எதிரானவை.

ஆனால் பைபிளில் உள்ள, வேதத்திலுள்ள “வெளிப்பாடு” என்ற (யோவானுக்கு வெளிப்படுத்தின சுவிஷேஷம்) அத்தியாயம் வெளிப்படையாகவே வன்முறையை ஏவுகின்றது. உற்சாகப்படுத்துகின்றது. இந்த வெளிப்பாடு என்ற அத்தியாயம் எதிர்பார்க்கப்பட்ட எதிரிகள் என பலரை குறிப்பிட்டு அவர்கள் கொலை செய்யப்படுவார்கள் எனக் குறிப்பிடுகின்றது. (பார்க்க அடிக்குறிப்பு 3)

ஆனால் சிலுவைப் போர் வீரர்கள் முஸ்லிம்கள் தாம் மிகவும் குரூரமானவர்கள் என சித்தரிக்கின்றார்கள். ஆனால் முஸ்லிம்கள் போர்களின் போதும், போர்களில் பெற்ற வெற்றிகளின் போதும் மிகவும் கண்ணியமாகவும், மனிதாபிமானம் மிக்கவர்களாகவும் நடந்து கொண்டார்கள். முஸ்லிம்கள் சிலுவைப் போர் வீரர்கள் பரப்பியவற்றுக்கு நேர் எதிராக இருந்தார்கள்.

முஸ்லிம்களாவ் ஜெரூசலம் வெற்றிக்கொள்ளப்பட்ட போதும், கான்ஸ்டாண்டி நோபுள் வெற்றிக் கொள்ளப் பட்ட போதும், சைப்பிரஸ் வெற்றிக்கொள்ளப்பட்ட போதும் முஸ்லிம்கள் காட்டிய பெருந்தன்மை, கண்ணியம் போற்றுதற்குரியது.

முஸ்லிம்களின் பெருந்தன்மையும், சகிப்புத் தன்மையும் வரலாற்றில் பிரகாசமாக ஜொலித்து கொண்டிருக்கும் போதே, சிலுவைப் போர் வீரர்கள் அவர்களை அசிங்கமாகச் சித்தரித்துக் கொண்டிருந்தார்கள். இன்றளவும் சித்தரித்து வருகின்றனர். (பார்க்க அடிக்குறிப்பு 3)

இதற்கோர் சீரிய எடுத்துக்காட்டு இஸ்லாமியக் குடியரசு தலைவர் கலீபா உமர்(ரழி) அவர்கள் ஜெரூசலத்தை வெற்றிக் கொண்ட வரலாறு. அவர்கள் அடைந்த அந்த வரலாற்று சிறப்புமிக்க வெற்றியின் போது துமி அளவு இரத்தத்தைக் கூட அவர்கள் சிந்தவில்லை.

கலீபா உமர்(ரழி) அவர்கள் சோஃப்ரோஸியஸ் என்ற கிருஸ்தவ தலைவர்களுடன், அதாவது அன்று ஜெரூசலத்தை ஆண்டு வந்தவர்களுடன் ஓர் ஒப்பந்தத்தை செய்துக் கொண்டார். அதில் இடம் பெற்ற நிபந்தனைகளுள் ஒன்று திருக்குர்ஆன் கூறும் இஸ்லாம் மார்க்கத்தில் நிர்பந்தமில்லை என்பதும் அடங்கும்.

அதேப்போல் அதேபபோல் பிற்றை நாட்களில் இஸ்லாமிய வரலாற்றில் 1187இல் சலாஹுத்தீன் அவர்கள் கிருஸ்தவர்களிடமிருந்து ஜெரூசலத்தைக் கைப்பற்றிய போதும் உமர்(ரழி) அவர்கள் நடந்து கொண்டதைப் போலவே நடந்து கொண்டார்கள்.

உமர்(ரழி) அவர்கள் அன்று ஜெரூசலத்திலிருந்து வெளியேறிட விரும்பியவர்கள் அனைவரையும் அனுமதித்தார்கள். அத்தோடு அவர்கள் தங்கள் செல்வங்களையும், இன்னோரன்னவற்றையும் எடுத்துச் செல்லவும் அனுமதித்தார்கள்.

இதேப்போல் தான் முஸ்லிம் உலகம் யூதர்களோடு கொண்ட உறவுகளும் பெருந்தன்மை மிக்கதாக இருந்தன.

**இன்ஷா அல்லாஹ் அவை அடுத்த இதழில்.**

### அடிக்குறிப்பு 1

சவுல் என்பவர் முதல் இஸ்ரேலிய மன்னன் என அறியப்படுபவர். இவன் கிருஸ்துவக்கு முன் 1047இல் இருந்து 1000ஆம் ஆண்டு வரை ஆட்சி செய்தவர். இவர் அமாலிகை என்ற ஒரு மத இனத்தை கொலை செய்தான். இந்த “அமாலிகைட்ஸ்” என்பவர்கள், அடிக்கடி மனித உருவத்திலிருந்து மிருக உருவத்திற்கு மாறிவிடுவார்கள் என்றொரு நம்பிக்கை யூதர்களிடமிருந்தது.

அதனால் கண்ணில் கண்ட மிருகங்களையெல்லாம் வெட்டி வீழ்த்தினார்கள். அதே போல் தாங்கள் சந்தேகப்பட்ட மனிதர்கள் அனைவரையும் கொலை செய்தார்கள். அப்படி சந்தேகப்பட்டவர்களில் பல யூதர்களும் உண்டு. இதில் யூதர்கள் கடைபிடித்தக் கொள்கை என்னவெனில் எல்லோரையும் கொன்று கடவுளிடம் அனுப்பிவிடுவோம். கடவுளாகப் பார்த்து நல்லவர்களைத் தேர்ந்தெடுத்து சுவர்க்கத்தை கொடுக்கட்டும் என்பதாகும். கிருஸ்துவுக்கு முன் உள்ள இந்த காலக்கட்டத்தை அறியாமையின் காலம், மனித

இனம் இருட்டு உலகில் வாழ்ந்த காலம் என்பார்கள். இதேப்போல் தாங்கள் சந்தேகப்படுபவரை எல்லாம் சிறைப்பிடியுங்கள் என்ற சட்டத்தை இந்தியாவில் மோடி, அமித்ஷா ஆகியோர் இயற்றியுள்ளனர். செயல்படுத்தவும் செய்கின்றனர். அந்த சட்டம் தான் UAPA: *2019.*

இப்படி யூதர்களின் வரலாறு என்பது கொலை வரலாறாகவே இருந்தது. இதேபோல் பின்னாளில் கிருஸ்தவர்கள், சக கிருஸ்தவர்களைக் கொலைச் செய்தார்கள். கேட்டபோது எல்லோரையும் கொலை செய்யுங்கள், கடவுள் தனக்கு வேண்டியவர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளட்டும். பரலோகத்தில் சொக்கத்தை வழங்கட்டும் என்பதாக இருந்தது. இப்படி யூதர்கள், கிருஸ்தவர்கள் இவர்களின் வரலாறு கொலைக்களின் வரலாறாகவே இருந்தது. இவர்கள் இன்று அன்பு, சாது எனத் தங்களைக் காட்டிக் கொள்கிறார்கள்.

### அடிக்குறிப்பு 2

அன்றைய கிருஸ்தவ அரசுகளுக்கு ஒரு தொடர் கொலை வரலாறு உண்டு. அவர்கள் தங்கள் மதத்தில் பகுத்தறிவு வாதங்களைப் பேசியவர்களை ரகசியமாக விசாரணை செய்து கொலையும் செய்தார்கள். அதேப்போல் விஞ்ஞானிகள் தங்கள் ஆய்வுகள் மூலம் கண்டெடுத்த ஆய்வு முடிவுகள் கிருஸ்தவத்திற்கு எதிராக இருந்ததால் அவர்களையும் கொன்றார்கள். கலிலியோ போன்ற விஞ்ஞான மேதைகளையும் இதே இரகசிய விசராணைகள் வழி கொலை செய்தார்கள் இவற்றையே இங்கே ஜான் பெஃப்பர் குறிப்பிடுகிறார்.

### அடிக்குறிப்பு 3

இந்த வெளிப்பாடு அத்தியாத்தின் பலப்பகுதிகளை அக்டோபர் 2019 இதழில் குறிப்பிட்டிருந்தோம். இஸ்லாம் போர்களில் கூட எப்படி பெருந்தன்மை யோடும், மனிதாபிமானத்தோடும் நடந்து கொண்டது என்பதின் ஒரு பகுதியை வாசகர்கள், இஸ்லாமிய நாகரிகம் என்ற நூலில் படிக்கலாம். இது வேர்கள் பதிப்பகத்தின் வெளியீடு.

இங்கே இயல்பாக எழும் வினா என்னவெனில் ஏன் இஸ்லாம் தங்களை அழிக்க வரும் எதிரிகளிடம் கூட பெருந்தன்மையோடு நடந்து கொள்ள வேண்டும்? காரணம் இஸ்லாம் மனித இனத்தை அழிக்க வந்த மார்க்கம் அல்ல. அவர்களை நேர்மையும், ஒழுக்கமும் நிறைந்த மனிதர்களாக வாழ வைத்திட வந்த மார்க்கம். ஆனால் கிருஸ்தவ உலகமும். யூத உலகமும், பாசிஸ்டுகளும், இந்தியாவில் இந்துத்துவமும் மனிதர்களை அழித்து அதன் மீது தங்கள் ஆதிக்கத்தை நிலை நாட்டிக் கொண்டிருக்கின்றன.

## கஷ்மீர் விவகாரத்தில் இஸ்ரேல் போல நடந்து கொள்ளுங்கள்

ஆர்.எஸ்.எஸ் மனித மிருகம் இந்தியாவுக்கான ஐ.நா. தூதர்.காஷ்மீர் கலாச்சாரம் இந்து கலாச்சாரம், வேறு யாருடையதும் கிடையாது (முஸ்லிமின்). எப்படி யூதர்கள் 2000 வருடமாக தங்கள் கலாச்சாரத்தை பாதுகாக்கிறார்களோ அப்படி காஷ்மீர் பண்டித்துகள் காக்க வேண்டுமாம்.

காஷ்மீர் பண்டித்துகள் காஷ்மீர் திரும்ப வேண்டுமாம். அதாவது முகாம்களில் உள்ளவர்கள். தலைவர்கள் சிந்தித்து 370 விதி நீக்கினார்களாம். இப்போது நிலைமை சீராக உள்ளதாம். அனுபவ் சொல்கிறார். நாம் மற்ற மதத்தவரை சமமாக பார்கிறோம்,வழிபாட்டுக்கு செல்கின்றோம்.

நம்மை போல் மற்றவர்கள் நினைக்க வேண்டும் என கருதுகிறோம். ஆனால் நாம் மற்றவர்களை போல் நினைப்போம். அப்போது தான் மற்றவர்களை(முஸ்லிம்) வீழ்த்த முடியும்.

நாம் இதுவரை இந்து பெருபான்மை பலத்தை பயன்படுத்த வில்லையாம். இப்போது பயன்படுத்தியுள்ளனராம். இது பலருக்கு கவலை தருகிறதாம். இத்துணை பெரிய ரிஸ்க் எந்த நாடும் எடுக்காது. இது போன்ற அமெண்ட்மெண்ட் கொண்டுவர, மோடி அரசு முடிவு எடுத்துள்ளது இந்துகளுக்காக. சர்வதேச அளவில் எதிர்ப்பு வந்தும் நாம் இதை செய்துள்ளோம். இந்த பிரச்சினை ஐ.நா. கவுன்சில், மனித உரிமை அமைப்பு, அமெரிக்க காங்கிரஸ் போன்றவற்றில் எடுத்து செல்லப்பட்டது.

ஈராக், சிரியா, ஆப்கான் பிரச்சினை எடுத்து செல்லுங்கள் ,எங்களிடம் ஏன் வருகிறீர்கள். நாங்கள் இவ்விசயத்தில் உறுதியாக இருப்பது அவர்கள் விரும்பவில்லை.

காஷ்மீர் பண்டித்துகள் காஷ்மீர் திரும்ப வேண்டுமாம். அதாவது முகாம்களில் உள்ளவர்கள். இதற்கு மேற்கத்திய இஸ்ரேல் நாடு முன் உதாரணம் ஆகும். நாம் இஸ்ரேலை பின்பற்ற வேண்டும். இஸ்ரேல் செய்த போது ஏன் நம்மலால் முடியாது. அதாவது யூதர்கள் அகதிகளாக முஸ்லிம்களை நாட்டை விட்டு விரட்டியது போல் ஏன் உங்களால் முடியாது முடியும்.

ஐ.நா. தூதருக்கு எவ்வளவு முஸ்லிம் வெறுப்பு என்பதை நாம் புரிந்து இனி நாம் சமூகத்தை காக்க முன் வருவோம். காஷ்மீர் 370 நீக்கம் ஒரு முஸ்லிம் இன அழிப்பே. அதை நேரடியாக சொல்லிவிட்டார் சந்தீப் சக்கரவர்த்தி.



# காஷ்மீர் விவகாரத்தில்

# இண்டர்நேஷனல் பிசினஸ் புரோக்கர்

அக்டோபர் 28ஆம் தேதி ஐரோப்பிய எம்பிக்கள் குழு 22 பேர் இந்தியாவில் காஷ்மீர் மாநிலத்தின் நிலவரத்தை காண வந்தார்கள். வந்தவர்கள் 28ஆம் தேதி பிரதமர் மோடி மற்றும் அஜித்குமார் தோவாளை சந்தித்தனர். அப்போது மோடியை 370 நீக்கத்தை பற்றியும் காஷ்மீரில் பாகிஸ்தான் தீவிரவாதத்தை தூண்டுவதாகவும் அந்த எம்பிக்கள் குழுவிடம் தெரிவித்தார். மேலும் இந்தக் குழு அஜித்குமார் தோவலை சந்தித்தது. அப்போது காஷ்மீர் முன்னாள் துணை முதலமைச்சர் முசாஃபர் பேக், முன்னாள் பிடிபி தலைவர் அல்தாப் புகாரி போன்ற கருப்பு ஆடுகள் உடனிருந்தனர்.இவ்வாறு வெளிநாட்டு குழு காஷ்மீரில் வந்து அங்கு என்ன நடக்கிறது என்பதை பார்ப்பது முதல் தடவையாகும். இப்படி வெளிநாட்டு குழுவை அனுமதித்ததே காங்கிரஸ் போன்ற இதர சிலர் கட்சிகள் கண்டித்தன.

குலாம் நபி ஆசாத், சீதாராம் எச்சூரி போன்ற தலைவர்கள் காஷ்மீர் செல்வதற்கு உச்சநீதிமன்றத்தை நாட வேண்டிய தேவை ஏற்பட்டது. ஏனென்றால் மத்திய மோடி அரசு அவர்களை அனுமதிக்க வில்லை. நிலைமை இவ்வாறு இருக்க இந்த எம்பிக்கள் குழுவை மட்டும் எப்படி மத்திய அரசு அனுமதித்தது? வெளிநாட்டு எம்பிக்கள் குழுவை அங்கு அனுமதித்தது சந்தேகத்தை ஏற்படுத்தியது இதைப் பற்றி ஊடகங்கள் தந்த தகவல் அதிர்ச்சி அளிப்பதாக இருந்தது.

வந்த அனைத்து ஐரோப்பியர்களும் வலதுசாரி சிந்தனை கொண்டவர்கள் இஸ்லாமிய வெறுப்பு இஸ்லாமோஃபோபியா கொண்டவர்கள். மேதி சர்மா எவ்வாறு இந்த எம்பிக்கள் குழுவை இவர் உருவாக்கினார்? இதைப்பற்றி பார்த்தோமேயானால் பல திகைப்பூட்டும் செய்திகள் கிடைக்கின்றன. மேதி சர்மா ஒரு சர்வதேச பிசினஸ் ப்ரோக்கர். இவர் பிரிட்டனை சேர்ந்த இந்திய வம்சாவளி. இவர் உமன்ஸ் எகனாமிக் அண்டு சோசியல் டிங்டாங் என்ற அமைப்பை நடத்தி வருகிறார். இது ஒரு என்ஜிஓ அமைப்பாகும். அதுமட்டுமில்லாமல் ஈரோப்பியன் எகனாமிக் அண்டு சோசியல் கமிட்டியின் உறுப்பினர் ஆவார் இவர்.

இந்த மேதி சர்மா செப்டம்பர் 14 அன்று Eptoday.com இல் ஏன் 370வது பிரிவு நீக்கப்பட்டது மற்றும் காஷ்மீர் பெண்கள் சந்திக்கும் சவால் என்ற கட்டுரையை மோடிக்கு ஆதரவாக எழுதி உள்ளார். இபி டுடே என்பது ஐரோப்பிய பாராளுமன்றத்தின் பத்திரிகையாகும். இந்தப் பத்திரிகையில் இதற்கு முன்னால் இப்படி லாபி நடந்ததை கார்டியன் பத்திரிக்கை வெளிச்சம் போட்டு காட்டியுள்ளது.



அந்தவகையில் இந்தியாவிற்கு லாபி செய்யும் விதமாக சர்மா இந்த கட்டுரையை எழுதியுள்ளார். இவர் பிரதமர் அலுவலகம் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் போன்றவற்றுடன் நேரடியாக பேசும் அளவுக்கு செல்வாக்கு எப்படி வந்தது? இத்தனை நாள் காஷ்மீர் பிரச்சினை உள்நாட்டுப் பிரச்சினை என்று சொல்லி வந்த இந்தியா ஐரோப்பிய எம்பி குழுக்களை அங்கு செல்ல அனுமதித்ததன் மூலம் இது சர்வதேசப் பிரச்சினை என்று பறைசாற்றுவது போல் உள்ளது. இப்போது இந்த எம்பிக்கள் குழுவைப் பற்றி நாம் பார்ப்போம் ;

இந்த எம்பிக்கள் அனைவரும் வலதுசாரி சிந்தனைவாதிகள் இஸ்லாமிய வெறுப்பை கொண்டவர்கள். இவர்கள் அகதிகள் குடியேற்றத்தை எதிர்ப்பவர்கள் இஸ்லாமிய வெறுப்பு கொண்டவர்கள். இதனாலேயே முஸ்லிம்களின் மாநிலத்துக்கு அழைத்துவரப்பட்டு உள்ளார்கள்.

**பெர்னார்டு ஜிம் நோக் ஜெர்மன் நாட்டு எம்பி**

இவர் காஷ்மீர் பற்றிய விவாதம் ஐரோப்பிய பாராளுமன்றத்தில் நடந்த போது நாம் வெளிநபர்கள் காஷ்மீர் விவகாரம் இந்தியாவின் உள்நாட்டு விவகாரம் எனவே இந்தியாவுக்கு எதிராக எந்த முடிவையும் எடுக்க வேண்டாம் என பேசியவர்.

**ரை சார்ட் சசர் நிக் போலந்து**

இவரும் ஐரோப்பிய பாராளுமன்றத்தில் இந்தப் பிரச்சனையை விரிவாக பார்க்க வேண்டும் காஷ்மீர் பெரிய அளவில் தீவிரவாதம் உள்ளது. இந்த தீவிரவாதிகள் நிலாவில் இருந்து வரவில்லை பக்கத்து நாடான பாகிஸ்தானில் இருந்து வந்தவர்கள் என்று பேசியவர். மேலும் இந்தப் பிரச்சினையில் ஜனநாயக நாடான இந்தியாவை நாம் ஆதரிக்க வேண்டும் என்று சொன்னவர்.

**ஹெர்மன் டெட்ரிஸ் ஸ்பெயின்**

இவர் காஷ்மீர் செல்லும் முன் ரிபப்ளிக் டிவியில் கூறியது இந்தியாவின் தேசிய ஒருமைப்பாட்டை பாதுகாப்பது முக்கியம் நாங்கள் காஷ்மீர் வளர்ச்சியை கருத்தில் கொள்வோம் என்று சொன்னவர்.

**தியரி மரியான் பிரான்ஸ்**

இவர் 370 ஆவது பிரிவை இந்தியா நீக்கியது ஆதரித்தவர் மேலும் இது உள்நாட்டு பிரச்சனை என்று கூறியவர். இவர் ஒரு இஸ்லாமியபோபியா வாதி ஆவார்.

இப்படியாக மோடி அரசு வலதுசாரி சிந்தனை கொண்ட எம்பிக்கள் குழுவை காஷ்மீரில் அழைத்து அந்தக் குழுவை கொண்டு காஷ்மீரில் எல்லாம் நன்றாக நடக்கிறது என்ற தோற்றத்தில் வெளியே சொல்ல நினைத்தார். ஆனால் ஊடகங்கள் மோடியின் குட்டை வெளிப்படுத்தி இந்த எம்பிக்கள் குழு பணத்தைப் பெற்றுக்கொண்டு இவ்வாறு நடக்கின்றன என்பதை வெளிப்படுத்தி விட்டன.

மேதி ஷர்மா இதேபோல் இந்த ஐரோப்பிய எம்பிக்கள் குழுவை கடந்த ஆண்டு மாலத்தீவு தேர்தல் நேரத்தில் அழைத்துச் சென்றுள்ளார். இதற்கு அப்போதைய மாலத்தீவு அரசு எதிர்ப்பு தெரிவித்து. ஐரோப்பிய யூனியனுக்கு கடிதம் எழுதியது. அதற்கு பதிலாக ஐரோப்பிய யூனியன் அது அவர்களின் தனிப்பட்ட பயணம் என்று குறிப்பிட்டு வருத்தம் தெரிவித்தது. இதேபோல் இந்த மேதி சர்மா பங்களாதேஷின் கடந்த ஆண்டு தேர்தலில் அழைத்து சென்றுள்ளார். அந்நேரத்தில் ஷேக் ஹசீனா வின் அரசுக்கு ஆதரவாக கட்டுரை ஒன்றையும் இந்த குழு எழுதியிருக்கிறது .

எம்பிக்கள் குழுவை மற்ற நாட்டிற்கு அழைத்துச் செல்லும் மேதி சர்மா யார்? இவருக்கு யார் இந்த அதிகாரத்தை தந்தது? மேதி சர்மா எம்பிக்கள் குழு அனுப்பிய மெயிலில் போக்குவரத்து செலவை International Institute of non-aligned Study என்ற என்ற அமைப்பு ஏற்றுக்கொள்ளும் என்று குறிப்பிட்டிருந்தார்.

இந்த லிமிழிஷி என்ற அலுவலகம் டெல்லியில் உள்ளது. ஸ்ரீனிவாஸ்தவ் குரூப் இதை நிர்வகிக்கிறது. ஸ்ரீனிவாசவ் தலைவர், அவர் மகன் அன்கிட் ஸ்ரீனிவாஸ்தவ் New delhi times என்ற செய்தி இணைய தளத்தையும் நடத்தி வருகிறார். என்ற விவரம் கிடைத்துள்ளது.

**முகமது இக்பால்.**

# தொடரும் NIA-வின் மிரட்டல்கள்




NIA தமிழகத்தில் நடத்தி வரும் கொடுமைகளுக்கு எதிராக நமது மூன்றாவது கள ஆய்வை நடத்தி முடித்திருக்கிறோம். தமிழகத்தில் சோதனை என்ற பெயரில் NIAவின் நடவடிக்கைகள் தமிழகத்தில் வாழும் முஸ்லிம்களுக்கு ஒருவித அச்ச உணர்வை உருவாக்க செய்கிறது. அதற்கும் மேலாக ஒருவித குற்ற உணர்வையும் முஸ்லிம்களுக்குள் உருவாக்க செய்கிறது. இதனை களைந்திடவே இந்த கள ஆய்வை நாம் மேற்கொண்டோம்.

*கள ஆய்வில் நமக்கு தெரிய வந்தது, முஸ்லிம்களின் மீது பழிகளை சுமத்த ஏதேனும் ஒரு காரணத்தை உருவாக்கி அதன் மூலம் முஸ்லிம் இளைஞர்களை குற்றவாளிக் கூண்டில் நிறுத்தவும், அதற்கு வேண்டிய சாட்சிகளை திட்டமிட்டு உருவாக்கவும் முனைகிறது NIA. இதற்காக அவர்கள் பயன்படுத்துவது பேஸ்புக் போன்ற சமூக வலைத்தலங்களைத் தான். சமூக வலைத்தளங்களில் பகிரப்படும் கருத்துக்களின் சூழ்ச்சியாக புனையப்பட்டு முஸ்லிம்கள் குறி வைக்கப்படுகின்றனர்.*

*(கைதுகளில், சோதனைகளில் சம்பந்தப்பட்டவர்களின் பாதுகாப்பு காரணங்களுக்காக பெயர்கள் மாற்றப்பட்டிருக்கிறது.)*

### அர்ஜுன் சம்பத் கொலை வழக்கு

*அர்ஜுன் சம்பத்தை கொலை செய்ய முயன்றதாக கூறி ISIS பெயரில் 2108செப்.1ம் தேதி கைது செய்யப்பட்டனர். இதுவே தமிழ்நாட்டில் ISIS பெயரில் நிகழ்த்தப்பட்ட முதல் கைது. இதற்கு பிறகு இலங்கை குண்டுவெடிப்பு நடக்க அதனோடு சம்பந்தப்படுத்தி இந்திய ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டு தமிழக முஸ்லிம்களை அச்சுறுத்தின.*

*இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட ரஃபீக் தற்போது பிணையில் உள்ளார். அவரிடம் நடத்திய நேர்காணலில் அவர் பகிர்ந்து கொண்டது,*

“செப்டம்பர் 1ல் என் முகநூலில் நண்பர்களாக இருந்த நான்கு பேர் எங்கள் ஊரில் நடந்த திருமணத்திற்காக வருவதால், உள்ளூர்காரனாக நான் இருப்பதால் அவர்களுக்கு இடத்தை காட்ட நான் அழைத்து வர ரயில் நிலையத்துக்கு சென்றிருந்தேன். நான் இதுவரை அந்த நான்கு பேரையும் பார்த்ததில்லை. முகநூலில் மட்டுமே பழக்கம்.

அப்போது பிளாட்பாரத்தில் நின்றிருந்த என்னை போலீசார் அழைத்து எதற்கு நிற்கிறாய் என கேட்டார்கள். நான் விவரத்தை கூறிய பிறகு வெளியில் அழைத்து சென்று ஒரு வண்டியில் ஏற்றி உட்கார வைத்து விட்டார்கள். பிறகு சிறிது நேரத்தில் வண்டியில் நான்கு பேரை ஏற்றினார்கள். அப்போது தான் அந்த நான்கு பேரையும் நான் நேரில் பார்த்தேன்.

பிறகு எங்கள் ஐந்து பேரையும் தமிழக போலீஸ் வழக்கு பதிந்து கோவை சிறைக்கு மாற்றினார்கள். இதன் பிறகு வழக்கு NIAக்கு மாற்றப்படுகிறது. UAPA வழக்கு என்பதால் ஆறு மாதத்திற்கு பிணை வாங்க முடியாது. ஆறு மாத சிறை வாழ்க்கை கடந்த நிலையில் எங்கள் ஐந்து பேருக்கும் பிணை வழங்கப்பட்டது.

நாங்கள் பிணையில் வெளிவந்து ஒரு மாதத்திற்கு பிறகு ஏப்ரல் 2019ல் இலங்கையில் குண்டுவெடிப்பு நிகழ்கிறது. குண்டுவெடிப்பிற்கு பிறகு வெளிவந்த பத்திரிகையில் என் படத்தை முகப்பாக போட்டு இவருக்கும் இலங்கை குண்டுவெடிப்புக்கும் தொடர்பு என போட்டிருந்தார்கள்.

*(இலங்கை குண்டு வெடிப்பு 2019 ஏப்ரலில் நடந்து இலங்கை உளவுத்துறை, இலங்கை அரசால் குற்றவாளிகள் யார் என்று சொல்வதற்கு முன்பாகவே கோவையை சார்ந்த நபர்களுக்கு தொடர்புண்டு என்ற செய்தியை வெளியிட்டன தமிழக ஊடகங்கள். இவர்களுக்கு செய்தியை கொடுத்தது இந்திய உளவுத்துறையா?.. இலங்கை உளவுத்துறையா?)*

செய்தி பார்த்த எனக்கு பேரதிர்ச்சி. அதன் தொடர்ச்சியாக நியூயார்க் டைம்ஸ் பத்திரிகை யிலிருந்து எனது பதிலை கேட்டு வந்திருந்தனர். உண்மையை வெளிப்படையாக கூறினேன். NIA தனது பெயரினைக் கொண்டு எப்படியெல்லாம் திசை திருப்பி இருக்கிறது என்று முழுவதுமாக கூறினேன்.

இதற்கிடையில் தனியார் செய்தி தொலைக்காட்சி ஒன்று என் படத்தை போட்டு இவருக்கும் இலங்கை குண்டுவெடிப்பிற்கும் சம்பந்தம் இருக்கிறது என்று செய்தி வெளியிட்டது. அவர்களை தொடர்பு கொண்டு ஏன் இப்படி

பொய் செய்திகள் போடுகிறீர்கள் என கேட்டதற்கு, NIA தான் செய்தி கொடுத்தார்கள் என கூறினார்கள். சம்பந்தமில்லாத என்னை டிவியில் காட்டுகிறீர்கள் என்று அவர்களிடமே ஆதங்கப்பட்டேன்.

அதன் பிறகு மற்ற தமிழ் ஊடகங்களும் என்னை பேட்டி எடுத்தனர். அதில், "என் மீது போடப் பட்டிருக்கும் முதல் வழக்கும் பொய்யானது. புனையப்பட்டது. இதன் தொடர்ச்சியாக எங்கள் மீது வேண்டுமென்றே திட்டமிட்டு இத்தகைய பொய்கள் பரப்பப்படுகிறது. ஏற்கனவே NIA எங்கள் மீது போட்ட பொய் வழக்கில் எங்கள் வாழ்க்கையை தொலைத்திருக்கிறோம். இது மேலும் எங்களை காயப்படுத்துகிறது" என்று கூறினேன்.

எனது பேட்டிக்கு பிறகு NIA எங்கள் பிணைக்கு எதிராக வழக்கு தொடர்ந்தது. அதையும் நாங்கள் முறியடித்திருக்கிறோம். எங்கள் மீது எந்த ஆதாரமும் இல்லை. நான் முகநூலில் பயன்படுத்தியதை வைத்து இந்த குற்றப்பத்திரிக்கையை தயார் செய்திருக்கிறார்கள். 5000 பக்கம் கொண்ட குற்றப்பத்திரிக்கையில் அவர்களுக்கு விருப்பபட்ட கதைகளை எழுதியிருக்கிறார்கள். அதற்கு எவ்வித ஆதாரங்களும் இல்லை.

இருந்தாலும் மிரட்டி சில சாட்சிகளை உருவாக்கப் பார்கிறார்கள். ஆனாலும் இது பொய் வழக்கு என்பது அனைவருக்கும் தெரியும். அதனை நீதிமன்றத்திலும் நிரூபிப்போம்." என்றார்.

## குற்றப்பத்திரிக்கையில் அபத்தம்

*அர்ஜூன் சம்பத்தை கொலை செய்ய முயற்சி என்று கைது செய்யப்பட்ட ஐந்து நபர்களின் மீதும் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டது. இதில் ஐவரின் ஒப்புதல் வாக்கு மூலம் என்ற பெயரில் NIA அதிகாரிகள் நினைத்ததையெல்லாம் எழுதியிருக்கிறார்கள். குற்றப்பத்திரிக்கையின் படி, கைது செய்யப் பட்டுள்ளவர்களே ஒப்புதல் தந்திருப்பதாக கூறப்படுவது: இந்து தலைவர்களை கொலை செய்ய திட்ட மிட்டிருந்தார்கள், ஐஸ்ஐஎஸ் சிந்தனையில் மூழ்கியிருந்தார்கள், ஐஎஸ்ஐஎஸ் உறுப்பினராகவும் இருந்தார்கள் என குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் ஒப்புதல் வாக்குமூலம் கூறியிருக்கும் நபரே, அனைத்து பத்திரிக்கையிலும் வெளிப் படையாக NIA அனைத்தையும் திட்டமிட்டு நிகழ்த்தியிருப்பதாக சொல்லியிருக்கிறார். குற்றப்பத்திரிக்கையில் கைது செய்யப்பட்ட வரைக் கொண்டே ஆயுதங்கள் எல்லாம் பறிமுதல் செய்யப்பட்டிருப்பதாக சொல்லப் பட்டிருக்கிறது. ஆனால், அதெல்லாம் அவர்களே திட்டமிட்டு உருவாக்கியது என்கிறார்கள் சம்பந்தப்பட்டவர் களும் அப்பகுதி மக்களும்.*

## NIAவின் தொடரும் கைதுகளுக்கு காரணம்

*முதன் முதலாக தமிழகத்தில் அர்ஜூன் சம்பத் கொலை முயற்சி என கைது செய்யப்பட்டவர்களின் முகநூல் நண்பர்கள். அவர்களது போஸ்டுகளுக்கு லைக் போட்டவர்கள், கமெண்ட் போட்டவர்கள் என அவர்களுடன் சமூக வலைத்தளத்தில் தொடர்பில் இருந்தவர்களே பெரும்பாலும் பின்னாளில் கைது நடவடிக்கைகளுக்கு உள்ளாக்கப் பட்டனர்.*

*முகநூலில் அடையாளம் தெரியாமல் அரபியில் சில பெயர்களை உருவாக்கி அதன் மூலம் ரிக்வஸ்ட்கள் கொடுக்கப்படுகிறது, அந்த பெயரில் உள்ளவர்களே தனியாக மெசேஜ் செய்கிறார்கள். இதற்கு யதார்த்தமாக பதில் கொடுப்பவர்கள் NIA அதிகாரிகளால் கைது செய்யப்படுகிறார்கள். இந்த அரபி பெயர் கொண்ட அடையாளம் இல்லாத முகநூல் ஐடிக்களே உளவுத்துறையால் முஸ்லிம்களை பிடிப்பதற்காக உருவாக்கப்பட்டவை என்று சமூக ஆர்வலர்கள் குறிப்பிடுகிறார்கள்.*

*இப்படி பாதிக்கப்பட்டு கைது செய்யப்பட்ட இர்ஃபான் கூறும் போது;*

நான் ஒரு முஸ்லிம் அரசியல் அமைப்பில் இணைந்து இரத்தம் கொடுத்தல் போன்ற சமூக சேவைகளை செய்து வருகிறேன். ஆனால், திடீரென ஒருநாள் வீட்டில் சோதனை நடத்தப்பட்டு NIA அதிகாரிகளால் கூட்டிச் செல்லப்பட்டு நான்கு நாட்கள் விசாரணைக்கு பிறகு விடுவிக்கப்பட்டேன். ஆனாலும் மீண்டும் அழைப்போம் என்று கூறியிருக்கிறார்கள்.

வெறும் முகநூல் தொடர்பு, நேரில் சந்தித்தது கூட கிடையாது. இதனை ஒரு பொருட்டாக வைத்துக் கொண்டு எங்களை கைது செய்கிறார்கள். விசாரணை எனும் பெயரில் எங்களை மன உளைச்சலுக்கு உள்ளாக்குகிறார்கள். இந்த பிரச்சனைக்கு பிறகு என்னிடம் யாரும் இயல்பாக பேசுவதில்லை. பேசுவதற்கே பயப்படுகின்றனர். என்னுடன் விசாரணைக்கு அழைத்து செல்லப் பட்டவர்களும் கூட யாரையும் நேரில் பார்த்ததில்லை. எல்லோரும் முகநூலில் ஏற்பட்ட தொடர்பில் யதார்த்தமாக பேசி பழகியவர்கள் தாம்.

## சமூக வலைத்தளம் என்ன மாபெரும் குற்றமா?

*சமூக வலைத்தளமானபேஸ்புக், டெலிகிராம் பயன்பாட்டின் அடிப்படையே தெரிந்தவர்கள், தெரியாதவர்கள் என எல்லோரையும் இணைக்கிறது.. அதில் யாரும் நேரில் அறிமுகமாவது கிடையாது. அதில் போடப்பட்டிருக்கும் மிஞ்சி போடோக்கள் கூட உண்மையானதாக இருக்க முடியாது. இப்படி முகநூலில், டெலிகிராமில் யாரும் கணக்கு தொடங்கலாம். எவரும் யாருடனும் பேசலாம் என்ற நடைமுறை இருக்கிறது.*

*நேரடியாக சந்திந்து பழகுவதன் வாய்ப்பு இல்லாதபோது இதில் பகிரப்படும் கருத்துகள், செய்திகள் இந்திய இறையாண்மைக்கு அச்சுறுத்தலாக இருக்க முடியாது.*

இதில் ஒரு ரிக்வஸ்ட் வருகிறதெனில் அனுப்பியவர் யார், முகவரி, அவருடைய வரலாறு எல்லாம் அறிந்து கொள்ளப்பட்டு பின்பு ஏற்றுக் கொள்ளும் நடைமுறையெல்லாம் யாராலும் பின்பற்றப்படுவது கிடையாது. எதையும் பார்க்காமல் நண்பர்களாக்கி கொள்வார்கள். இதுபோல் 5000 நண்பர்கள் வரை முகநூலில் இணைத்து கொள்ள முடியும். இவர்களில் 50 பேரைக் கூட அதிகபட்சம் நேரில் பார்த்திருக்கவும் மாட்டார்கள், அவர்களை பற்றிய எந்த தனிப்பட்ட தகவலும் தெரியாது. இந்த நிலையில் முகநூல் தொடர்பை ஆதாரமாக கொண்டு முஸ்லிம் இளைஞர்கள் NIA அதிகாரிகளால் மிரட்டப் படுகிறார்கள்.

முகநூலில் மிக மோசமாக தரக்குறைவாக மத வெறியை பரப்புவதற்கு பெரும்பாடு படுகிறவர்கள் காவி அமைப்பினர். ஆனால் அவர்கள் மீது எந்தவொரு வழக்கும், சோதனையும் கிடையாது.


அதுமட்டுமல்ல, தீவிரவாத கருத்துகளை சொல்லும் காவி பயங்கரவாதிகள் பாராளுமன்ற எம்.பி யாகவும், நாட்டின் பாதுகாப்பு ஆலோசனை குழுக்களலும் பங்கு பெறுகிறார்கள். அவர்களை கேள்வி கேட்காமல் அப்பாவி முஸ்லிம்களை மட்டும் குறி வைத்து மதவெறியுடன் நடந்து கொள்கிறதா? NIA.. தங்களை பற்றி நல்லவிதமாககருத்துகளை வெளியில் சொல்லும் படி வெளியில் விடுபவர் களிடம் சொல்லி அனுப்புகின்றனர். உண்மையில் அப்படி உண்மையானவர்களாக இருந்தால் காவி பயங்கரவாதிகள் மிக மோசமாக முகநூலிலும், வெளியிலும் கருத்துகளை வெளியிடுகிறார்கள். அவர்களை கைது செய்து விசாரிக்கட்டும்.

இப்படி முகநூலில் வன்முறையையும், மதவெறியையும் தூண்டும் பதிவுகளில் சில,


Natarajalingam Suambulingam
18 hours ago

கிறுஸ்த்துவம் சிலுவை போர்,
இஸ்லாம் ஜிஹாதி போர் என்று
மக்களை கொன்று குவித்தனர்.
இவர்கள் வசிக்கும் நாடு
கலவரபூமியாக மாறும்.
/மாரிதாஸ்/

See translation
36
36 5


பரிமளம் பரிமளம்
3 hours ago

தெருமாவின் #BIO_DATA

தெலுங்கு கட்டுமரத்து சூழ்ச்சியில் வளர்ந்த திம்மவாலனுலு..

திருமாவளவன் என்ற பெயரில் நடமாடிக்கொண்டு இருக்கும் தமிழின விரோதியின் உண்மையான பெயர் திம்மவாலனு

அவனே சூட்டிக்கொண்டது தான் திருமாவளவன்

உண்மையான சாதி தெலுங்க சக்கிலி,
அவனே சூட்டிக்கொண்டது பறையர்

திம்மவாலனு வின் அப்பா பெயர் ராமசாமி அவருக்கு தொல்காப்பியன்' என்று பெயர் சூட்டி தமிழனாக்கியவர் மகன் திம்மவாலனுவே தான்

அவரது அம்மா பெயர் சின்னத்தாயி இல்லை சவுடம்மா

இது நாள் வரை இல்லாமல் சென்ற மாதத்தில் புதுசாக நாட்டுக்கு அறிமுகமாகியுள்ள தியாகி திம்மவாலனுவின் அக்காள் பெயர் திலகவதி இல்லை நார்த்தம்மா என்கிற திரேஸ்ராணி

திம்மவாலனுவின் உண்மையான மதம் பௌத்தம் அல்ல கிறித்துவம்.

தன்னைப்பற்றிய உண்மைகள் வெடிக்க வெடிக்க...

திம்மவாலனு திணறத் தொடங்கி இருக்கிறான்
வெறிபிடித்துப் பேசப்தொடங்கி இருக்கிறான்

சகட்டுமேனிக்கு தமிழர்களைத் திட்டத் தொடங்கி இருக்கிறான்.

உண்மைகள் இன்னும் நிறைய இருக்கு எல்லாம் வெளிவரும்.

இன்னும் பல பச்சைத்தமிழன்கள், கருப்புத் தமிழன்கள்., உண்மை முகங்கள் கிழிக்கப்பட்டு செருப்பால் அடித்து தொங்கவிடப்படுவார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். அதிகம் பகிருங்கள் போலிகளின் உண்மை முகம் இந்த உலகம் அறியட்டும்.


ஏகன் அநேகன்
14 hours ago

பரிமளம் பரிமளம்
16 hours ago

இந்த இஸ்லாமிய
மிருகம் தன் சொந்த #அக்காவின் வீட்டில்
புகுந்து அவளை கெடுத்து #கொன்று அதன்பின்னும்
அடங்காமல் அவள் #பிணத்துடன் உறவு கொண்டு
பிறகு அந்த
#அக்கா_மகளையும்
வயது12 கற்பழித்து
கொன்று ச்ச்ச்சீ

#என்ன_மார்க்கம்டா
உங்களது.

See translation



பரிமளம் பரிமளம்

04-Dec-2018 at 02:22 ·

ஒருவருடைய உணவு இருவருக்கு போதுமானது - நபி.

பன்னி குட்டி போடுறமாதிரி டசன் கணக்குல துளுக்கனுங்க பெத்து விட்டா சோத்துக்கு எங்க போறது? அதான் ஒருத்தனோட உணவு இரண்டு பேருக்கு

இன்னும் மிகமோசமாக முஸ்லிம்களை கொல்லுங்கள், அடியுங்கள் என பலநூறு பதிவுகளை தினந்தோறும் இந்துத்துவாவினர் பதிகிறார்கள். ஆனால் முஸ்லிம் இளைஞர்கள் மட்டும் குறி பார்த்து கைது செய்யப்படுகிறார்கள், மிரட்டப்படுகிறார்கள்.

NIA மேற்கொள்ளும் கைது நடவடிக்கைகளில் அவர்கள் செய்யும் மற்றொரு செயல், குற்றம் சாட்டப்படுபவர்களை அவர்கள் செய்யாத ஒன்றை செய்ததாக சொல்லி குற்றவாளியாக ஒப்புக்கொள்ளச் சொல்லி பேரம் பேசுகிறார்கள். இதுபோல் கைது செய்யப்பட்ட ஒருவர் குடும்பத்திற்கு சென்று வீட்டிலுள்ளவருக்கு மத்திய அரசு பணி வாங்கி தருகிறோம் என்றும் அதுபோல் NIA புனையப்பட்ட வழக்கை செய்ததாக ஒப்புக் கொண்டால் தண்டனையை மிக மிககுறைவாக வாங்கித் தருவோம் எனகைது செய்யப்பட்டவரின் குடும்பத்தினரை அறிவுறுத்துகிறார்கள்

## 2016ல் கைது செய்யப்பட்டவர்களின் வழக்கின் தீர்ப்பு

*2016*ம் ஆண்டு கேரளாவை சேர்ந்த சில இளைஞர்கள் ஐஎஸ்ஐஎஸ் அமைப்பில் இணைந்து நாசவேலை செய்தார்கள் என்று ஏழு இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட ஏழு பேர்களில் ஆறு பேர் கேரளாவை சேர்ந்தவர்கள். ஒருவர் மட்டும் கோவையை சேர்ந்தவர். இவர்கள் கொச்சி உயர் ரக பாதுகாப்பு சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள்.

இந்த வழக்கின் தீர்ப்பு தற்போது வெளியாகியிருக்கிறது. கிட்டத் தட்ட இதுவும் பாபரி மசூதி தீர்ப்பை போலானது தான்.

வெளியான தீர்ப்பின் முக்கிய அம்சம், "கைது செய்யப்பட்டவர்களில் யாரும் ஐஎஸ் அமைப்பின் உறுப்பினர்கள் என்று நிரூபிக்கப்படவில்லை. ஆனாலும் அவர்கள் நாசவேலைகள் புரிய திட்டமிட்டிருந்தார்கள்."

இவர்களுக்கு *14* ஆண்டுகள் தொடங்கி மூன்று ஆண்டுகள் வரை தண்டனை வழங்கப் பட்டிருக்கிறது. இதில் குற்றமற்றஒருவர் மூன்று ஆண்டுகள் சிறை தண்டனைக்கு பிறகு நிரபராதி என்று விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்.

## இந்த தீர்ப்பின் முரண்பட்ட அம்சங்கள்

வழக்கே ஐ.எஸ்.ஐ.எஸ் வழக்கு தான். ஆனால், தீர்ப்பில் அவர்கள் ஐ.எஸ் உறுப்பினர்கள் இல்லையென குறிப்பிடப்பட்டிருக்கிறது.

நீதிமன்றத்தில் நாங்கள் குற்றப்பத்திரிக்கையில் சொல்லப்பட்டது போல ஒரு இடத்தில் கூடி திட்டமிடும் போது கைது செய்யப்படவில்லை. மாறாக, வீட்டிற்கு செல்லும் வழியில் கடத்தப்பட்டோம்.

நீதிபதி குற்றம் சாட்டப்பட்டவர்களின் மறுப்பை ஏற்கவில்லை. அதற்கு மாறாக அவர்களுக்கெதிரான சாட்சியமாக அவர்களை கைது செய்த அதிகாரியையே சாட்சியாக எடுத்துக் கொள்கிறார். கைது செய்தவரே சாட்சி என்றால்! அதனை என்னவென்று சொல்வது?....

குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஒருவர் குற்றமற்றவர் என விடுதலை செய்யப்பட்டிருக்கிறார். ஆதாரமில்லாமல் கைது செய்யப்பட்ட ஒருவருக்கு பிணை வழங்காமல் மூன்று வருடம் மறுத்தது ஏன்?..

## கள ஆய்வின் முடிவு

NIA கைது நடவடிக்கை நேற்கொண்ட வீடுகளை அணுகுவது கடினமாக இருந்தது.சோதனை நடந்து முடிவதற்குள்ளாகவே வீட்டிலிருந்து தீவிரவாத சம்பந்தமான ஆவணங்களும், பொருட்களும் கைப்பற்றப்பட்டதாக தொலைக்காட்சி செய்திகளில் ஓடுகின்றன. ஆனால், அப்படி எதுவும் பெறப்பட வில்லை என்று NIA அதிகாரிகளே எழுதிக் கொடுத்திருக்கிறார்கள்.

ஆனால், ஊடகங்கள் இப்படியாக செய்தி வெளியிடுவதன் மூலம் எல்லோரும் பயம் கொள்ளும் சூழலுக்கு உள்ளாகியிருக்கிறார்கள்.

முஸ்லிம் இளைஞர்கள் திட்டமிட்டு கைது செய்யப்படுகிறார்கள். அதற்காக தற்போது NIA அதிகாரிகள் பயன்படுத்தும் ஆயுதம் முகநூல் போன்ற சமூக வலைத்தளங்கள் தான். முஸ்லிம்களின் அடுத்த தலைமுறையான முஸ்லிம் இளைஞர்களை பயத்தில் புகுத்தி வீட்டுடன் முடக்கும் வேலையை தற்போதைய அரசு அதிகார அமைப்பு NIA மூலம் உருவாக்கியிருக்கிறது.

**- கள ஆய்வு**

**- அபூ சித்திக்,**

**ஜாகிர் உசேன், ரஃபின்.**

தொடர் 02

## இன இழிவு நீங்க

# இஸ்லாம்

## ஒன்றே நன் மருந்து



தோழர் புலவர் கனகசபை என்னும் பொன்னம்பலம் என்பவர் ஒரு தமிழ்ப்புலவர். அவர் சேலம் உயர் நிலைப்பள்ளியில் ஒரு புலவர். அவர் சிறிது திராவிட உணர்ச்சி உள்ளவர். அந்த உணர்ச்சி என்னவென்றால், முடம், மொக்கை இல்லாமல் சுத்தமான தமிழில் கூடியவரை பேசுபவர். இவர் பேசுவதைக் கண்டால் எந்த பார்ப்பானுக்கும் கோபமே வரும். வடமொழி கலப்பில்லாமல் பேசுவார். இதுதான் இவரிடம் பார்ப்பனருக்குப் பிடிக்காத காரியம். மற்றபடி நல்ல சராசரிக்கு மேற்பட்ட திறமைசாலி, யோக்கியர் என்பது என் அபிப்பிராயம்.

இவர் ஒரு நாள் பள்ளி வகுப்பில் பாடம் நடத்தும் போது ஆரியர், திராவிடர் என்ற இடம் பாடத்தில் வந்த சந்தர்ப்பத்தில் விளக்கிப் பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார். தலைமை உபாத்தியாரர் (ஒரு ஆசிரியர்) அது சமயம் வந்தார். தலைமறைவாய் ஒந்டி சில வாக்கியங்களை கேட்டுக் கொண்டிருந்தவர், பாடம் முடியும் தருவாயில்

வகுப்புக்குள் புகுந்து, “நீ, நான்” என்கின்ற ஒருமை முறையில் பொன்னம்பலத்தைக் கடிந்து, இழித்துப் பேசி சமாதானம் கேட்டார். பொன்னம்பலம் அவர்கள் கோபியாமல் பொறுமையாய், “நான் செய்த குற்றத்திற்குச் சமாதானம் சொல்லத் தயாராய் இருக்கிறேன். இதோ பாடப்புத்தகம் இருக்கிறது. ஆனால் நீங்கள் பிள்ளைகள் எதிரில் என்னை இவ்வளவு அவமரியாதையாக ஒருமையில் எழுதிக் கூறுவதற்கு தாங்கள் காரணம் சொல்லவேண்டும். நான் இந்த மாணவர்களுக்கு ஆசிரியன் இவர்கள் முன் என்னை இப்படி பேசலாமா? என்பதாக கேட்டார். உடனே தலைமையாசிரியர் நாம் ஒருவருக்கொருவர் சகோதரர் என்கின்ற முறையில் பேசினேன். கோபப்படாதீர்கள். என்று பல்லைக் காட்டிக்கொண்டு தட்டிக்கொடுத்து விட்டுப் போய் பள்ளிப் பிள்ளைகளை பிடித்து, முனிசிபல் கமிஷனருக்கு ஒரு முறையீடு எழுதிக் கொடுக்கச் செய்து அவரை வீட்டுக்கு அனுப்ப முயற்சிகள் கட்டுப்பாடாக செய்யப்படுகின்றன என எனக்கு நல்ல தகவல் வந்திருக்கிறது.

கமிஷனர்கள் யோக்கியதையை நாம் சொல்ல வேண்டியதில்லை. 100க்கு 75 கமிஷனர்கள் திராவிடர்களே. ஆனாலும் அவர்கள் கமிஷனர்கள் ஆனவுடன் திராவிட ரத்தம் பார்ப்பன அடிமை இரத்தமாக மாறும்படி இனாக்லேஷன் செய்யப்பட்டவர்கள். (ஊசி போடப்பட்டவர்கள்). அவர்கள் பார்ப்பன ஆசிரியரை கண்ணியப்படுத்தி திராவிட ஆசிரியரை கண்டித்து எச்சரிக்கை செய்து அந்த முறையீட்டை முடிப்பார்களே தவிர வேறு பார்ப்பன ஆசிரியரை குற்றம் இருந்தாலும் தண்டிக்க மாட்டார்கள். மற்ற இலாகாவில் உம் திராவிடர்கள், ஆரியர்கள், அரசாங்கத்தில் திராவிடம் மேலதிகாரிகள் கூட கீழாக நடத்தி மேல் உயர்வுக்கு தகுதியற்றவர்களாக ஆக்கி வருகிறார்கள். பல கலெக்டர்கள் திராவிட அதிகாரிகளை நடத்துகிற மாதிரி மிக மிக மோசமானது என்று சொல்லலாம். ஏனென்றால் ஆட்சி மனு ஆட்சி தானே.

ஆதிதிராவிடர்களையும், முஸ்லிம்களையும் நடத்திய மாதிரியும் மிக மோசமாக இருந்து வந்தாலும், இப்போது அவர்களுக்கு பிரைஸ் அடித்து விட்டது. முதல் பிரைஸ் இல்லையானாலும் நல்ல பிரைஸ். அவர்கள் நிலை உயர்த்தப்பட்டு விட்டது. இனி அவர்களுக்கு சரியான படி விகிதாச்சாரம் மேலும் கூட கண்டிப்பாக கிடைக்கும். அவர்களுக்கு சிபாரிசும் குறைகளை கேட்க வசதிகள் ஏற்பட்டுவிட்டன.

நாம் வர்ணம் அல்லது மதம் மாற வேண்டும்

நாம் ஒன்று பஞ்சவர்ணதானாகவே அதாவது ஆதிதிராவிடராகவே இல்லாமல் இஸ்லாம் மதத்தவராகவே ஆனால் ஒழிய நமக்கான வாழ்வு, நீதி வாழ்வு, முற்போக்கு வாழ்வு இல்லை என்றே சொல்லுவேன். தலைவர் வேதாச்சலம் அவர்கள் நன்றாக விளக்கிச் சொன்னார்கள். என்னவென்றால் நாம் முஸ்லிம் ஆனால் உடைய நம்மை கவனிப்பார் இல்லை என்றும் நாம் முஸ்லிம் ஆனாலும் ஆக முடியுமே தவிர ஆதிதிராவிடர் அவதற்கு வழியே இல்லை என்றும் சொன்னார்.

அது உண்மைதான் ஆதிதிராவிட தாய் தந்தையருக்கு பிறக்காமல் நாம் ஆதிதிராவிடர் என்று சொன்னால் பொய் சொன்னதாக தண்டித்து விடுவார்கள். நாம் ஏற்கனவே பிறந்து விட்டதால் இனி ஆதிதிராவிடருக்கு எப்படி பிறக்க முடியும்? நமது பிள்ளை குட்டிகள் அப்படி பிறந்தாலும் அதை பார்ப்பனர்கள் கலப்பு சாதி என்று சொல்லிவிடுவார்கள். வேண்டுமானால் முஸ்லிமாக ஆகலாம். இது எளிது. அருணாச்சலம் என்ற பெயரை அப்துல் காதர் என்று மாற்றிக் கொண்டால் போதும். ஒரு முல்லா சாயபுக்கு அரையனாவுக்கு சர்க்கரை வாங்கிக்கொடுத்து பாத்திஹா ஓதி “லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மது ரசூலுல்லாஹ்” என்றால் போதும் அதைத் தவிர வேறு வழி இல்லாத நிலைமையை நாம் செய்துவிட்டோம்.

தோழர்களே நேற்று இதே இடத்தில் நான் சுமார் 20 ஆயிரம் பேர் இடையில் நம் தலைவர் வேதாச்சலம் அவர்கள் தலைமையில் இதையே வலியுறுத்தி சொன்னேன். நேற்று காலை நகரசபை கொட்டகையில் நடந்த டாக்டர் அம்பேத்கர் மாணவர் இல்லம் ஆண்டு விழாவில் தலைமை வகித்த போதும் இதையே சொன்னேன். இதனால் திராவிடர்கள் இடையில் எனக்கு கெட்ட பேரு வளர்கிறது என்று கூட சிலர் சொன்னார்கள். இன்றும் காலையில் சிலர் சொன்னார்கள். சிலர் என்கூடவே இருந்துகொண்டு இதைச் சொல்லி விஷமப் பிரச்சாரம் செய்கிறார்கள். எனக்கு இதைப் பற்றி கவலை இல்லை. எனக்கு எந்த விதமான உணர்ச்சிக்கும் இடம் இல்லாத, மானத்தைப் பற்றி கவலை இல்லாத திராவிட மக்களிடத்தில் நல்ல பெயர் வாங்க வேண்டும் என்ற கவலை சிறிதும் இல்லை. அப்படிப் போலி நல்ல பெயரின் மீது எனது வாழ்வு ஏற்பட்டிருக்கவில்லை. திராவிடர்களுக்கு ஏதாவது தொண்டாற்ற வேண்டும். அதில் முதன்மையாக திராவிடன் இழிவு

நீங்க வேண்டும் என்கிற ஆசையும் கவலையைத் தவிர வேறு ஒன்றுமே எனது கவலையாக இல்லை. என் வாழ்வைப் பற்றி எனக்கு கவலை இல்லை. எனக்கு பேறு அடையவேண்டிய சாதனமும் இல்லை. இன்று திராவிடனுக்கு உள்ள இழிவு என்னவென்றால் அவன் சூத்திரனா இருக்க வேண்டியிருக்கும் இந்துவாய் இருப்பதை தவிர வேறு இல்லை.

ஆதி திராவிடருக்கு வந்த யோகம்

ஆதி திராவிடர்களுக்கு திடீரென்று வந்த யோகம், டாக்டர் அம்பேத்கர், "நான் இந்து அல்ல. பஞ்சமன் அல்ல. இந்து மதத்தின் எந்தப் பாகுபாடும் சம்பந்தப்பட்டவன் அல்ல" என்று சொன்னதால்தான். கோவில் திறக்கப்பட்டதும், லிஸ்ட் கொடுங்கள் உத்தியோகம் கொடுக்கிறேன் என்று கேட்டதும், உங்களுக்கு நீதிக்கு மேல் அளவுக்கு மேல் நன்மை செய்கிறேன் என்ன வேண்டும் கேள் என்று பட்டேல் சொல்லுவதும், நானும் ஆதிதிராவிடன் பங்கி என்று காந்தியார் சொல்லுவதும் ஆன காரியங்களுக்கு காரணம்.

நான் இந்துவல்ல என்பது அஷ்டாக்ஷர மந்திரமாகும். டாக்டர் அம்பேத்கருக்கும் 5 வருடத்துக்கு முன்பே நான் 1925இல் சொன்னேன். ஆனால் எனக்கு ஐந்து வருடத்திற்கு பின்பு சொன்ன இவர்கள் வெற்றி பெற்று விட்டார்கள். ஆனால் அவர்கள் இனியும் இந்து அல்ல என்று, தான் வாயிலேயே சொல்லிக்கொண்டே எல்லா உரிமைகளும் பெறப் போகிறார்கள்.

முஸ்லிம்களுக்கு வந்த, வரப்போகின்ற மேன்மையும் அதனால்தான். அதாவது நாங்கள் இந்துக்கள் அல்ல இந்திய சமுதாயம் அல்ல என்று சொல்லுவதால் தான் நான் திராவிட நாடு 1937இல் பிரஸ்தாபித்தேன். ஜின்னா சாயபு 1940 இல் பாகிஸ்தான் பிரஸ்தாபித்தார். இன்று பாகிஸ்தான் அவர் காலடியில் கிடைக்கின்றது. நன்றாய் விளங்கி, தேய்த்து, கழுவி, சுத்தப்படுத்திக் கொண்டு வாருங்கள் என்று திருப்பி அடிக்கிறார் ஜின்னா.

இந்த திராவிட சமுதாயத்தினர் மானங்கெட்ட சமுதாயத்தினராய், சூத்திரராய், நான்காம் ஐந்தாம் ஜாதிகளாய், வேசி மக்கள், தாசி மக்கள், அடிமை மக்களாய், கல்வி, செல்வமான வாழ்வு, உழைத்த கூலி கூட இல்லாமல் மிருகங்களிலும் கேவலமாய் உரிமை இழந்து மனிதத் தன்மை இழந்து இன வாழ்வில் அழுத்தப்பட்டு கிடப்பதற்கு காரணம் இந்து மதம் இல்லாமல் வேறு என்ன என்று கேட்கிறேன்.

உங்களை மாத்திரமல்ல நம் சர்கள், அண்ணாமலை, சண்முகம், இராமசாமி களையும், ஜமீன்தார்களையும்,ம காராஜாக்களையும், பண்டார சன்னதிகளையும் மலைகளையும், நதிகளையும் கேட்கிறேன். இந்த சிறு கூட்டங்களின் மாய வாழ்வுக்கு நாம் இத்தனை கோடிப் பெயர்கள் இந்துக்களாக, சூத்திரர்களாக இருப்பதா? என்று கேட்கிறேன்.

தோழர்களே நமது வியாதி நோய். சூத்திரர்கள் வேசி மகன் என்ற நோய் பெரிது. மிக மிகப் பெரிது. இது புற்று நோயை போன்றது. வெகுநாளாய் இருக்கும் நோய். இதற்கு ஒரே மருந்து தானே. அது இஸ்லாம் தான். இதைத்தவிர வேறு மருந்து இல்லை. இது இல்லாவிட்டால் வேதனை பட வேண்டியதுதான். தூக்க மருந்தும் போதை மருந்தும் கொண்டு நோய் இம்சை தெரியாமல் நாறும் பிணம்போல் கிடக்க வேண்டியதுதான். நோய் தீர்ந்து எழுந்து நடக்க இன்றைய நிலையில் இந்து மதம் விடுவது என்னும் மருந்து தான். அது தான் நாடு கொடுக்கும். நிமிர்ந்து நடக்கச் செய்யும். வீரம் கொடுக்கும் மருந்து ஆகும்.

இஸ்லாம்

இஸ்லாம் என்றால் முஹம்மது நபிகள் மதம் என்று லுங்கி கட்டிக்கொண்டு அளந்து தாடி வைத்துக் கொண்டு இருக்கும் சாயபு ராவுத்தர் மரைக்காயர் மாப்பிள்ளை என்கின்ற அவர்கள் மதம் என்றோ கருதி விடாதீர்கள். திராவிடர்கள் மதம் முஹம்மது நபிக்கு முன்பு கிறிஸ்துநாதர் க்கு முன்பு புத்த மகானுக்கு முன்பு ஆரியர்களின் கிருஷ்ணர் ராமர் சிவன் விஷ்ணு களுக்கு முன்பு திராவிடர்களுக்கு இருந்த மதமாகும். இஸ்லாம் என்பது சாந்தி பணிவு பக்தி என்ற பொருள்படும் மரபுச்சொல். இஸ்லாம் என்பது சகோதரத் தன்மை என்பது இவ்வளவுதான். நூறு இருநூறு வருஷத்துக்கு முற்பட்ட அகராதிகளைப் பாருங்கள். அரபு வார்த்தையில் சொல்லாமல் தமிழில் ஒரு கடவுள் பரஸ்பர பணிவு பக்தியுடன் பிறப்பு என்ற தன்மைகள் கொண்ட மதம் என்றால் போதும் கடவுள் என்பது திராவிட மொழி காடு என்பது ஆங்கில மொழி அல்லாஹ் என்பது அரபு மொழி என்பதல்லாமல் திராவிடர்களுக்கு மாறுபட்ட கடவுள் அல்ல. கொள்கையும் அல்ல என்பேன்.

**இன்ஷா அல்லாஹ்**

**தொடரும்**

# தமிழ்நாடு தினம்



1.11.2019 தேதியன்று தமிழ்நாடு தினமாக கொண்டாடிட முதலமைச்சர் எடப்பாடி யால் அரசாணை வெளியிடப்பட்டது. அந்த அரசாணையின் படி 1.11.2019 வெள்ளிக்கிழமை அன்று தமிழ்நாடு தினம் கொண்டாடப்பட்டது. மாநில மறுசீரமைப்பு சட்டத்தின்படி மொழியின் அடிப்படையில் சென்னை மாகாணத்திலிருந்து கேரளம், கர்நாடகம் ஆகிய தனித்தனி மாநிலங்கள் பிரிக்கப்பட்டு 1.11.1956 முதல் செயல்பட தொடங்கிய அதே தினத்தில்தான் தமிழ்நாடும் தனி மாநிலமானது.

சுமார் 62 ஆண்டுகளுக்கு பிறகுதான் முதன் முதலாக அரசு விழாவாக அறிவிக்கப்பட்டு கொண்டாடப்பட்டுள்ளது. தமிழ் அறிஞர்களும், தமிழ் ஆர்வலர்களும் நீண்ட நெடுங்காலமாக தொடர்ந்து தமிழ்நாடு தினம் உதயமான தேதியில் அனுஷ்டிக்கப்பட வேண்டும் என்று எழுதியும், பேசியும் வந்துள்ளனர். அந்த எதிர்பார்ப்பை 1.11.2019 அன்று முதல் நாள் எடப்பாடி ஆட்சியில் நான் கொண்டாட கை கூடி வந்துள்ளது. இறைவனின் சித்தம் போலும். ஆனால் இதற்கு முன்பதாகவே கேரளம், கர்நாடகமும் மேற்கண்ட நாளை விடுமுறை அளித்து விசேஷமாக கொண்டாடிக் கொண்டிருக்கின்றனர் என்பது இங்கு நினைவுகூறத்தக்கது.

பக்கத்தவச்சலும், பேரறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி, எம்.ஜி.ஆர், ஜெயலலிதா ஆகிய மிகப் பெரும் ஆளுமைகள் ஆட்சியில் இருந்தும், தமிழ்நாடு உதயமான தினம் கொண்டாடப்பட வேண்டும் என்கின்ற ஆவலும், துடிப்பும் ஏற்படவில்லை. எடப்பாடி பழனிசாமி ஆட்சிக்கு வந்த பிறகுதான் அவரும் பாண்டியராஜன் தமிழ் மொழி பண்பாட்டுத் துறை அமைச்சரும் இது பற்றி சிந்திக்கவும், தொடர்ந்து பேசியும் வந்துள்ளனர். அதற்கு ஏற்றவாறு தமிழ் அறிஞர்களும், தமிழ் ஆர்வலர்களும் ஒருமித்த குரல் எழுப்பவும் தமிழ்நாடு உதய தின கொண்டாட்டம் 1.11.2019 இல் தான் மலர்ந்துள்ளது என்பதையும் கவனிக்க வேண்டும்.

அறிஞர் அண்ணா தான் முதலமைச்சரான உடனேயே சென்னை மாகாணம் என்கின்ற பெயரை தமிழ்நாடு என்று அதுவரை யாரும் செய்யாத, யாரும் மறக்க முடியாத ஒரு உயர் பணியை, மேற்படி பெயர் மாற்றத்தை வலியுறுத்தி உண்ணாவிரதம் இருந்து 28வது நாளில் உயிர் நீத்த தியாகி சங்கரலிங்கனார் நினைவாக நிறைவேற்றி வைத்தார். 1968 ஜனவரி 15 அன்று தமிழ்நாடு என்கிற பெயர் மாற்றம் நடைமுறைக்கு வந்தது குறிப்பிடத் தக்கதாகும்.

புதிய தமிழ்நாடு அமைந்ததில் வடக்கெல்லை போராட்டமும், தெற்கெல்லை போராட்டமும் மறக்க முடியாத சாதனை கற்களாகும். தமிழக மக்களுக்கு என்று ஒரு மாநிலம் என்பது உறுதியானாலும் தமிழக எல்லை பகுதிகளை தமிழ்நாட்டோடு சேர்ப்பதற்கு மிகவும் கடுமையான போராட்டங்கள், உயிர்பலி உட்பட நடந்து முடிந்துள்ளன. மா.பொ.சி. தலைமையில் இயங்கிய தமிழரசு கழகத்தின் போராட்டங்களால் தான் 290 கிராமங்கள் அடங்கிய திருத்தணியில் சித்தூர் மற்றும் புத்தூர் மாவட்டங்களின் சில பகுதிகளும் தமிழகத் திற்கு கிடைத்தன. மேற்கண்ட வடக்கெல்லை போராட்டத்தில் மா.பொ.சி. தலைமையில் திருமலை பிள்ளை, விநாயகம், மங்கலங்கிழார், சுப்பிரமணியன் போன்ற தளபதிகள் போராடி சிறை சென்றனர் என்று குறிப்பிட்ட தமிழ் பத்திரிக்கைகள், பிரதான தளகர்த்தராக அன்று போராட்டத்தை வழி நடத்திய, போலீசாரின் தடியடி தாங்கிக் கொண்டு சிறைக்கு சென்ற கவி கா.மு. ஷெரிப்-ன் தியாகத்தை முற்றிலும் இருட்டடிப்பு செய்து விட்டது அதிர்ச்சி அளிக்கக் கூடியதாகும்.

அதேபோல தெற்கெல்லை போராட்டங்களிலும், கன்னியாகுமரி மாவட்டம் கேரளத்துடன் போய்விடாதபடி தடுத்து நிறுத்திய தமிழரசு கழகத்தின் போராட்டங்களில் பிரதான தளபதியாக பங்குகொண்டு கன்னியாகுமரியை தக்கவைத்த சாதனையில் கவி கா.மு. ஷெரீப்புக்கு முக்கிய பங்கு உண்டு. 10 ஆண்டுகாலம் இடைவிடாத போராட்டத்தின் காரணமாக தமிழர்கள் அதிகம் வசிக்கும் பகுதிகளான தென் திருவிதாங்கூர்,



தேவிகுளம், பீர்மேடு பகுதிகளில் பாதி அளவு எனும் தமிழகத்துடன் இணைந்தது. இப்போராட்டத்தில் பங்கெடுத்துக் கொண்ட இதர தலைவர்களான மார்ஷல் நேசமணி, நதனியல், பி. சிதம்பரம்பிள்ளை, காந்திராமன் உட்பட பங்கெடுத்துக் கொண்டோர் பட்டியலில் தீவிர பக்தராக கவி கா.மு. ஷெரீபின் பெயர் சேர்க்கப்பட்டு இருக்கவில்லை. இதற்கெல்லாம் காரணம் என்னவென்பது புரியாத புதிராக உள்ளது. தமிழ்நாடு தினம் கொண்டாடப்பட்ட அன்று அவரது தியாகங்கள் நினைவு கூறப்படாதது கவலையும், சஞ்சலமும் ஏற்படுத்துகிறது.

புதிய தமிழகம் அமைய அரும்பாடுபட்டதும், அன்று புதிய தமிழகம் அமைப்புக்காக போர்க்கள பாடல்கள், புத்தகம் போடும் அளவிற்கு இயற்றியுள்ளார் கவி கா.மு. ஷெரீப். அது பற்றிய முன்னுரை ஒன்றில் அவரே முதற்கண் தன் சமகாலத்தில் முத்திரை பதித்த ஆளுமைகளான சதாவதானி, செய்குத் தம்பி பாவலர், திருவையாறு அப்துல் கபூர், பாரதிதாசனார், நாமக்கல்லார், தேசிய விநாயகம் பிள்ளை, சுந்தர பாரதியார், யோகி ஆகியோரின் சிறப்புகளை எடுத்துக் கூறிவிட்டு தொடர்ந்து அவரே கூறுவதைக் கேளுங்கள்;

"எனக்கு என எஞ்சி நின்றவை புதிய தமிழக அமைப்பின் போர்க்கள பாடல்கள் தாம். என் அளவிற்கு புதிய தமிழக அமைப்பின் பல பாடல்களை வேறு யாரும் பாடி இருக்கவில்லை. என்று என்னைப் பற்றி கணித்து கொள்வது மிகையன்று, என்றும் புதிய தமிழகம் தோன்ற உழைத்தவர்களில் ஒருவன் நான் என்பதை வரலாறு எழுதுவோர் மறந்து விட முடியாது" என்று உறுதியுடன் தன் விளக்கம் கூறியுள்ளார் கவி கா.மு. ஷெரிஃப்.

பதினைந்தாம் வயதிலேயே அரசியல் ஆர்வம் கொண்டவர். சுயமரியாதை இயக்கம், காங்கிரஸ், தமிழரசுக் கழகம் கட்சியின் பொது செயலாளர் என அரசியல் வாழ்வில் ஈடுபட்டவர். பதினெட்டாம் வயதிலேயே கவிதை புனைய தொடங்கி சாகாவரம் பெற்ற கவிதைகளை திரைப்படப் பாடல்களை எழுதி வந்தார். அவரது வாழ்வின் பெரும்பகுதி அப்பட்டமான அரசியலிலும் அறிவியக்க கோட்பாடுகளிலும் சுற்றி சுழன்று கொண்டிருந்தது என்பதை அவரது நெருங்கிய நண்பரும் கவிகுருமான வானம்பாடி குறிப்பிடுகிறார். அத்துடன் தமிழ் பற்றாளர் எல்லாவற்றிற்கும் மேலாக மானுட நேயர். ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்பது இவரது வாழ்வின் சாரமாகும். சிறை சென்ற போராளி இவர்.

சுதந்திரம் பெறுவதற்கு முன் சுயமரியாதை இயக்கத்திற்கு உழைத்தவர் கலைமாமணி கா.மு. ஷெரீப். அதன்பிறகு காங்கிரஸ் மகாசபையில் 1945 முதல் இணைந்து பணியாற்றினார். சுதந்திரப் போராட்டங்களில் பங்கு பெற்றார். வெள்ளையர் காலம் முதல் காங்கிரஸ் ஆட்சி காலம் வரை பலமுறை சிறை சென்ற தியாகி கவி கா.மு. ஷெரிப். சுதந்திரத்திற்கு பின் 1948 முதல் மா.பொ.சி. தமிழரசுக் கழகத்தின் பொதுச் செயலாளராக அவருக்கு பிரதம தளபதியாக பல களங்கள் கண்டார். சமுதாய சீர்திருத்தங்களில் ஈடுபட்டவர். இந்தி எதிர்ப்புப் போராட்டங்களில் பங்கு கொண்டவர். மன்னர் மானிய ஒழிப்பு குரல் கொடுத்தவர். தமிழ் ஆட்சி மொழியாகவும், தமிழ் பயிற்சி மொழியாகவும் பாடுபட்டவர்.

மொழிவழி மாநிலப் பிரிவினையின்போது தலைநகர் சென்னையை தக்கவைக்கும் போராட்டங்களில் தீவிரப் பங்கு கொண்டார். சென்னை மாகாணம் என்ற பெயரை மாற்றி தமிழ்நாடு என்று பெயர் மாற்ற நடைபெற்ற நீண்ட போராட்டங்களில் ஈடுபட்டவர். பாரதி பாடல்களை தேசியமாக பாடுபட்டவர்களில் கவி கா.மு. ஷெரிப் ஒருவர். தொழிலாளர் போராட்டங்களிலும் பங்கு பெற்று நியாயமான கோரிக்கைகள் நிறைவேற அங்கும் பாடுபட்ட தலைவர் இவர்.

மேற்கண்ட தொண்டுகளில் ஈடுபட்டு வெற்றிகளை வென்றெடுக்க நாவன்மையை

மட்டுமல்ல எழுத்து வன்மையையும் தனது சொந்த பத்திரிகைகளான தமிழ் முழக்கம், சாட்டை, திங்கள், திங்கள் இருமுறை, கிழமை போன்ற ஏடுகளில் நீதிக்காகவும் குரல் கொடுத்துள்ளார் கவி கா.மு. ஷெரிப்.

ஒருமுறை அவர், கதை கட்டுரைகள் எழுதும் அரசியல்வாதி இல்லை. களத்தில் இறங்கி போராடும் அரசியல்வாதி. போலீஸ் தடியடி எதற்கும் பயமில்லை. என்று கூறியுள்ளார். இதை இப்படி கூறும்போது அவருக்கு வயது 72 என்று பதிவிட்டுள்ளார் சாகித்ய அகாடமி விருது பெற்ற எழுத்தாளர் சா கந்தசாமி.

தமிழரசு கழகத்தின் மூத்த தளபதியாக எல்லை காந்தியும், மவுலானா அபுல்கலாம் ஆசாத்தும் இணைந்த உணர்வாய் திகழ்ந்தவர் கவி கா.மு. ஷரீப் என்று சென்னை பல்கலைக்கழகத்தின் முன்னாள் தமிழ்த்துறை தலைவர் டாக்டர் நா. சஞ்சீவ் அவர்கள் சீறாப்புராணத்தின் முன்னுரையில் பதிவிட்டுள்ளார். ஆனால் இவருடைய தியாகங்களையும், தொண்டுகளும் மறைக்கப்பட்டுவிட்டன. தமிழ் கூறும் நல்லுலகம் மறந்து விட்டது ஏனோ தெரியவில்லை.

புதிய தமிழகம் மலர்ந்த வரலாற்றை அவா நடையிலேயே கேட்டோமா? அவசியம் கேட்டு சிந்திப்போமா? இந்தப் பெரும் மனிதரை இலக்கிய உலகமும், சாகாவரம் பெற்ற திரைப்பட உலகமும், தமிழகத்தின் அனைத்து வகை போராட்டங்களிலும் இவரது தீவிர பங்களிப்புகளை பெற்றுக் கொண்ட அரசியல் உலகமும் எஞ்ஞனம் மறந்தன? இல்லை மறைத்தன! என உணரும்போது நம் உள்ளங்கள் வருந்துவதை உணர முடியும்.

புதிய தமிழகம் என்பது ஒரு நாடாக 1958 முன்பு இருந்ததில்லை. புதிய தமிழகம் கட்சியை, இலட்சியத்தை வென்று திராவிடத்தை கடந்து டில்லியை பணிய வைத்து அமைந்த ஒன்றாகும். மட்டுமின்றி நான்கு இளைஞர்களை களபலி கொடுத்து பல்லாயிரம் தமிழர்களை சிறைக்குள் தள்ளி எண்ணற்ற தமிழ் வீரர்களின் வாழ்வை குருதிச் சேற்றில் குளித்து பெற்றதாகும்.

இத்தகு புதிய தமிழக அமைப்பிற்கு பல பாடல்களை பாடி, தமிழக மக்களை தட்டி எழுப்புகின்ற பேரறிஞர் மிகுந்த அளவில் எனக்கு அளித்தான் இறைவன். இதனால் நான் அடைந்த பலன் என்ன என்று கணக்கு பார்ப்பது தவறு.

அடிமை இந்தியாவில் பிறந்ததால் நானும் சேர்ந்து பாடுபட்டுப் பெற்ற சுதந்திர இந்தியாவில் வாழ்கின்றேன். அதே ஒப்ப நான் தளபதியாக நின்று களம் பாடுகின்ற கவிஞனாகவும் ஆகி போரிட்டு பெற்ற புதிய தமிழகத்தில் வாழ்கின்றேன் என்பது என்னை மகிழ செய்வதாகும்.

ஆளுவது என் வேலை அல்ல. ஆரிய பாரதம் விடுதலை பெற்றிடவும் அதில் இணைந்து திகழுகின்ற புதிய தமிழகம் தோன்றிட உழைத்த அவர்களில் ஒருவன் நான் என்பதை வரலாறு எழுதுவோர் மறைத்துவிட முடியாது. இது ஒன்றே போதும் நிலையான பேறுபெற்ற பதவியே வேண்டாம்.

புதிய தமிழக களப் பாட்டு பாடியது எனது தனித்தன்மை. அது தனி நூலாக்கம் பெற்றுக் கொண்டிருக்கிறது. விரைவில் வெளிவரும். அதுபோன்றே அதற்காக நான் எழுதிய தலையங்கங்கள் தனி கட்டுரைகளும் நூலாக்கம் காணப்படுகின்றன.

இவ்விதம் உள்ளக்கிடக்கையை திறந்து காட்டி கவி கா.மு. ஷரீப் அறிவித்தபடி தனி நூல்களாக வெளிவந்துள்ளனவா? என்பது தெரியவில்லை. அவரது எழுத்து வன்மையால் இயல், இசை, நாடகம், திறனாய்வுகள், வரலாற்று நூல்கள், ஆராய்ச்சி நூல்கள், உரையாசிரியர் மற்றும் உள்ள தமிழ் துறைகளில் எழுத்துக்கள் வெளிவராமல் ஏராளமாக உள்ளன. அவற்றை வெளிக்கொண்டு வர முயற்சி செய்யப்பட வேண்டும். நாட்டுக்காக தமிழ் மொழிக்காக அவர் செய்த தியாகங்கள் நல்ல முறையில் மறைக்கப்படாமல் இன்றைய தலைமுறைக்கு சொல்லிக் கொடுக்கப்பட வேண்டும்.

அவரது புகழ் என்றும் உலக தமிழர்கள் நினைவில் நிறைந்திட தங்கிட தமிழக அரசு திட்டங்கள் வகுத்துச் செயல்பட வேண்டும். கலைமாமணி தியாகச்சுடர் மகாகவி கவிதை துணை போராட்டங்களின் கா.மு. ஷெரிப் அவர்களுக்கு நினைவு மண்டபம் எழுப்பப்பட வேண்டும். கலைக்கல்லூரிகள், பல்கலைக்கழகங்களுக்கு அவர்தம் உயர் திருநாமம் சூட்டி அழகு பார்க்க வேண்டும். பெருந்தலைவர் காமராஜர், பேரறிஞர் அண்ணா, காயிதேமில்லத், கலைஞர் கருணாநிதி, புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர், செல்வி ஜெயலலிதா ஆகியோருடன் நல்ல நட்புடன் பழகிய மாமனிதர் கவி கா.மு. ஷரீப் வரலாற்றை பாடல்களை சேர்த்து இன்றைய மாணவ மாணவிகளுக்கு புகட்டப்பட வேண்டும்

**பா. சையத் அகமது**

*11, பரக்கத் தெரு, துளசேந்திரபுரம்,*
*ஆனைக்காரன் சத்திரம்,*
*(அஞ்சல்) சீர்காழி வட்டம் 609 102 நாகை மாவட்டம்.*



# இவர்கள் ஏன் இஸ்லாத்தை ஏற்றார்கள்? 17

## அஃபிரின் (எ) காயத்ரி

இந்தியாவில் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்பவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகின்றது. அதுவும் இந்தியாவின் முக்கிய மதங்களில் ஒன்றான இந்து மதத்திலிருந்து இஸ்லாத்தை ஏற்றுக் கொள்பவர்களின் எண்ணிக்கை அலாதியாக உயர்ந்து வருகின்றது. இப்படி இஸ்லாத்தை தன் வாழ்வியல் நெறியாக ஏற்றுக் கொள்பவர்கள் அனைவரும் சிந்தித்து, இஸ்லாத்தின் போதனைகளால் கவரப்பட்டு தான் மதம் மாறுகிறார்களே தவிர! யாருடைய வற்புறுத்தலின் பெயரால் ஏற்றுக் கொள்வதில்லை. அதனால் தான், தான் ஏற்றுக் கொண்ட இந்த இஸ்லாமிய மார்க்கத்தில் எந்த சோதனைகள் வந்தாலும் உறுதியாக நிற்கிறார்கள்.

ஆனால் கலவரங்களையும், இனப்படுகொலைகளையும் செய்வதை வழக்கமாக கொண்ட பாசிஸ்டுகளின் கைகளில் சிக்கி சீரழியும் இந்த டிஜிட்டல் இந்தியாவில் இப்படியான மதமாற்றங்களை தவிற்பதற்கான பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இஸ்லாத்தை தீவிரவாத மார்க்கமாகவும், முஸ்லிம்களை பயங்கரவாதிகளாகவும் சித்தரித்தார்கள். பலன் கொடுக்கவில்லை. லவ் ஜிஹாத் என்றார்கள். மூக்கு உடைந்தது தான் மிச்சம். இப்போது மதமாற்றத் தடைச் சட்டம் கொண்டுவர தீவிர முயற்சியில் இறங்கியுள்ளார்கள்.

இதன் இன்னொரு பகுதியாக சமீப காலங்களாக அப்படி மதம் மாறும் மக்களை இந்த பாசிஸ்டுகள் தங்களது ஆர்.எஸ்.எஸ்., விஷ்வ ஹிந்து பரிசஷத் போன்ற பயங்கரவாத இயக்கங்களின் மூலம் மிரட்டி பணிய வைப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.(இதை நம் சமூகத்து தலைவர்கள் கவனித்து இதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்). அப்படி தான் விரும்பி ஏற்றுக் கொண்ட இஸ்லாமிய மார்க்கத்திற்காக பாசிஸ்டுகளின் சோதனைகளையும் எதிர்கொண்டு வெற்றி கண்ட சகோதரி அஃப்ரின் (எ) காயத்ரியின் அனுபவங்கள்...

## அஃப்ரின் (எ) காயத்ரி

என்னுடைய பெயர் அஃப்ரின். பழைய பெயர் காயத்ரி. எனக்கு ஒரு தம்பி, தங்கை இருக்கிறார்கள். நான் Fashion Designing முடித்துள்ளேன்.

எனக்கு சிறு வயதிலிருந்தே இஸ்லாம் குறித்தும், அதன் போதனைகள் குறித்தும் நன்றாக தெரியும். நான் வளர்ந்ததே முஸ்லிம்களின் சுற்றுவட்டார பகுதியில் தான். அதனால் இஸ்லாமும், அதன் போதனைகளும் எனக்கு நன்கு பரிச்சயமான ஒன்றாகவே இருந்தது. இஸ்லாத்தில் எனக்கு மிகவும் பிடித்தமானது, இஸ்லாம் பெண்களுக்கு கட்டளையிட்டுள்ள "பர்தா" முறைமை தான்.

## அந்த நிகழ்வு

இந்த நிலையில் என் வாழ்க்கையில் என்னால் மறக்க முடியாத மோசமான சம்பவம் ஒன்று நடந்தது. என்னுடைய பெற்றோர்கள் என்னை கட்டுப்பாடில்லாமல் சுதந்திரமாக வளர்த்தார்கள். அதன் விளைவால் நான் அனைத்து நண்பர்களுடனும் சகஜமாக பழகுவது, வீட்டிற்கு அழைத்து வருவது என சுதந்திரமாக இருந்தேன்.

இந்த நிலையில் நான் நல்ல நண்பனாக நினைத்து பழகிய ஒரு பையன் என்னிடம் தவறாக நடந்து கொள்ள முயற்சி செய்தான். அல்ஹம்துலில்லாஹ் அப்போது அல்லாஹ் என்னை காபாற்றி விட்டான். அந்த ஒரு சம்பவம் என்னுடைய வாழ்க்கையில் மிகுந்த மன வேதனையை ஏற்படுத்தியது.

அதன் பின்னர் தான் எனக்கு இஸ்லாமிய போதனைகள் குறித்தும், அதன் ஒழுக்க மாண்புகள் குறித்தும் புரிய வந்தது. குறிப்பாக இஸ்லாம் பெண்களுக்கு வலியுருத்தியிருக்கின்ற ஹிஜாப் குறித்த அவசியமும் புரிந்தது.

பின்னர் என் பெற்றோர்களிடம், இஸ்லாத்தை குறித்தும், அதன் போதனைகள் குறித்தும் கூறினேன். நான் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ள விரும்புகிறேன் என்று கூறினேன்.

## சோதனைகள்

என் பெற்றோர்கள் அதற்கு சம்மதிக்கவில்லை. என்னை அடித்தார்கள். நான் அவர்களிடம் எனக்கு நடந்த அந்த துயரமான சம்பவத்தை சொல்லியும் அவர்களுக்கு புரிய வைக்க முயற்சித்தேன். ஆனாலும் அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

ஆனால் நான் அதையெல்லாம் பொருட்படுத்த வில்லை. இஸ்லாத்தை பின்பற்ற ஆரம்பித்தேன். வெளியில் செல்லும் போதெல்லாம் என்னுடைய முஸ்லிம் தோழிகளிடம் ஹிஜாப் வாங்கி அணிந்து கொண்டுதான் போவேன். என்னுடைய இந்த செயல்பாடுகளை என்னுடைய தந்தையின் நண்பர் ஒருவர் பார்த்துவிட்டார். அவரும் முஸ்லிம் தான். ஆனால் என் தந்தையிடம் வந்து "உன் மகள் என்ன பர்தாவெல்லாம் போட்டுக் கொண்டு செல்கிறாள்?" என்று கேட்டுவிட்டார்.

அதன் பின்னர் எனக்கு செம அடி விழுந்தது. இந்த முஸ்லிம்கள் வாழும் பகுதியில் நீ இருந்தால் முழுமையாக மாறிவிடுவாய், என்று கூறி என்னுடைய படிப்பையெல்லாம் பாதியிலேயே நிறுத்திவிட்டு சொந்த ஊரான திருவண்ணாமலைக்கு அழைத்து சென்றுவிட்டார்கள்.

அந்த ஊரில் மனிதர்களை காண்பதே அறிதான ஒன்று. அதுமட்டுமில்லாமல் எனக்கு திருமணம் செய்து வைப்பதற்கான ஏற்பாடுகளையும் பார்க்க ஆரம்பித்து விட்டார்கள். ஆனால் விடாப்பிடியாக இருந்து இஸ்லாத்தில் தான் இருப்பேன் என்று கூறிவிட்டேன்.

அதன் பின் எனக்கு ஏதோ முஸ்லிம் பேய் தான் பிடித்து விட்டது. அதனால் தான் இப்படியெல்லாம் செய்கிறேன் என்று தினமும் இரவு நேரங்களில் ஏதாவது கோவிலுக்கு கூட்டி சென்று, வேப்பிலையாலும், சாட்டையாலும், கம்பாலும் அடித்து துன்புருத்துவார்கள். நான் வலி தாங்காமல் கத்துவேன். உனக்கு பிடிச்ச பேய்தான் கத்துது என்று கூறி இன்னும் அடிப்பாரகள். அதுமட்டுமில்லாமல் வீட்டு சிறையிலும் அடைத்து வைத்திருந்தார்கள்.

இந்த நிலையில் தான் தேர்வு எழுதுவதற்கான தேதி வந்தது. அப்போது நான் என் அப்பாவிடம், "இனி நான் இஸ்லாத்தைப் பற்றி பேசமாட்டேன். என்னை தேர்வெழுத அனுமதியுங்கள்" என்று கெஞ்சி அனுமதி பெற்றேன். நீண்ட நாட்கள் கழித்து அப்போதுதான் என்னை வெளியில் விட்டார்கள்.

நான் என்னுடைய எல்லா ஆவணங்களையும் எடுத்துக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறினேன். நேராக எனக்கு தெரிந்த ஒரு முஸ்லிம் சகோதரியின் வீட்டிற்கு சென்றேன். அவர்களிடம், "நான் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டேன். இனி என்னால் வீட்டிற்கு செல்ல முடியாது. வீட்டை விட்டு நான் வந்து விட்டேன். எனக்கு உங்களுடைய உதவி வேண்டும்" என்று கூறினேன்.

அதற்கு அந்த சகோதரி, "பொருமையாக இரு. முதலில் உன்னுடைய தேர்வை எழுதி முடி. இப்போது நீ தேர்வு எழுத செல்லவில்லை என்றால் உன்னுடைய பெற்றோர்களுக்கு தகவல் சென்று விடும். பின்னர் பெரிய பிரச்சனை ஆகிவிடும்" என்று கூறினாள். அவள் சொல்வதை நான் கேட்டுக் கொண்டேன். தேர்வுகளை எழுதி முடித்தேன். முடித்து விட்டு அவளிடம் சென்று உதவி கேட்டேன்.

ஆனால் அவளால் எனக்கு உதவ முடியவில்லை.

அதன் பின் எனக்கு தெரிந்த ஒரு ஜமாத் மூலம் உதவி கேட்டேன். அவர்கள் எனக்கு உதவினார்கள். தேர்வுகள் முடிந்து இரண்டு வாரங்கள் கடந்த நிலையிலும் நான் வீட்டிற்கு செல்லாததால் என் பெற்றோர்கள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துவிட்டனர்.

### காவல்துறையின் அராஜகம்

ஜமாத்தார்களின் உதவியால் அந்த புகாரையும் எதிர் கொண்டேன். காவல் நிலையத்திற்கு சென்றேன். அங்கிருந்த காவலர்கள் எடுத்தவுடனேயே என்னிடம் இப்படிக் கேட்டார்கள், “நீ யாரை விரும்பி இஸ்லாத்தில் இணைந்திருக்கின்றாய்?”.

அதற்கு “நான் யாரையும் விரும்பியெல்லாம் இஸ்லாத்தில் இணையவில்லை. எனக்கு இஸ்லாமிய நெறிகள் பிடித்திருந்ததால் இஸ்லாத்தில் இணைந்தேன்” என்று கூறினேன்.

ஆனால் அந்த காவலர்கள் நான் சொல்வதை ஒத்துக் கொள்ளவில்லை. “நீ யாரையோ விரும்பியதால் தான் இஸ்லாத்தில் இணைந்திருக்கின்றாய்.” என்று கூறி என்னுடைய பெற்றோர்களுக்கு தகவல் கொடுத்துவிட்டனர்.

அதுமட்டுமில்லாமல் “எனக்கு யாரென்றே தெரியாத ஒரு முஸ்லிம் இளைஞனை இழுத்து வந்து என் முன் நிறுத்தி இவனுக்காகத்தான் நீ இஸ்லாத்தில் இணைந்திருக்கின்றாய்” என்று கூறி அவனை பயங்கரமாக அடித்தனர். நான் எவ்வளவு சொல்லியும் அந்த காவலர்கள் கேட்கவில்லை.

### ஆர்.எஸ்.எஸ். - இன் மிரட்டல்

இன்னொரு புறம் எனது பெற்றோர்களும் ஆர்.எஸ்.எஸ். காரர்களிடம் புகார் அளித்து விட்டனர். உடனே என்னுடைய நம்பருக்கு ஆர்.எஸ்.எஸ். - இல் இருந்து ஒரு போன் வந்தது.

“இன்னும் சிறிது நேரத்தில் நீ வீட்டிற்கு வரவில்லை என்றால்! உனது பெற்றோர்களை ஊரை விட்டே ஒதுக்கி வைத்து விடுவோம். உங்களுடைய நிலம், வீடு சொத்து எல்லாவற்றையும் பிடுங்கி விடுவோம்” என்று மிரட்டினார்கள்.

அந்த போனை கட் செய்தவுடனேயே எனது பெற்றோர்களிடம் இருந்து போன் வந்தது. “இப்படி ஒரு கஷ்டத்தை எங்களால் தாங்க முடியாது. நாங்கள் விஷம் குடித்து சாகப் போகின்றோம்.” என்று கூறி அழுதார்கள்.

இந்த பிரச்சனைகளையெல்லாம் பார்த்த எனக்கு உதவி செய்ய வந்த ஜமாத்காரர்களும் என்னை அங்கேயே விட்டுவிட்டு சென்று விட்டார்கள்.

வேறு வழியில்லாமல் மீண்டும் வீட்டிற்கு சென்றேன். வீட்டிற்குள் நான் வந்ததும் என்னை மிகவும் கஷ்டப்படுத்தினார்கள். அடுத்தடுத்த நாட்களில் உடனே திருமணம் செய்து வைப்பதற்கான முயற்சிகளை வேகமாக மேற்கொண்டார்கள்.

சூழ்நிலையின் ஆபத்துகளை புரிந்து கொண்ட நான், உடுத்தியிருந்த உடைகளோடு அப்படியே வீட்டை விட்டு வெளியேறி விட்டேன். எங்கு செல்வது? யாரிடம் உதவி கேட்பது? என எதுவும் எனக்கு புரியவில்லை.

அப்போதுதான் எனக்கு சென்னையில் உள்ள ஒரு சகோதரியின் தொலைப்பேசி எண் கிடைத்தது. அவருக்கு போன் செய்து என்னுடைய நிலைமைகளை கூறினேன். அவர் எனக்கு உதவுவதாக வாக்குறுதியளித்தார். அவரை நம்பி சென்னைக்கு வந்தேன்.

என்னுடைய பிரச்சனைகளுக்கு அந்த சகோதரியாலும் உதவ முடியவில்லை. என்ன செய்வதென்று தெரியாமல் சென்னையிலேயே ஒரு வாரம் சுற்றிக் கொண்டிருந்தேன்.

அந்த நேரத்தில் தான் எனக்கு ஒரு போன் வந்தது. பேசியவர்கள் நாங்கள் உனக்கு உதவுகிறோம் என்று அழைத்தார்கள். அவர்களிடம் சென்றேன். அவர்கள் என்னை ஒரு இஸ்லாமிய அழைப்பு மையத்திற்கு அனுப்பி வைத்தார்கள்.

அங்கிருந்து கிளம்பி நேராக அந்த அழைப்பு மையத்திற்கு வந்து சேர்ந்தேன். அங்கு சென்று தான் முதன் முதலில் நான் குர்ஆனை எனது கண்களால் பார்த்தேன். அதற்கு முன் எனக்கு குர்ஆன் எப்படி இருக்கும் என்று கூட தெரியாது.

இப்போது அந்த அழைப்பு மையத்தின் உதவியால் இஸ்லாத்தின் அடிப்படை கல்வியை பயின்று முடித்துள்ளேன். இன்னும் மூன்று வருடம் ஆலிம் வகுப்பு படிப்பதற்காக தேர்ந் தெடுத்துள்ளேன். எனக்காகவும், என்னுடைய குடும்பத்தார்களுக்கும் நேர்வழி கிடைக்க வேண்டும் என்றும் பிரார்த்தியுங்கள்! அஸ்ஸலாம்.

Source: http:/.www.youtube.com/user/dawahcesh

**- அஷ்ரஃப் இஸ்லாம்**

# முதல் சிலுவைப் போர் வெற்றி வீரர் சுல்தான்



# நூருத்தீன் ஸங்கி(ரஹ்)

அபூ அப்ரஹ்

## இமாதுத்தீன் ஸங்கி (ரஹ்), நூருத்தீன் ஸங்கி (ரஹ்), சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி (ரஹ்) ஓர் அறிமுகம்

வரலாற்றில் முஸ்லிம்கள் மறக்கக்கூடாத நபர்களில் முக்கியமானவர்கள் இமாதுத்துன் ஸங்கி (ரஹ்), நூருத்தீன் ஸங்கி (ரஹ்) மற்றும் ஸலாஹுத்தீன் அய்யூபி (ரஹ்) ஆகியோர். ஆனால் மறக்கப்பட்டு விட்டவர்கள்.

நபி(ஸல்) அவர்களுக்கு பின்னர் நேர்வழி பெற்ற கலீபாக்களாலும் அதன் பின்னர் வந்த இஸ்லாமிய ஆட்சியாளர்களாலும் இஸ்லாம் வேகமாக வளர்ந்தது. உமர் (ரலி) அவர்களுடைய காலத்தில் ஜெருசலேம் இஸ்லாமிய ஆட்சியின் கீழ் வந்தது.

ஜெருசலேம் யூதர்களுக்கும் கிறித்தவர்களுக்கும் முக்கியமான பூமி. குறிப்பாக கிறித்தவர்களுக்கு அது ஏசு பிறந்த மண். எனவே, அவர்கள் இந்த மண்ணை கைப்பற்ற எல்லா விதமான முயற்சிகளையும் செய்து வந்தனர். அதற்காக போப் அர்பன் 2 என்பவர் உத்தரவின் பேரில் ஐரோப்பிய நாடுகளில் உள்ள கிறித்தவர்கள் ஒவ்வொருவரின் வீட்டிலிருந்தும் ஒருவர் என பங்கேற்று முஸ்லிம்களுக்கு எதிராக ஒரு போரை தொடங்கினர். இதன் பெயர் சிலுவைப்போர். இப்படி பல சிலுவைப்போர்கள் முஸ்லிம்களுக்கு எதிராக நடத்தப்பட்டன.

இப்படி நடத்தப்பட்ட அனைத்து சிலுவைப்போர்களிலும் சிலுவைப்படையினர் முஸ்லிம்களுக்கு எதிராக பல்வேறு கொடுமைகளை அரங்கேற்றினர். இந்த சிலுவைப்படையினர் படையெடுத்து வந்த வழி நெடுகிலும் பல்வேறு அநியாயங்களை முஸ்லிம்களுக்கு செய்தனர். தம் சொந்த மக்களையும் கூட அவர்கள் கொலை செய்தனர். சிலுவைப்படையினரின் குதிரைகளின் முழங்கால்கள் ரத்தத்தில் மூழ்கும் அளவிற்கு ரத்த சகதி இருந்தது என வரலாற்றில் பதியப்பட்டது. அந்த அளவிற்கு வெறி கொண்ட கூட்டமாக அவர்கள் இருந்தனர்.. சிறுவர்களோ பெரியவர்களோ யாரையும் அவர்கள் உயிரோடு விட்டு வைத்ததில்லை. கண்ணில் காண்வர்களை எல்லாம் கொன்று, பார்வையில் பட்டதை எல்லாம் கொள்ளையடித்து சென்றனர்.

அப்படிப்பட்ட சிலுவைப்படையினரின் தாக்குதல்களை தடுக்கவே முடியாத நிலையில் முஸ்லிம்கள் இருந்து வந்த வேளையில் முதன்முதலில் அவர்களை நோக்கி தாக்குதலை தொடுத்தவர் இமாதுத்தீன் ஸங்கி அவர்கள். முஸ்லிம்களை ஒரு தலைமைக்குள் கொண்டு வர முயன்றவர். ஜிஹாதை மறந்து இருந்த சமுதாயத்திற்கு ஜிஹாதை மீண்டும் நியாபகப்படுத்தியவர். கிறித்தவர்களின் கையில் இருந்து எடெஸ்ஸா போன்ற முக்கியமான பகுதிகளை கைப்பற்றியவர்.

இதன் பின்னர் இந்த பணிகளை அடுத்த நிலைக்கு எடுத்து சென்றவர் நூருத்தீன் ஸங்கி அவர்கள். சிலுவைப்படையினரை சின்னாபின்னப்படுத்தியவர். இன்று சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி(ரஹ்) அவர்களை தெரியாதவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள். ஆனால் சுல்தான் சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி அவர்களின் தலைவராக, வழிகாட்டியாக இருந்தவர் சுல்தான் நூருத்தீன் ஸங்கி அவர்கள்.

இஸ்லாத்தை பின்பற்றுவதிலும் அதனை செயல்படுத்துவதிலும் நேர்வழி நின்று ஆட்சி செய்த, சொர்க்கத்திற்கு நன்மாராயம் கூறப்பட்ட நான்கு கலீஃபாக்கள், அவர்களுக்கு பின்னர் உமர் இப்னு அப்துல் அஜீஸ்(ரஹ்), இவர்களுக்கு பின்னர் நூருத்தீன் ஸங்கி (ரஹ்) அவர்களை தான் இந்த பெருமக்களுக்கு இணையாக கூறமுடியும்.

மேற்கத்திய நாடுகளுக்கு எதிராக முஸ்லிம் ஆட்சியாளர்களுடன் குறிப்பாக வடக்கு ஈராக் போன்ற நாடுகளுடன் இணைந்து ஒரு திறமையான இஸ்லாமிய தடுப்பு படையை உருவாக்கியவர் நூருத்தீன் ஸங்கி (ரஹ்) அவர்கள். நூருத்தீன் ஸங்கி அவர்களின் கனவு ஒன்று தான். முஸ்லிம்கள் ஒன்றிணைய வேண்டும். ஈப்ரடீஸிலிருந்து நைல் வரை உள்ள இஸ்லாமிய பகுதிகள் அனைத்தையும் இணைத்து சிலுவைப்படையினருக்கு எதிராக ஓர் ஒருங்கிணைந்த இஸ்லாமிய படையை உருவாக்க வேண்டும் என்பதே அந்த கனவு.

நூருத்தீன் ஸங்கிக்கு பிறகு அந்த பணியை தொடர்ந்தவர் ஸலாஹுத்துன் அய்யூபி அவர்கள். இவர் காலத்தில் தான் ஜெருசலேம் முஸ்லிம்களின் கையில் வந்தது. இந்த வடு ஆறாத வடுவாக கிறித்தவர்களுக்கு இருந்தது. முதலாம் உலகப்போரின் போது பிரெஞ்சு தளபதி ஹென்றி ஜோசப் ஈகுவின் கௌராட் என்பவன் சலாஹுத்தீன் அய்யூபி அவர்களின் அடக்கஸ்தலத்தை எட்டி உதைத்து "எழுந்திரு, ஸலாஹுத்தீன் நாங்கள் திரும்பி வந்து விட்டோம். பிறையை சிலுவை வெற்றி கொண்டு விட்டது" என்று சொன்னதிலிருந்து ஸலாஹுத்தீன் அய்யூபி அவர்கள் கொடுத்த அடி எப்படிப்பட்டது என்பதை உலகம் அறியும். கிறித்தவ உலகம் கிட்டத்தட்ட எண்ணூறு வருடங்களுக்கு பிறகு வரலாற்றை நினைவில் வைத்து இஸ்லாமிய உலகத்தை பழி தீர்த்து கொண்டது. ஆனால் இஸ்லாமியர்கள் தங்களது வரலாற்று நாயகர்களை மறந்து விட்டது தான் வேதனை. இனி உள்ளே...

▼▼▼

## கி.பி.1151 (ஹிஜ்ரி 546)

*இந்த வருடம் டமாஸ்கசின் ஆட்சியாளர் முஜிருத்தீன் தனது நம்பிக்கைக்குரிய தோழர்களுடன் அலெப்போவிற்கு சென்றார். அங்கே அலெப்போவின் ஆட்சியாளர் நூருத்தீன் அவர்களை சந்தித்தார். அவர்களுக்கிடையே சில ஒப்பந்தங்கள் முடிவாகின. முஜிருத்தீன் அவர்கள் தன்னுடைய விசுவாதத்தை நூருத்தீன் அவர்களிடம் வெளிப்படுத்தினார். நூருத்தீன் அவர்களின் எண்ணப்படியே டமாஸ்கசில் நடந்து கொள்ளப் போவதாகவும் தெரிவித்தார். ரஜப் மாதம் 12ம் நாள் வந்த முஜிருத்தீன் அவர்கள் மிக சந்தோஷமாக ஷஃபான் 6ம் நாளில் தன் ஊருக்கு திரும்பினார்.*

### பனியா கோட்டை

*இதே வருடத்தில் சில துர்குகள் (துருக்கியர்கள்) பனியாஸ் கோட்டையை தாக்கினார்கள். அந்த கோட்டையை காப்பாற்றுவதற்காக பனியாஸ் கோட்டையை சேர்ந்த ஃபிரான்குகள் துர்குகளை எதிர்கொண்டார்கள். ஆனால் அது பலனளிக்க வில்லை. ஃபிரான்குகள் தோற்றுப்போனார்கள். அவர்களிடமிருந்த அனைத்தையும் துர்குகள் கவர்ந்து கொண்டார்கள்.*

*இந்த செய்தியை கேள்விப்பட்ட டமாஸ்கசின் ஆட்சியாளர் கடுங்கோபம் கொண்டார். ஏனெனில் பனியாஸ் கோட்டையில் இருந்த ஃபிரான்கு களுக்கும் டமாஸ்கசின் ஆட்சியாளருக்குமிடையே ஏற்கனவே ஓர் ஒப்பந்தம் நடப்பில் இருந்தது. அந்த ஒப்பந்தத்தின்படி அவர் சில படைவீரர்களை அனுப்பி துர்குகளை தாக்கி அவர்களிடமிருந்து அவர்கள் கைப்பற்றி இருந்ததை மீட்டார்.*

*ஆனால் அதற்கு முன்பாக துர்குகள் தாக்கிய செய்தியை கேள்விப்பட்ட மற்ற பகுதிகளை சேர்ந்த ஃபிரான்குகள் மிகப்பெரிய படை ஒன்றை*



பனியாஸ் கோட்டையின் தற்போதைய தோற்றம்

அனுப்பினர். அந்தப்படை குறிப்பிட்ட பகுதிகளை தாக்கியது. பலரை சிறை பிடித்தது.

இந்த சமயத்தில் நூருத்தீன் அவர்களின் நம்பிக்கைக்கும் மரியாதைக்கும் உரிய நஜ்முத்தீன் அய்யூபி (இவர் ஸலாஹூத்தீன் அய்யூபி அவர்களின் தந்தை. நூருத்தீன் அவர்களுக்கு முன்னால் அமர்ந்து பேசக்கூடிய தைரியமும் மதிப்பையும் பெற்றவர்) அவர்கள் பஃலாபக் என்ற இடத்தில் தங்கி இருந்தார். அவருக்கு இந்த செய்தி தெரிய வந்தவுடன் ஃபிரான்குகளுக்கு எதிராக தன்னுடைய மகன் ஷம்சுத்தவ்லாவை டமாஸ்கசில் உள்ள போர்வீரர்களுடனும் தன்னுடைய நண்பர்கள் சிலரின் வீரர்களுடனும் சென்று ஃபிரான்குகளை வென்று வருமாறு உத்தரவிட்டார். அதன் படியே ஷம்சுத் தவ்லா ஃபிரான்குகளுக்கு எதிராக போரை தொடங்கினார்.

அது பனிக்காலம் என்பதால் மிகக்கடுமையான பனி கொட்ட தொடங்கி இருந்தது. இது ஃபிரான்குகளுக்கு எதிராக இருந்தது. ஷம்சுத்தவ்லா இதை சரியாக பயன்படுத்திக் கொண்டார். ஏராளமான ஃபிரான்குகளை கொன்று ஃபிரான்குகளால் கைது செய்யப்பட்டவர்களை விடுவித்தார்.

## ஸலாஹூத்தீன் அய்யூபி அவர்களின் அறிமுகம்

இதே வருடத்தில் ஸலாஹூத்தீன் அவர்கள் தன் தந்தையை விட்டு பிரிந்து வந்து தன் மாமா அஸதுத்தீன் அவர்களுடன் அவருக்கு உதவும் பொருட்டு அவருடன் இணைந்து கொண்டார். அஸதுதீன் அவர்கள் ஸலாஹூத்தீனை நூருத்தீன் அவர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார். ஸலாஹூத்தீன் அவர்களின் திறமைகளைக் கண்ட நூருத்தீன் அவர்கள் அவருக்கு பல வெகுமானங்களை தந்து அவரை பாராட்டினார்.

## டமாஸ்கசை கைப்பற்றுதல்

கி.பி.1140இல் தன் தந்தை ஜமாலுத்தீன் முஹம்மத் அவர்களின் மறைவுக்கு பிறகு முஜிருத்தீன் டமாஸ்கசின் கவர்னராக ஆட்சியாளராக ஆனார். அப்போது அவர் சிறுவர். கி.பி.1150இல் அவரை டமாஸ்கசின் ஆட்சியாளராக நூருத்தீன் ஸங்கி அவர்கள் அங்கீகரித்தார்கள். ஆனால் கி.பி.1151இல் போஸ்ராவுக்கு எதிராக முஜிருத்தீன் சிலுவைப்படை வீரர்களுடன் ஃபிரான்குகளுடன் கூட்டு சேர்ந்து கொண்டார். இது நூருத்தீன் அவர்களை கோபப்படுத்தியது. பின்னர் முஜிருத்தீன் அலெப்போவிற்கு பயணம் செய்து நூருத்தீன் அவர்களை சந்தித்து தன்னுடைய விசுவாசத்தை வெளிப்படுத்தினார். பின்னர் சிலுவைப் படையினரின் கோட்டையான பனியா கோட்டையை நூருத்தீன் அவர்களின் படையினர் வெற்றி கொள்ள முஜிருத்தீன் உதவியாக இருந்தார்.

இதற்கிடையே ஃபிரான்குகள் (சிலுவைப் படையினர்) கடல் நகரமான அஷ்கலானை கைப்பற்றினர். அது மிக முக்கியமான நகரம். அழகான நகரம். சிலுவைப்படையினர் அதனை முற்றுகையிட்ட போது நூருத்தீன் ஸங்கி அவர்களால் அதனை தடுக்க இயலாமல் போனது. காரணம் அந்த இடத்தை அடைவதற்கு டமாஸ்கஸ் வழியாக செல்வதைத் தவிர வேறு வழியில்லை. ஆனால் அதன் வழியெங்கும் ஃபிரான்குகளை தாண்டி தான் செல்ல வேண்டியிருந்தது. முஜிருத்தீன் அவர்கள் நூருத்தீன் அவர்களுடன் விசுவாசமாக இருந்தாலும் அவர் ஃபிரான்குகளுடன் பல்வேறு ஒப்பந்தங்களை மேற்கொண்டிருந்ததன் காரணமாக அவர்கள் பாதையெங்கும் சுதந்திரமாக உலவிக் கொண்டிருந்தனர். அஷ்கலானை சிலுவைப் படையினர் வெற்றிக்கொண்டது அவர்களை எந்த அளவிற்கு பலப்படுத்தியது என்றால் அவர்கள் டமாஸ்கஸை வெற்றி கொண்டு விட்டோம் என்றும் எண்ணும் அளவிற்கு அவர்களை கர்வம் கொள்ள செய்தது.

சிலுவைப்படையினர் (ஃபிரான்குகள்) முஜிருத்தீனை ஒரு பொருட்டாகவே கருதவில்லை.

அவரை பலஹீனமானவராக கருதினார்கள். அவருடைய எல்லைக்குட்பட்ட இடங்களில் அவர்கள் தங்கள் அதிகாரத்தை செலுத்த ஆரம்பித்தார்கள். அவர்கள் முஸ்லிம்களின் மீது பல வரிகளை விதித்தார்கள். அதனை வசூல் செய்து தர தங்களுடைய தூதுவர்களை டமாஸ்கசுக்கு அனுப்பினார்கள். இது டமாஸ்கசின் பொதுமக்களுக்கு மிகுந்த கோபத்தை ஏற்படுத்தியது. அவர்கள் முஜிருத்தீனுக்கு எதிராக கிளர்ச்சி செய்து அவரை கோட்டையில் சிறைபிடித்தார்கள்.

இந்த நாட்களில் முஸ்லிம்கள் மிகவும் பயந்து போய் இருந்தார்கள். தங்களுடைய துன்பங்களை நீக்கும்படி இறைவனை தொடர்ந்து பிரார்த்தித்து வந்தார்கள். இறைவனும் அவர்களுடைய பிரார்த்தனைக்கு செவி சாய்த்தான். அவர்கள் மீது நீதியரசர் நூருத்தீன் ஸங்கி அவர்கள் ஆட்சி செலுத்தும்படி செய்தான்.

டமாஸ்கசை தன்னுடைய கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தாக வேண்டிய கட்டாயம் நூருத்தீன் ஸங்கி அவர்களுக்கு. அதனை வலுக்கட்டாயமாக தன்னுடைய கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தால் முஜிருத்தீன் அவர்கள் உடனடியாக சிலுவைப் படையினருடன் (ஃபிரான்குகளுடன்) கூட்டு சேர்ந்து தனக்கு எதிராக படை திரட்டுவார் என நூருத்தீனுக்கு தெரியும். சிலுவைப்படையினரும் இதைத் தான் விரும்பினர்.

ஏற்கனவே டமாஸ்கஸ் கைவசம் இல்லாத போது ஃபிரான்குகளின் கோட்டைகளை நூருத்தீன் ஸங்கி அவர்கள் தாக்கி இருந்தார். எனவே, இவரை பழி தீர்க்க இது தான் சரியான சந்தர்ப்பம். அவர் டமாஸ்கசை கைப்பற்றினால் முஸ்லிம்களைக் கொண்டே அவரை பழி தீர்த்து கொள்ளலாம். அதற்கு தேவையான உதவிகளை செய்தாலே போதும் என்பதே ஃபிரான்குகளின் திட்டம். மிகவும் சிக்கலான நிலைமை.

இது மட்டுமன்றி நூருத்தீன் ஸங்கி அவர்கள் எந்த காரணம் கொண்டும் முஸ்லிம்களிடையே சண்டை ஏற்பட்டு இரத்தம் சிந்தப்படக்கூடாது என்பதிலும் முஸ்லிம்களின் படை ஒருங்கிணைக்கப்பட்டு சிலுவைப்படையினருக்கு எதிராக நிறுத்தப்பட வேண்டும் என்பதிலும் கவனமாக இருந்தார். எனவே, அவர் சில தந்திரங்களை கையாள வேண்டி இருந்தது. எனவே, அவர் முஜிருத்தீனுடன் நல்லுறவை பேணினார். அவருக்கு பல்வேறு விஷயங்களில் விட்டுக் கொடுத்து சமாதானத்தை ஏற்படுத்திக் கொண்டார். இப்போது முஜிருத்தீன் நூருத்தீன் அவர்களை முழுமையாக நம்பினார். இப்போது இருவருக்கும் இடையே அடிக்கடி சந்திப்புகள் நிகழ்ந்தன.

அப்படிப்பட்ட சந்திப்புகளில் முஜிருத்தீனுக்கு கீழே இருந்த சில ஆளுனர்களை குறிப்பிட்டு அவர்கள் முஜிருத்தீனுக்கு எதிராக புரட்சி செய்யக்கூடும் என குறிப்பிட்டு நூருத்தீன்



அஷ்கலான் நகரின் தற்போதைய தோற்றம்

எச்சரித்தார். இதனை ஏற்றுக்கொண்ட முஜிருத்தீன் அவர்களிடமிருந்து அதிகாரத்தை பறித்துக் கொண்டார். அவர்களை கைது செய்யவும் செய்தார். இப்போது டமாஸ்கஸ் திறமையான அதிகாரிகள் ஆளுனர்களின் பிடியில் இருந்து விடுபட்டு விட்டது. நூருத்தீன் அவர்களுக்கு மிக முக்கியமான தடை கல்லாக இருந்த வீரரான அதா இப்னு ஹூப்பாசுஸ் ஸலமி அல் காதிம் என்பவரும் அவர்களில் ஒருவர். அவர் முஜிருத்தீனால் கொல்லப்பட்டார். இப்போது டமாஸ்கஸ் எந்த திறமையாளர்களுமின்றி தன்னந்தனியாக முஜிருத்தீனின் கீழ் இருந்தது.

டமாஸ்கசை தன்னுடைய கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர வேண்டும் என்ற நூருத்தீன் ஸங்கி அவர்களின் ஆவல் அதா அவர்களின் மரணத்திற்கு பின் எளிமையானது. இப்போது நூருத்தீன் அவர்கள் டமாஸ்கசை சேர்ந்த இளைஞர்களை தொடர்பு கொண்டு அவர்களுடன் நட்பை ஏற்படுத்திக் கொண்டார். டமாஸ்கசை நூருத்தீன் அவர்களிடம் ஒப்படைக்க அந்த இளைஞர்களும் ஒப்புக் கொண்டனர். இப்போது நூருத்தீன் அவர்கள் டமாஸ்கசை முற்றுகையிட்டார். பத்து நாட்கள் முற்றுகை நீடித்தது.

முஜிருத்தீன் தான் தனிமைப்பட்டு போனதை உணர்ந்தார். அவர் உடனடியாக சிலுவைப் படையினருக்கு செய்தி அனுப்பி உதவி கோரினார். டமாஸ்கசை விட்டு நூருத்தீனை அகற்றினால் அதற்கு பதிலாக மிகப்பெரிய அளவில் பொருளையும் பஃலாபக் கோட்டையையும் தருவதாக பேரம் பேசினார். இந்த சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்த சிலுவைப் படையினரும் இந்த பேரத்திற்கு ஆசைப்பட்டு தங்களுடைய படைகளை கிளப்பிக் கொண்டு வந்தனர்.

அங்கு வந்த பின்னர் தான் அவர்களுக்கு நிலைமை புரிந்தது. நூருத்தீன் ஸங்கி அவர்கள் யாரும் உள்ளே நுழையவோ வெளியே போகவோ முடியாத அளவிற்கு முற்றுகையிட்டிருந்தார். எனவே, தோல்வி முகத்துடன் வெறுங்கையுடன் திரும்பினர். நூருத்தீன் ஏற்கனவே பேசி வைத்திருந்த இளைஞர்கள் புரட்சி செய்து கிழக்கு நுழைவாயிலை திறந்து விட்டார்கள். அந்த நுழைவாயில் வழியாக நூருத்தீன் பாதுகாப்பாக உள்ளே நுழைந்தார். அவர் பின்னர் முஜிருத்தீன் இருந்த கோட்டையையும் முற்றுகையிட்டார். பின்னர் முஜிருத்தீன் வேறுவழியின்றி சரணடைந்தார்.

நூருத்தீன் அவர்கள் முஜிருத்தீனை மரியாதையுடன் நடத்தினார். அவருக்கு ஏகப்பட்ட பொருட்களை பரிசாக அளித்தார். கூடவே ஹிம்ஸ் பகுதியையும் அவருக்கு அளித்தார். இதன் பின்னர் முஜிருத்தீன் அதனை ஏற்று ஹிம்சுக்கு சென்றார்.

டமாஸ்கசை நூருத்தீன் கைப்பற்றியதன் பின்னர் தான் சிலுவைப்படையினருக்கு தலைவலி கூடுதலானது.

- இன்ஷா அல்லாஹ் வளரும்.


இறைவனின் அழகியத் திருப்பெயரால்

நியூ மலேஷியா டிராவல் சர்வீஸ்



பதிவு எண் : 2015/33/018/10098/ANSP
அரசு அங்கீகாரம் பெற்றது

உரிமை: S.B.S. பஷீர்

• பாஸ்போர்ட் ஆன்லைன்
• விமான டிக்கெட்
• விசா சர்வீஸ்
• ECNR & PCC
• எம்பஸி அட்டெஸ்டட்
• GCC மெடிக்கல் சர்வீஸ்

ECR நீக்கி ECNR மாற்றிட

கிளை அலுவலகம்:
12, கலைமகள் வீதி, MRF டயர்ஸ் பின்புறம்)
7வது குறுக்குத் தெரு,சுப்பையா நகர்,
பாஸ்போர்ட் அலுவலகம் அருகில்,
புதுச்சேரி - 605001.
செல்: 9894303789 | 9445907389

68, பெரிய கடை தெரு, பரங்கிப்பேட்டை,
கடலூர் மாவட்டம் - 608502
E mail ID: newmalaysiapno@gmail.com |Web : www.newmalaysiatravelservice.com

தொலைப்பேசி:
04144 243267
04144 243440

செல்:
7708803789
7708503789




# மகளிர் மன்றம்

# கவ்லா பின்த் தாலபா (ரலி)

அண்ணன் நபி(ஸல்) அவர்களின் உற்ற தோழர் உமர்(ரலி) அவர்கள். உலக வரலாற்றில் வனப்பான ஒரு பகுதி அவர்களுக்கு சொந்தம்.

இறைவனை அஞ்சி வாழ்வதில் தனது அந்தரங்க வாழ்வில் பல அதிசயமான அத்தியாயங்களை பதித்தவர்கள்.

பின்னர் இஸ்லாமிய சாம்ராஜ்யத்தின் ஆட்சியாளராக அமர்ந்து, அல்லாஹ்வை அஞ்சி வாழும் ஒரு ஆட்சியாளர் எப்படி இருக்க வேண்டும் என்பதை எடுத்துக் காட்டினார்கள்.

உலக வரலாற்றில் நல்ல நிர்வாகி என்பது நிரந்தர எடுத்துக்காட்டாய் திகழ்ந்து கொண்டிருப்பவர்கள்.

வரலாற்றில் இந்த உலகம் மணி நேரத்திற்கு எத்தனை கிலோமீட்டர் இஸ்லாமிய ஆட்சியின் கீழ் வந்தது என கணக்கு பார்க்க வைத்தவர்கள்.

கலீபா உமர்(ரலி) அவர்கள் ஒருமுறை மதினாவில் பள்ளிவாசலுக்கு வெளியே அல் ஜாருத் அல் அப்தி(ரலி) அவர்களுடன் கவ்லா பின்த் தாலபா(ரலி) என்ற பெண்மணியை

சந்தித்தார்கள். சலாம் சொன்னார்கள்.

அந்தப் பெண்மணி உமர்(ரலி) அவர்களை பார்த்து இப்படி கூறினார்கள்:

> ஓ உமரே! உங்களை எல்லோரும் உமைர் என்று அழைத்துக் கொண்டிருந்த நாள் முதலே நான் உங்களை அறிவேன். அப்போது கையில் ஒரு கம்போடு உகாத் என்றழைக்கப்படும் சந்தையின் பக்கம் ஆடு மேய்த்துக் கொண்டிருந்தார்கள்.
>
> ஆட்சியாளரின் பொறுப்பை நிறைவேற்று வதில் அல்லாஹ்வை பயந்து கொள்ளுங்கள். மறுமையின் வேதனை அறிந்த ஒருவர் அது வெகு தூரத்தில் இல்லை என்பதை அறிந்து கொள்வார்கள். மரணத்தை பயந்தவர்கள் இந்த உலக வாழ்க்கையில் சில வாய்ப்புகளை இழந்தவர்களைப் பற்றி அஞ்சுவார்கள் என்றார்கள்.

கலீபா உமர் அவர்கள் இதனை அமைதியாக செவிமடுத்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுடன் நின்று கொண்டிருந்த அல் ஜாருத் அல் அப்தி(ரலி) சற்று எரிச்சலுடன் நீங்கள் அமீருல் மூமினீன் இடம் (நம்பிக்கையாளர்களின் தலைவரிடம்) சற்று அதிகமாகவே பேசி விட்டீர்கள் என்றார்கள்.

தடுத்தார்கள் கலீபா உமர் அவர்கள். விடுங்கள் அவர்கள் நமக்கு நல்லுபதேசம் வழங்கட்டும். யார் இந்த கவ்லா(ரலி) என்பதை நீங்கள் அறிவீர்களா.

இந்தப் பெண்மணியின் சொற்களைத் தான் அல்லாஹ் ஏழு வானங்களுக்கும் மேல் இருந்து செவியுற்றான்.

அல்லாஹ்வின் பெயரால் இந்த சகோதரியின் சொற்களை செவிமடுத்து ஆகவேண்டும். என்று அந்த சகோதரிக்கு நன்றி சொல்வதைப்போல் சொன்னார்கள்.

இப்படி கலீபா உமர்(ரலி) அவர்கள் அச்சத்தோடும், அடக்கத்தோடும் கண்ணியப் படுத்திய அந்த சகோதரியின் வரலாறு இதோ;

கவ்லா பின்த் தாலபா(ரலி) அவர்கள் அவ்ஸ் இப்னு சாமித்(ரலி) அவர்களை மணந்து இருந்தார்கள்.

ஒரு நாள் அவ்ஸ் இப்னு ஸாமித் அவர்கள் கவ்லா பின்த் தாலபாவை(ரழி) "நீ எனக்கு என் தாயைப்போல்" என சொல்லிவிட்டார்கள்.

இப்படி மனைவியை என் தாயைப் போல் என சொல்வது அஞ்ஞான காலத்து பழக்கவழக்கங்களில் ஒன்று.

இது மனைவியை மணவிலக்கு செய்யும் ஒரு விதம். இப்படி மனைவியை விவாகரத்து செய்துவிட்டால் அந்த மனைவிக்கு எந்த வழியும் இல்லை என்றாகிவிடும்.

அவள் கணவனின் வீட்டை விட்டு வெளியே வரவும் இயலாது. கணவரிடம் எந்த உரிமையையும் பெற்றிட இயலாது. அந்த மனைவியை பராமரிக்கும் பொறுப்பும் கணவனுக்கு இல்லை. அவளோடு உடலுறவு கொள்ளவும் மாட்டார். அந்தப் பெண்மணியை மறுமணம் செய்து கொள்ளவும் விடமாட்டார். அவர்களுக்கு பிறந்த குழந்தைகளை பராமரிப்பது இல்லை.

இத்தனை கொடுமைகள் நிறைந்த அஞ்ஞான காலத்து சொற்களை இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட நிலையிலும் கவ்லா பின்த் தாலாபா(ரலி) அவர்களை நோக்கி அவர்களுடைய கணவர் அவுஸ் இப்னு சாமித் அவர்கள் சொல்லிவிட்டார்கள். பின்னர் உறவு கொள்ள முயற்சித்தார்.

ஆனால் கவ்லா பின்த் தாலாபா(ரலி) அவர்கள் மறுத்து விட்டார்கள். செய்தியை எடுத்துக் கொண்டு பெருமானார்(ஸல்) அவர்களிடம் புறப்பட்டார்கள்.

தன்னை மறைத்துக் கொள்ள போதிய ஆடை இல்லாததால் தன்னுடைய அண்டை வீட்டாரிடம் ஒரு முக்காடு வாங்கி தன்னைப் போர்த்திக் கொண்டு சென்றார்கள்.

அல்லாஹ்வின் தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் இப்படிப் பதில் சொன்னார்கள்;

> கவ்லா அவர்களே உங்கள் கணவர் சற்று வயதானவர். அவர் விஷயத்தில் அல்லாஹ்வை பயந்து கொள்ளுங்கள்.

ஆனால் கவ்லா(ரலி) அவர்கள் அல்லாஹ்விடம் பிரார்த்தித்தவர்களாக இருந்தார்கள்.

அவர்கள் பெருமானாரின் திரு சமூகம் விட்டு வரவில்லை. அல்லாஹ் தன்னுடைய வழிகாட்டுதலை இறக்கியருளினான்.

உடனேயே பெருமானார்(ஸல்) அவர்கள் இப்படி சொன்னார்கள்;

"ஓ கவ்லா! அல்லாஹ் உங்களுக்கும், உங்கள் இறைவனுக்கும் இடையே உள்ள விவகாரத்தில் வழிகாட்டி விட்டான்."

அத்தோடு பின்வரும் இறை வசனங்களை ஓதிக் காண்பித்தார்கள்.

(நபியே!) எவள் தன் கணவனைப் பற்றி உம்மிடம் தர்க்கித்து, அல்லாஹ்விடமும் முறையிட்டுக் கொண்டாளோ, அவளுடைய வார்த்தையை நிச்சயமாக அல்லாஹ் செவியேற்றுக் கொண்டான் - மேலும், அல்லாஹ் உங்களிருவரின் வாக்குவாதத்தையும் செவியேற்றான். நிச்சயமாக அல்லாஹ் (யாவற்றையும்) செவியேற்பவன்; (எல்லாவற்றையும்) பார்ப்பவன்.

"உங்களில் சிலர் தம் மனைவியரைத் "தாய்கள்" எனக் கூறிவிடுகின்றனர்; அதனால் அவர்கள் இவர்களுடைய தாய்கள்" (ஆகிவிடுவது) இல்லை; இவர்களைப் பெற்றெடுத்தவர்கள் தாம் இவர்களுடைய தாய்கள் ஆவார்கள் - எனினும், நிச்சயமாக இவர்கள் சொல்லில் வெறுக்கத் தக்கதையும், பொய்யானதையுமே கூறுகிறார்கள் - ஆனால் நிச்சயமாக அல்லாஹ் மிகவும் பொறுப்பவன்; மிகவும் மன்னிப்பவன்.

மேலும் எவர் தம் மனைவியரைத் தாய்களெனக் கூறிய பின் (வருந்தித்) தாம் கூறியதை விட்டும் திரும்பி (மீண்டும் தாம்பத்திய வாழ்வை நாடி)னால், அவ்விருவரும் ஒருவரை ஒருவர் தீண்டுவதற்கு முன்னர் ஓர் அடிமையை விடுவிக்க வேண்டும். அதனைக் கொண்டே நீங்கள் உபதேசிக்கப்படுகிறீர்கள் - மேலும், அல்லாஹ், நீங்கள் செய்பவற்றை நன்கறிபவனாக இருக்கின்றான்.

ஆனால் (அடிமையை விடுதலை செய்ய வசதி) எவர் பெறவில்லையோ, அவர், அவ்விருவரும் ஒருவரை ஒருவர் தீண்டுவதற்கு முன் இரண்டு மாதங்கள் தொடர்ச்சியாக நோன்பு நோற்க வேண்டும்; எவர் இதற்கும் சக்தி பெறவில்லையோ, அவர் அறுபது ஏழைகளுக்கு உணவு அளித்தல் - வேண்டும்; நீங்கள் அல்லாஹ்வின் மீதும் அவனுடைய தூதர் மீதும் விசுவாசம் கொள்வதற்காக (இவ்வாறு கட்டளையிடப்பட்டுள்ளது). மேலும் இவை அல்லாஹ் விதிக்கும் வரம்புகளாகும்; அன்றியும், காஃபிர்களுக்கு நோவினை செய்யும் வேதனை உண்டு.

*(அல்குர்ஆன் : 58: 1 - 4)*

இப்படிப் பெண்கள் அல்லாஹ்வின் சிறப்பு கவனத்தைப் பெற்று பெருமைப்பட்டார்கள். அதனால் அத்தனை முஸ்லிம்களின் மனதிலும் மன்றத்திலும் அவர்கள் பெருமைப்படுத்தப் பட்டார்கள்.


ஆதலால்தான் கலீபா உமர்(ரலி) அவர்கள் அந்த பெண்மணியின் சொற்களையும், அந்த பெண்மணியையும் கண்ணியப்படுத்தினார். அந்த சொற்களை ஏளனமாக பார்க்கவில்லை.

அந்தப் பெண்களாக நீங்கள் மாறினால் அல்லாஹ்வின் சிறப்புக்குரிய அன்புக் குரியவர்கள் ஆகலாம்.

**- எம்.ஜி.எம்.**

**வேர்கள் வெளியீட்டகம்**
**8148129887**
**8248208144**
52/1, மண்ணடி தெரு,
மண்ணடி,
சென்னை - 600001.






# வேர்கள் பதிப்பகத்தின் நூல்கள்

1. சிறையில் எனது நாட்கள் –
ஜெய்னப் அல் கஸ்ஸாலி, தமிழில் – மு. குலாம் முஹம்மத் – பக்கம் : 212 ரூ. 90.00
2. ஆஃப்கானிஸ்தான் முஜாஹித்களின் தியாக வரலாறு – மு. குலாம் முஹம்மது ரூ. 100.00
3. சாதி ஒழிந்தது – டி.எம். மணி, ஐந்தாம் பதிப்பு – பக்கம் 132 ரூ. 50.00
4. End of Casteism T.M. Mani பக்கம் -134 ரூ. 50.00
5. அஹமதாபாத் குண்டுவெடிப்புகள் – மு. குலாம் முஹம்மது, பக்கம் -48 ரூ. 10.00
6. டெல்லி குண்டுவெடிப்புகள் – மு. குலாம் முஹம்மது, பக்கம் – 48 ரூ. 10.00
7. நாடாளுமன்ற தாக்குதல் வெளிச்சத்திற்கு வந்த உண்மைகள் – விரிவாக்கப்பட்ட பதிப்பு
– மு. குலாம் முஹம்மத் ரூ. 60.00
8. மால்கம் X – மு. குலாம் முஹம்மது, பக்கம் -231 ரூ. 80.00
9. தீண்டாமையை கற்பிக்கும் கடவுளை மாற்றுவோம், டி.எம். மணி, பக்கம் -31 ரூ. 20.00
10. செந்தமிழ்நாட்டுச் சேரிகள்- டி.எம். மணி, பக்கம்:94 ரூ. 40.00
11. கர்கரேயை கொலை செய்தது யார்? பக்கம் 453 ரூ. 250.00
12. சிந்திப்பீர் செயல்படுவீர், நா. கோதண்டபாணி, பக்கம் 47 ரூ. 15.00
13. ஒரு நீதிபதியின் விடுதலை முழக்கம், ப. கோபால கிருஷ்ணன், பக்கம்-84 ரூ. 40.00
14. சாதி ஒழிந்தது- ஹிந்தி – டி.எம். மணி, பக்கம் – 148 ரூ. 50.00
15. நாம் பிரிந்து விடவேண்டாம், பேராசிரியர் கா.மு. இல்யாஸ் ரியாஜி, பக்கம்-292 ரூ. 175.00
16. தாலிபானின் பிடியில், மு. குலாம் முஹம்மத், பக்கம் – 202 ரூ. 110.00
17. தீண்டாமைக்குத் தீர்வு ரூ. 30.00
18. பாலஸ்தீன முஸ்லிம்கள் அகதிகளான வரலாறு, மு. குலாம் முஹம்மத் பக்கம்-163 ரூ. 110.00
19. பாபரி மஸ்ஜித் அடிப்படை தகவல்கள், மு. குலாம் மஹம்மத், பக்கம் -143 ரூ. 90.00
20. இஸ்லாமிய நாகரிகம் –
முஸ்தஃபா அல் சிபாய், தமிழில் : மு. குலாம் முஹம்மத், பக்கம் – 206 ரூ. 130.00
21. கஷ்மீரின் பாதி விதவைகள், மு. குலாம் முஹம்மத், பக்கம் – 140 ரூ. 70.00
22. எது முதலில்? டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவீ, தமிழில் கா.மு. இல்யாஸ் ரியாஜி ரூ. 50.00
23. சாதி ஒழிந்தது – கன்னடம், ரூ. 50.00
24. அண்ணல் அம்பேத்கரின் மதமாற்றம் பின்னணி என்ன? டி.எம். உமர் ஃபாரூக் ரூ. 20.00
25. கசாப்-ஐ இரகசியமாகத் தூக்கிலிட்டது ஏன்? மு. குலாம் முஹம்மத் பக்கம்:48 ரூ. 30.00
26. முஹம்மத் (ஸல்) அவர்கள் ஒரு சகாப்தம் –
செய்யித் குதுப், தமிழில் : மு. குலாம் முஹம்மத், பக்கம் 30 ரூ. 15.00
27. இஸ்லாமும் இதர பொருளாதார கொள்கைகளும், பக்கம் – 120 ரூ. 50.00
28. இஸ்லாம் வழங்கும் தண்டனைகள் ரூ. 40.00
29. இஸ்லாமும் விஞ்ஞானமும்- பக்கம் :48 ரூ. 30.00
30. இஸ்லாம் அடிமைத்தனத்தை அங்கீகரித்ததா? ரூ. 50.00
31. இஸ்லாமும் பெண்களும் – பக்கம் : 112 ரூ. 60.00
32. இஸ்லாம் இன்றைய கொள்கைகளை வெல்லுமா? பக்கம் : 84 ரூ. 70.00
33. தேசப்பிரிவினைக்கு யார் காரணம்? – விரிவாக்கப்பட்ட பதிப்பு – மு. குலாம் முஹம்மத் ரூ. 30.00
34. திருக்குர் ஆன் கூறும் பொறுமை –
டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவி, தமிழில் : கா.மு. இல்யாஸ் ரியாஜி ரூ. 80.00
35. 26/11 – விசாரணை – நீதித்துறையும் மயங்கியது ஏன்? ரூ. 220.00
36. ஒரு தலித் போராளியின் வாழ்வும், அவர் காட்டிய வழியும் – அ. மார்க்ஸ் ரூ. 20.00

| | | |
|---|---|---|
| 37. | முஸ்லிம்களை பூண்டோடு ஒழிக்கத் திட்டம்– வி.டி. இராஜசேகர், தமிழில் : மு. குலாம் முஹம்மத் – பக்கம் : 16 | ரூ. 10.00 |
| 38. | நாடார் பெருங்குடியினர் ஏன் மதம் மாறினார்கள்? – திரு. லஜபதிராய், மூத்த வழக்கறிஞர் – பக்கம் :8 | ரூ. 10.00 |
| 39. | குண்டு வெடிப்புகள், யாரால், யாரால்? – சுவாமி அசிமானந்தாவின் ஒப்புதல் வாக்குமூலம் – அபூ. அஃப்ரஹ் – பக்கம் : 36 | ரூ. 25.00 |
| 40. | இந்து ராஷ்டிராவின் சிற்பி புரோகித்–இன் லேப்டாப்பில் இருந்ததென்ன? பக்கம்: 27 | ரூ. 20.00 |
| 41. | கறுப்பாயி என்கின்ற நூர்ஜஹான். கதை ஆசிரியர் அன்வர் பாலசிங்கத்துடன் நேர்முகம் | ரூ.25.00 |
| 42. | கூரியூர் ஜின்னா ஷஹீத் – மு. குலாம் முஹம்மத், பக்கம் : 84 | ரூ. 60.00 |
| 43. | முஸ்லிம்களும் ஒடுக்கப்பட்டோரும், பக்கம் 16 | ரூ. 20.00 |
| 44. | இந்தியாவின் ஒரே தீவிரவாத அமைப்பு, எஸ்.எம். முஷ்ரிப், IPS, பக்கம் : 64 | ரூ. 30.00 |
| 45. | சுதந்திர இந்தியாவின் முதல் தீவிரவாதம், காந்திஜி கொலை ஏன்? எப்படி? பக்கம் : 40 | ரூ. 30.00 |

## எமது விற்பனையில். . .

| | | |
|---|---|---|
| 01. | கோவை கலவரத்தில் எனது சாட்சியம்– A.V. அப்துல் நாசர், Ex. M.L.A., எழுத்தாக்கம் : பழனி ஷஹான் | ரூ. 100.00 |
| 02. | மரிஜாப்பி – சி.பி.எம். அரசின் தலீத் படுகொலைகள்– ராஸ் மாலிக், தமிழில் : இனியன் இளங்கோ, தலித் முரசு | ரூ. 100.00 |
| 03. | குஜராத் கோப்புகள் – மறைக்கப்பட்ட கோர வடிவங்கள் – ரானா அயூப், தமிழில் : ச. வீரமணி, பாரதி புத்தகாலயம் | ரூ. 170.00 |

## BOOKS IN ENGLISH

| | | |
|---|---|---|
| 01. | END OF CASTEISM - T.M. Umar Farooq, English Rendering : M. Gulam Mohammed, Vergal Pathippagam | Rs. 50.00 |
| 02. | THE GREAT BETRAYAL - Elyass Davidson, By Pharos Media | Rs. 695.00 |
| 03. | MUHAMMED THE PROPHET FOR OUR TIME - Karen Armstrong | Rs. 325.00 |
| 04. | KAFKA LAND - PREJUDICE, LAW AND COUNTER TERRORISM - Manisha Sethi | Rs. 350.00 |
| 05. | WHO KILLED KARKARE - The Real face of Terrorism in India - S.M. Mushrif, IPS, 5th Edition | Rs. 300.00 |
| 06. | 26/11 - PROBE WAY JUDICIARY ALSO FAILED - S.M. Mushrif | Rs. 275.00 |
| 07. | ASSAM'S DOUBTFUL CITIZENS, FACT OR FICTION - Kamaluddin Ahamed | Rs. 60.00 |
| 08. | MUSLIMS AGAINST PARTITION OF INDIA - Shamsul Islam , Pharos Media | Rs. 280.00 |
| 09. | PANDID RAMPRASAD BISMI, ASHFAQULLAH KHAN (EPITOMS OF HINDU MUSLIM UNITY) - Syed Naseer Ahamed | Rs. 25.00 |
| 10. | IMAGE AND SUBSTANCE - MODI'S FIRST YEAR OF OFFICE - Nilofar Suhrawardy | Rs. 150.00 |

## BOOKS IN HINDI - VERGAL PATHIPPAGAM

01. ஜாதி ஒழிந்தது

## BOOKS IN KANNADA - VERGAL PATHIPPAGAM

| | | |
|---|---|---|
| 01. | ஜாதி ஒழிந்தது – டி.எம். உமர் பாரூக் | ரூ. 50.00 |
| 02. | நீயும் புறப்படு இஸ்லாத்தை நோக்கி – கொடிக்கால் ஷேஹ் அப்துல்லாஹ் | ரூ. 30.00 |

## வேர்கள் பதிப்பகம்,

52/1, மண்ணடி தெரு, மண்ணடி, சென்னை – 600 001. தொடர்ப்புக்கு : 8148129887

வங்கி மூலம் பணம் செலுத்த விரும்புவோர்:
**DARUL ISLAM FOUNDATION TRUST,**
**CANARA BANK** Account 1287101017301
St. Mary's Road, R.A. Puram, Chennai - 600 028

Email : darultrust@yahoo.com; Website : www.darulislam.in

Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1 Mannady street, Mannady, Chennai - 600001. Editor **M. Gulam Mohamed.** Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFFSET PRINTERS,** 19/1, 21,2, Kitabath Khan Bhadur Street, chennai - 600 002